சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஏப்ரல் 30 - 06, 2014 பக்கம் - 24 30/-

இன்னும் இருட்டுக்குள்...

1717 FOLLOW US www.mobitel.lk

பரிசுகளை அள்ளிச் செல்ல mTunes இன்றே இணையுங்கள்

அழையுங்கள் 777

உங்களுக்கு விருப்பமான mTunes களை அதிகமாக பதிவிறக்கம் செய்து அதிக வெற்றி வாய்ப்புகளைப் பெறுங்கள்

புதிய MICRO PANDA CROSS

PANDA CROSS

அதிகமாக பதிவிறக்கம் செய்து அதிக வெற்றி வாய்ப்புகளை பெறுங்கள்

பரிசை பிரகாசமாக ஓட்டிச் செல்லுங்கள்!

Sri Lanka Telecom Mobitel

உங்களுடனே எமது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

ஒருநாளில் உயர்ந்தவன்

ஒரே பிடியெடுப்பில் ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகையும் தன் பக்கம் பார்க்க வைத்துவிட்டார் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் வீரர் கிறிஸ் லின்.

ஐ.பி.எல். தொடரில் மிக இக்கட்டான நிலையில் போட்டி. கடைசி ஓவர். பெங்களூர் அணியின் வெற்றிக்கு இன்னும் 9 ஓட்டங்களே தேவை. களத்தில் அதிரடிவீரர் டிவில்லியர்ஸ் நிற்பதனால், 6 பந்துகளில் வெறும் 9 ஓட்டங்களை எடுப்பதென்பது பெங்களூர் அணிக்கு பெரிய வேலையல்ல. தருணம் பார்த்து தான் எதிர்கொண்ட பந்தை ஓங்கி அடிக்கிறார் டிவில்லியர்ஸ். அது எல்லைக்கோட்டைத்தாண்டி சிக்ஸராகும் வேகத்தோடு பறக்கிறது. அப்போது அந்தப்பந்தை பிடியெடுக்க லின் ஓடி வருகிறார். ஆனால் அப்படி ஓடி வரும் போதே சறுக்கி வீழ்ந்து விடுகிறார். இருப்பினும் பிடியெடுப்பை விட்டாலும் பந்து எல்லைக்கோட்டைத் தொடக்கூடாது என்னும் வேகத்தோடு உடலை வில்லாக வளைத்து எம்பிப் பாய்கிறார். பந்து கைகளுக்குள். அப்படியே உடலை நெளித்துச் சுளித்து எல்லையில் முட்டாதவாறு வீழ்கிறார். எங்கும், ஆரவாரம். அப்போதுதான் லின்னுக்கு தான் பிடியெடுப்பை செய்த விடய தெரிய வந்தது. சிக்ஸருக்கு அனுப்பிய பந்து இப்படி எதிர்பாராதவிதமாகச் சிக்கிக் கொண்டதால் டிவில்லியர்ஸ் நடையைக் கட்ட , 2 ஓட்டங்களால் பெங்களூர் அணி தோற்றுப்போனது. இப்படி ஒரேயொரு பிடியெடுப்பின் மூலம் ஆட்டத்தையே மாற்றி அன்றைய நாயகனாகி விட்டார் லின்.

ஆஸ்திரேலிய வீரரான கிறிஸ் லின், இதுவரை பெரிதாக அறியப்பட்டிராதவர். அத்துடன் ஐ.பி.எல். தொடரில் இம்முறை அவரை எவரும் விலைக்கு வாங்கவில்லை. விலைபோகாத லின்னை போனால் போகட்டுமென்று வாங்கியது நைட்ரைடர்ஸ். அதற்கு நன்றிக் கடனாக பெங்களூர் அணிக்கெதிரான போட்டியில் 45 ஓட்டங்களைக் குவித்ததுடன் , ஐ.பி.எல். வரலாற்றிலேயே மிகச் சிறந்த பிடியெடுப்பையும் மேற்கொண்டு ஒரேநாளில் பிரபலமடைந்துவிட்டார் லின். அவரின் பிடியெடுப்புக் காட்சியை இதுவரை யூரியுப்பில் பல மில்லியன் பேர் பார்த்துள்ளனர். இதனால் அடுத்த முறை லின்னை ஏலத்தில் எடுக்க பலத்த போட்டி இருக்கப்போகின்றது.

அரசியலில் ஆசை

எப்படி ரென்னிஸ் அர்ப்பணிப்போடும் நேர்மையோடும் செயற்பட்டேனோ அதேபோன்று அரசியலில் பங்கு பற்றி தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வந்தால், மக்களுக்குச் சேவை செய்யத்தயாராகவே உள்ளேன்," இவ்வாறு ரென்னிஸ் வீரர் பயஸ் தெரிவித்தார்.

இந்திய அணியின் அனுபவ ரென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ். ஆண்கள் இரட்டையர், கலப்பு இரட்டையர் பிரிவில் மொத்தம் 14 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். சமீபத்தில்தான் பத்ம பூஷண் விருது பெற்றார்.

பூபதி காரணம்:

கடந்த லண்டன் (2012) ஒலிம்பிக் போட்டியில் பயஸ்டன் சேர்ந்து விளையாட இந்தியாவின் பூபதி, போபண்ணா மறுத்தனர். இதையடுத்து இளம் வீரர் விஷ்ணுவர்தனுடன் பயஸ் ஜோடி சேர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால், இந்தியாவுக்கு பதக்க வாய்ப்பு நழுவியது. இது குறித்து பயஸ் கூறியது:

லண்டன் ஒலிம்பிக்கில் என்னுடன் சேர்ந்து விளையாட பூபதி மறுத்தது, மிகுந்த மனவேதனை அளித்தது. இதனால் எனக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே பதக்கம் கிடைக்க வேண்டிய வாய்ப்பு பறிபோனது. எதிர் காலத்தில் பூபதியுடன் சேர்ந்து போட்டிகளில் பங்கேற்க மாட்டேன்.

என் முக்கிய இலக்கான ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக்கில் (2016ஆம் ஆண்டு) பதக்கம் வெல்வேன். தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வந்தால், மக்களை சந்திக்க தயாராக உள்ளேன். ஒரு இந்திய வீரராகவும் மனிதனாகவும் டென்னிஸ் களத்தில் உயர்ந்த தரத்துடன் செயற்பட்டிருக்கிறேன். ஒருவேளை அரசியலில் சேர்ந்தால் இதே முறையை பின்பற்றுவேன்" என்றார்.

தற்காலிகப் பயிற்சியாளர்

இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மார்வன் அத்தப்பத்து தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக கடைமையாற்றிய போல் பர்ரகாஸ் தனது நாட்டு அணியான இங்கிலாந்து அணியுடன் இணைந்து கொண்டதை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மார்வன் அத்தப்பத்து நியமிக்கப்பாட்டர். இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் நியமனம் தொடர்பாக இலங்கை கிரிக்கெட், தெரிவுக்குழு தலைவர் சனத் ஜெயசூரியா, கிரிக்கெட் குழுத் தலைவர் ரஞ்சித் பெர்னாண்டோ, பயிற்றுவிப்பளர்கள் தலைவர் ஜெரோம் ஜெயரட்ன ஆகியோர் கொண்ட குழுவை நியமித்தது.

இந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே மார்வன் அத்தப்பத்து நியமிக்கப்பாட்டர். இங்கிலாந்து தொடருக்கும், இலங்கையில் நடைபெறவிருக்கும் தென்னாபிரிக்கா அணியுடனான தொடருக்கும் அத்தப்பத்து பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உதவி பயிற்றுவிப்பாளராக சுழல்ப் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர் ருவான் கல்பகே நியமிக்கப்பட்டுள்ளார்.

மும்பையோடு பொன்டிங்

கடந்த ஐபிஎல் போட்டியில் மும்பை அணியின் தலைவராக சில ஆட்டங்களில் செயற்பட்டவர் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொன்டிங். சம்பியன் பட்டம் வென்ற மும்பை அணியில் இடம்பெற்றிருந்த அவர் தற்போதைய தொடரில் மும்பைஅணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆஸ்திரேலிய அணிக்கு 2 உலகக் கிண்ணங்களைப் பெற்றுத் தந்த ரிக்கி பொன்டிங் இந்தப்புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அத்தோடு, உடனடியாக அவர் டுபாய்க்குப் பயணப்பட்டார். ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற டெல்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் அவர் மும்பை அணியின் ஆலோசகராக செயற்பட்டார்.

இந்த பொறுப்பு குறித்து பொன்டிங் கூறுகையில் "மீண்டும் மும்பை அணியுடன் இணைந்து பணியாற்றுவதை ஆர்வத்துடன் எதிர்நோக்கி உள்ளேன். கடந்த தொடரின்போது வீரர்கள் அணி மீது எவ்வளவு பற்று வைத்துள்ளனர் என்பதைப் பார்த்தேன். இன்னும் எங்களிடம் வெற்றிக்கான வெறி உள்ளது. முடிந்தவரை கடினமாகப் போராட முயற்சிப்போம்" என்றார்.



இந்த முறை கொல்கத்தா அணித்தலைவர் காம்பீருக்கு காலம் சரியில்லைப்போலும். முதல் 4 போட்டிகளிலும் அவர் போன வேகத்திலேயே களத்தைவிட்டு வெளியேற்றப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் தமது அணிக்கெதிரான போட்டியில் காம்பீரை எப்படி வீழ்த்தினோம் என்ற ரகசியத்தை பஞ்சாப் அணி வீரர் மிச்செல் ஜோன்ஸன் போட்டுடைத்திருக்கிறார்.

"நாங்கள் தென்னாப்பிரிக்க சுற்றுப் பயணம் சென்றிருந்தபோது 7ஆவது ஐ.பி.எல். ஏலம் நடைபெற்றது. அதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். ஏலம் முடிந்ததும் பஞ்சாப் அணியில் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு இரண்டும் சமமாக இருப்பதாகத் தெரிவித்தேன். அதன்படியே நாங்கள் வெற்றி மேல் வெற்றி பெற்று வருகிறோம். காயம் காரணமாக முதல் சில ஆட்டங்களில் சிறப்பாகச் செயற்பட முடியவில்லை. இப்போது மீண்டும் பழைய ஆட்டத்திறனுக்குத் திரும்பியது மகிழ்ச்சி. எப்போதுமே கௌதம் கம்பீருக்கு எதிராக அனுபவித்து பந்து வீசுவேன். பந்தை அவரிடம் இருந்து லேசாக தள்ளி வீசினால், எளிதில் கம்பீரின் இலக்கை வீழ்த்தி விடலாம். அப்படித்தான் இந்த முறையும் வீழ்த்தினோம்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே காவிதான்

பொலிஸும் பொதுபலசேனாவும்

இலங்கையின் அரசியலமைப்பின் பதின் மூன்றாவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் மாகாண சபைகளுக்கு அந்த அதிகாரங்களை எக்காரணம் கொண்டும் தான் வழங்கப்போவ தில்லை மீண்டும் மீண்டும் பல முறை திட்ட வட்டமாகத் தெரிவித்து வருகிறார். எனினும் அண்மைக் காலங்களில் பொலிஸ் அதிகாரம் வேறு சில பிரிவினருக்கு வழங்கப்பட்டு விட்டதா என்ற பலத்த சந்தேகம் எழும் நிலை தோன்றியுள்ளது.

கடந்த வாரம் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியூதினின் அமைச்சரவைச் செயலகத்துக்குள் அத்துமீறிப் புகுந்த கலகொட அத்தே ஞான சார தேரர் தலைமையிலான பொதுபலசேனா அமைப்பைச் சேர்ந்த பிக்குகள் அங்கு பெரும் தேடுதல் வேட்டையை நடத்தியுள்ளனர். அங்கு ஜாதிகபல சேனாவின் தலைவரும், மஹியங் கனை உறுப்பினருமான வஜிரதேர் மறைத்து



வைக்கப்பட்டிருப்பதாகவும் அவரைப் பிடிக் கவே இந்தத் தேடுதல் நடத்தப்படுவதாகவும் அவர்களால் கூறப்பட்டுள்ளது. ஒரு அமைச் சரவைக் காரியாலத்துக்கு வழங்கப்படும் பாது காப்பு எவ்வளவு பலமானது என்பதை எல் லோரும் அறிவர். அத்தகைய அமைச்சுச் செய லகம் ஒன்றுக்குள் பொதுபல சேனாவின் பிக்கு கள் அடாவடித்தனமாக உள்ளே நுழைய முற் பட்ட போது அங்கு கடமையிலிருந்த பாது காப்பு அதிகாரிகள் தடுத்துள்ளனர். ஆனால் -பிக்குகளுக்கு எங்கு செல்லவும் அனுமதி உண்டு- எனக் கூறி பொதுபல சேனாவினர் உட்புகுந் தனர். அங்கு பணியாற்றிய அதிகாரிகள் தடுக்க முயன்ற போதும், அவர்களை மிரட்டி விட்டு ஒவ்வொரு அறையாக மூன்றரை மணி நேரம் வஜிர தேரரை அவர்கள் தேடியுள்ளனர். அது மட்டுமன்றி அங்குள்ள வி. சி. ரி. வி கமராக்களில் பதியப்பட்டுள்ள காட்சிகளை சோதனை செய்து வஜிர தேரர் அங்கு வந்துள்ளாரா என் றும் கண்டுபிடிக்க முயன்றுள்ளனர். அமைச்சின் செயலாளர், பிரதியமைச்சர் ஆகியோர் பேச்சுக் களை நடத்தி அவர்களைத் தடுக்க முயன்ற போது அதுவும் பயனளிக்கவில்லை.

ஒரு அமைச்சரின் செயலகம் நாட்டின் நிர் வாகத்தில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எல்லோருமே அறிவார்கள். அது மட்டுமன்றி நாடாளுமன்ற உறுப்பினர்களுக் கெனச் சில சிறப்புரிமைகளும் உண்டு. அவற்றையெல்லாம் மீறி ஒரு குழுவினர் அமைச்சுக் காரியாலயத்துக்குள் புகுந்து மூன்றரை மணி நேரம் அதைத் தமது கட் டுப்பாட்டில் வைத்திருந்துள்ளனர். இதன் மூலம் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு எவ் வளவு தூரம் சீர்கெட்டுப் போயுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

பொதுபல சேனாவினர் மூன்றரை மணி நேரம் அங்கிருந்து தேடுதல் நடத்திய போதும் பொலிஸார் தலையிட்டு அவர்களை வெளியேற்ற முயற்சிக்கவில்லை. சாதாரணமாக ஒரு சிறு சம்பவம் இடம் பெற்றாலும் கண் ணீர்ப் புகைப்பிரயோகம், குண்டாந்தடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் என சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவது என்ற பேரில் வன்முறைகளில் ஈடுபடும் பொலிஸார் இந்த விடயத்தில் தலையிடாக் கொள்கை யைத் கைக்கொண்டுள்ளார்கள். கடைசி நேரத் தில் அங்கு வந்த பொலிஸார் கூட அவர்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்க முற்படவில்லை. மாறாக கொதித்துக்கொண்டிருந்த பொது பலசேனாவை சமாதானப்படுத்துவதிலேயே பொலிஸார் குறியாக இருந்தார்கள்.

சில விசேட சந்தர்ப்பங்களைத் தவிர - குறிப் பாக பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சம் பவங்கள் தொடர்பான விடயங்கள் தவிர - வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு தனி நபரின் இடத்திற்குள் அனுமதியின்றி உட்பு குந்து சோதனையிட முடியாது.

ஆனால் பொதுபலசேனாவினர் ரிஷாத்தின் அமைச்சுச் செயலகத்துக்குள் புகுந்து ஒரு தனி நபரை மூன்றரை மணி நேரம் தேடியுள்ளனர். 'ட்ரேஸ் பாஸ்' எனச் சொல்லப்படும் அத்து மீறி நுழைந்த குற்றத்தைச் செய்த பொதுபல சேனாவினர் அந்த இடத்திலேயே சட்டப்படி கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் மீது குண்டாந்தடிப் பிரயோகமோ, கண்ணீர்ப்புகை பாவனையோ மேற் கொள்ளப் படவில்லை. அவர்கள் மிகவும் சுதந்திர மான முறையில் தேடுதல் நடத்தியுள் ளனர்.

எனவே தான் பொதுபலசேனாவுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டு விட் டதோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந் துள்ளது. இந்தச்சந்தேகத்தை வலுப்படுத்தும் விதத்தில் ஏற்கனவே வேறு சில விடயங்களும் நடந்துள்ளன.

ஜாதிகபலசேனாவின் தலைவரும் சில முஸ்லிம் பிரமுகர்களும் இணைந்து மன்னார் மறிச்சுக்கட்டியில் முஸ்லிம் களின் மீள் குடியேற்றம் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு கொழும்பு நிப்பொன் விடுதியில் ஒரு ஊடகவியலாளர் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தனர். அங்கு அத்துமீறிப் புகுந்த கல கொட அத்தே ஞானசாரதேரர் தலைமை யிலான பொதுபலசேனாவினர் அந்த நிகழ்வை நடத்தவிடாது தடுத்தனர். ஊடகவிய லாளர் களையும் மிரட்டி விரட்டினர். அது மட்டுமன்றி வஜிர தேரரின் ஆவணங் களையும் பலவந்தமாக பறித்துச் சென்ற னர். அங்கு நின்ற பொலிஸார் அவர் களைத் தடுக்க எந்த வித முயற்சிகளை யும் மேற்கொள்ளவில்லை. பின்பு வஜிர தேரர் பொலிஸில் முறைப்பாடு செய்த போது அவரின் ஆவணங்களைத் திரும்பக் கொடுத்து விடயத்தை முடித்து விட்டனர்.

ஒரு விடுதிக்குள் சென்று குழப்பம் விளை வித்தமை தொடர்பாகவோ, ஆவ ணங்களைக் களவாடியமை தொடர் பாகவோ, ஊடகவியலாளர் சந்திப்பைத் தடுத்தமை தொடர்பாகவோ எவரும் கைது செய்யப்படவில்லை.

மேலும் முஸ்லிம்கள் மீள் குடியேறி யுள்ள முள்ளிக்குளம் பகுதிக்குள் 20 வாகனங்களில் சென்ற பொதுபல

ஆசாத்

சேனாவினர் முஸ்லிம்கள் உடனடியாக வெளியேற வேண்டுமெனவும், இல்லாவிடில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அச்சுறுத்தியுள்ளனர்.

அமைச்சர் ரிசாத் பதியூதினின் செயலகத்தில், நிப்பொன் விடுதி பத்திரிகையாளர் சந்திப்பில் மீள் குடியேறிய முஸ்லிம் மக்கள் மத்தியில் என்று பல சந்தர்ப்பங்களில் ஞானசாரதேரர் தலைமையிலான பொதுபல சேனாவினர் பொலிஸாரை விட அதிகாரம் படைத்தவர் களாக நடந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் இவர்கள் எவரும் கைது செய்யப்படுவதில்லை.

எனவே பொதுபலசேனாவினருக்கு உத்தி யோகப்பற்றற்ற முறையில் பொலிஸ் அதி

காரம் வழங்கப்பட்டு விட்டதாகவே தோன்று கிறது. ஆயினும் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு சவக் குழி நோக்கி தள்ளப்படுவது இது தான் முதல் தடவையல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களா? திருடர்களா?

உருவாக்குவது நாங்களே

கல்வியில் தமிழர்களின் நிலை பின் தங்கிச்செல்கின்றமையும் "கலவி"யில் முன்னிலையில் இருப்பதையும் கூகிளின் தரவுகள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. பாலியல் தொடர்பான வீடியோக்கள் இலங்கையராலேயே அதிகமாக பார்க்கப்பட்டன என்ற பெருமையில் நாம் மிதந்து கொண்டிருக்கிறோம். சரி "இதெல்லாம் ஒரு வளர்ந்த நாட்டில்(ஜனாதிபதி மஹிந்தவின் அறிக்கைகளின் படி சகஜமப்பா" என்று விட்டு விட்டு செல்லவும் முடியாது. ஏனெனில் எல்லா வளர்ச்சிகளும் கொண்ட நாட்டில் கல்வி கானல் நீராக ஆவது ஏன் என்ற கேள்விக்கு இன்னமும் பதில் கிடைத்தபாடாக இல்லை.

பொருளாதார வளர்ச்சி வேகம் துரிதமாக உள்ள உலக நாடுகள் கூட மூக்கில் விரல் வைக்குமளவுக்கு மத்திய வங்கி அறிக்கை அதிர்ச்சியூட்டுகின்றது.போர் நடந்த தடயங்களை அழித்துச் செல்லும் அரசு அதன் தாக்கங்களை மட்டும் கவனிக்காமல் சென்று அப்பப்போ ஜெனிவாவில் மாட்டிக்கொண்டு முழிக்கிறது. உப்பு தின்றவன் தண்ணி குடிக்கத்தானே வேண்டும். ஆனால் உப்புச் சாப்பிடாத அப்பாவிகளும் அரசால் தண்ணி குடித்துக்கொண்டிருப்பதுதான் கொடுமை.

கிளிநொச்சி 'ஏ-9' வீதிக்கு காப்பெற்றும் கலர் கலராக 'பல்ப்பு'களையும் போட்டு அபிவிருத்தி என்று விளையாட்டுக் காட்டும் அரசு கல்விக்காக என்ன செய்கிறது நாளைய தலைமுறைக்கு? பொருளாதாரப் பிரச்சினையால் எத்தனை பிள்ளைகள் கல்வியிழந்துள்ளனர் என்பது தெரியுமா? தெரிந்தும் தெரியாதது போல நடிக்கிறதா அரசு? நாட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை சொல்கையில் நானும் இரண்டு கதைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இது கதையல்ல நிஜம்.

இரண்டினதும் கதைக்களம் வன்னிதான். ஆனால் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்றவை.

ஒருமாணவனுக்கு பாடசாலையில் சப்பாத்து வாங்கச்சொல்லி அழுத்தம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவனும் தாயும் கையறு நிலையில்,கையில் காசு கிடையாது. அந்தச் சந்தர்ப்பத்தில் தான் அவனது ஆடு ஒரு கிடாய்க் குட்டியை ஈன்றது. அந்த ஆட்டுக்குட்டியை வளர்த்து விற்று சப்பாத்து வாங்கி தருவதாக தாய் கூற அன்றிலிருந்து அந்த குட்டியை ஆசையாக வளர்த்து அதற்கு வேண்டியவற்றை அவனே செய்து வருகின்றான். ஏனெனில் அந்த ஆடு தானே அவனுக்குப் புதுச்சப்பாத்துக்களைக் கொடுக்கப்போகின்றது.

இப்படி ஒருபுறமிருக்க இன்னும் இரு வெவ்வேறு குடும்பத்துப் பிள்ளைகள். தாய்மாரை இழந்தவர்கள், பாடசாலைக்கு செல்பவர்கள். அவர்களின் தவணைக்கட்டணங்களை கட்டுமாறு பாடசாலையில் அறிவுறுத்த என்ன செய்வதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. காசு கட்டாவிட்டால் அடிவிழும். அதைவிட தொடர்ந்து பாடசாலைக்குப் போகமுடியாதளவுக்கு ஆசிரியரும் அதிபரும் அடிக்கடி சொல்லிக்கட்டியே கொன்றுவிடுவார்கள்.எனவே அவர்கள் இந்தப் பிரச்சினையில் இருந்து தப்பிக்கொள்ள திருட்டைத் தேர்ந்தெடுத்தார்கள். திருட்டுத்தான் தமது பொருளாதார பிரச்சினையை தீர்க்கும் என்று இருவரும் துணிந்தனர். வீடு ஒன்றுக்குள் புகுந்து நகையை எடுத்துக்கொண்டு ஓடினார்கள். புதுப்பழக்கம் என்பதால் அடுத்த நொடியே பொலிசாரிடமும் அகப்பட்டனர். இன்று அவர்கள் இருவரும் சான்றுபெற்ற சிறுவர் பாடசாலையில் சேர்க்கப்படும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது. கல்விசார் சமூகத்தின் கடும் போக்கு இரு பிள்ளைகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

தவணைக்கட்டணங்களை கட்டுமாறு பாடசாலையில் அறிவுறுத்த என்ன செய்வதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. காசு கட்டாவிட்டால் அடிவிழும். அதைவிட தொடர்ந்து பாடசாலைக்குப் போகமுடியாதளவுக்கு ஆசிரியரும் அதிபரும் அடிக்கடி சொல்லிக்கட்டியே கொன்றுவிடுவார்கள்.எனவே அவர்கள் இந்தப் பிரச்சினையில் இருந்து தப்பிக்கொள்ள திருட்டைத் தேர்ந்தெடுத்தார்கள்.

இன்று வன்னியில் பொருளாதாரம் எவ்வளவு மோசமாக உள்ளது என்பதைப் படித்தவர்கள் கூட உணர்கிறார்கள் இல்லை. பாடசாலைக்கு பாடசாலை உளவள ஆசிரியர்களை நியமித்தும் ஆசிரியர்களுக்கு உளவளப் பயிற்சிகளை வழங்கியும் வரும் நிலையில் இப்படிப்பட்ட தவறான முடிவுகளுக்கு பிள்ளைகள் செல்வதற்கு பாடசாலைச்சமூகம் கொடுக்கும் அழுத்தத்தை தவிர வேறெதைக் குறிப்பிட முடியும்? பாடசாலைகள் பிள்ளைகளுக்கான நிம்மதியான அமைதியான சூழலைத்தர மறுக்கும் பொழுது மாணவர்கள் இவ்வாறே தவறான வழிகளில் செல்ல முற்படுவர். வைத்தியரையும் பொறியியலாளரையும் பட்டதாரிகளையும் உருவாக்கினோம் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் கல்விச் சமூகமே! எங்கள் புரிந்துணர்வின்மையால் எத்தனை பேரை இவ்வாறு திருடர்களாகவும் வாழவழி தெரியாதவர்களாகவும் ஆக்கியுள்ளோம் என்பதையும் கணக்கில் வைத்துக்கொள்ளுங்கள். கடைசிக் காலத்தில் உங்கள் மனச்சாட்சிக்கேனும் கணக்குக் காட்ட வேண்டி வரும். இலவசக்கல்வி என்ற போர்வையில் எதற்கு தவணைக்கட்டணங்களும் பரீட்சைக்கட்டணங்களும்? கல்வித்திணைக்களங்களுக்கு பிள்ளைகளின் நிலைபற்றிதெரியாது என்று சொல்லிவிடாதீர்கள். நீங்களும் இந்தச்சமூகத்தோடுதானே வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். சம்பள உயர்வுக்கும் வேறு இதர காரணங்களுக்காகவும் போர்க்கொடி தூக்குவதைப்போல் ஏழைக்குழந்தைகளுக்காகவும் தூக்கிப்பாருங்கள்.

பெற்றோர்களே! பிள்ளை பெறுவது மட்டும் உங்கள் கடமையில்லை. பெற்ற பிள்ளைகளை சீராக வளர்ப்பதே பெரும் கடமை. கடினமான விடயமும் கூட. இந்த ஆண்பிள்ளைகள் திருடுவதற்கு தம்மை தயாராக்கியதுபோல் பெண்பிள்ளைகள் வேறுவிதமாகப் பொருளீட்ட முயன்றால் எங்கள் சமூகம் எங்கே போய் நிற்கும்? சிறுவர் உரிமைகள் தங்களால்தான் காப்பாற்றப்பட்டுக்கொண்டு வருகின்றன என்று வாய்கிழியக்கத்தும் அரசும் அரசின் கிளைகளும் எதைப்பற்றியும் அக்கறைப்பட்டது போல தெரியவில்லையே.

நாமாவது எங்கள் சந்ததி மீது அக்கறை கொண்டு இன்றைய சிறுவர்களை நாளைய தலைவர்களாக்க முயலவேண்டும். மாறாக நாளைய திருடர்களாக அவர்களை மாற்ற நினைப்பது எம் சமூகத்தின் இருப்பை குழிதோண்டிப்புதைத்துவிடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்னும் இருட்டுக்கள்

மே–1 என்பது உலகம் முழுவதும் தொழிலாளர் வர்க்கத்தால் உற்சாகத்துடன் உவகை பொங்கக் கொண்டாடப்படும் ஒரு நாள். இந்துக்களுக்கு, கிறிஸ்தவர்களுக்கு, இஸ்லாமியர்களுக்கு என தனித்தனியான பண்டிகைகள், கொண்டாட்டங்கள் உண்டு. ஆனால் அனைத்து மத உழைப்பாளி மக்களும் கொண்டாடும் ஒரே தினம் மேதினம் மட்டுமே. அடையாளபூர்வ கொண்டாட்ட தினமல்ல இது. உரிமைகளைப் பெற்ற தினம். மனிதர்கள் மிருகமாக வேலை வாங்கப்பட்ட நாள்களில் அவர்களது மனித உணர்வுகளை மீட்டெடுக்க புரட்சிகர சக்திகள் ஏற்படுத்திய போராட்டத்தின் விளைவே மேதினம். சிக்காகோ நகர் வீதிகளில் சிந்திய போராளிகளின் உதிரம் பெற்றுக் கொடுத்த வரலாற்றுப் பரிசு இந்த தினம்.

நீண்ட போராட்டங்களின் மத்தியில் பிறந்த தொழிலாளர்களின் மேதினம் இன்றும் தொழிலாளர்களால் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்படுகின்றது. இந்தநிலையில் இலங்கைத் தமிழ் தொழிலாளர்கள் அன்று தொடக்கம் இன்று வரைக்கும் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்கிய வண்ணமே உள்ளனர். இதில் மலையகத்தைச் சேர்ந்த தமிழ்த் தொழிலாளர்களும், வடக்கு–கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்த் தொழிலாளர்களும் இன்னமும் பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்தே தங்கள் வாழ்வைக் கொண்டுசெல்ல வேண்டியிருக்கிறது.

இதில் மலையகத் தொழிலாளர்கள் ஒரு விதிவிலக்காகவே காணப்படுகின்றார்கள். கீழைத்தேய நாடுகளில் பிரித்தானியரின் ஆட்சிநிலவியபோது இலங்கையையும் அவர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். இதனால் இங்கிருந்து பல வளங்கள் சுரண்டப்பட்டு மேலைத்தேய நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. இதன் ஒரு கட்டமாகவே இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டு குறைந்த சம்பளத்திற்காக இந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டனர். அன்று முதல் இந்த மலையகத் தொழிலாளர்கள் மனிதர்களாகவன்றி வெறும் அடிமைகளாகவே பிரித்தானியரால் பார்க்கப்பட்டனர். அதனால் எந்த சுதந்திரமும் அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை.

1948 இல் இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னர் மலையகத்தொழிலாளர்களின் வாழ்வுப்பாதை சற்று மாற்றி அமைக்கப்பட்டது. ஆனாலும் இன்றும் அவர்கள் துன்பங்களை அனுபவித்த வண்ணமே உள்ளனர். அரசியல் சுக போகங்களை அனுபவிக்கும் சில அரசியல் கட்சியினர் தேர்தல் காலங்களில் மட்டும் பொய் பேச்சுக்களையும் ஆசைகளையும் ஊட்டி வாக்குகளை வாங்குவதற்காக அவர்களை நோக்கி செல்கின்றார்கள். தேர்தல் முடிந்ததும் அவர்களை மறந்து போகின்றனர். இதனால் மலையக மக்கள் எந்தச் சுதந்திரமும் இல்லாமல் தேயிலைத் தோட்டங்களுக்குள்ளேயே முழ்கடிக்கப்படுகின்றார்கள். சம்பளப்பிரச்சினை, இடப்பிரச்சினை, தேயிலைதோட்டங்களில் போதிய வசதி இன்மை, மேலதிக ஊதியமின்மை, குறைந்த விடுமுறை நாள்கள், பெருந் தொகையான தேயிலைத்தோட்டங்களை சிங்களத் தொழிலாளர்கள் கைப்பற்றிக் கொண்டமை, தேயிலைச் செடிகள் உரிய முறையில் கவனிக்கப்படாமை, கல்விப் பிரச்சினை போன்ற பல்வேறுப்பட்ட பிரச்சினைகளுக்கு நாளுக்கு நாள் மலையக மக்கள் முகம் கொடுத்த வண்ணமே உள்ளனர்.

இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்தும் பெருந்தோட்டத்துறை கீழ் நிலைக்கு போகின்ற நிலையானது பொருளாதார நெருக்கடிக்குள் தொடர்ந்தும் மலையக மக்கள் சிக்கவுள்ளனர் என்பதையே தெட்டத்தெளிவாக காட்டுகின்றது. அத்தோடு மலையக தோட்டத் தொழிலாளர்களின் சுதந்திரமும் உரிமைகளும் கேள்விக்குறியாகவே இருக்கின்றன.

மலையகத்தொழிலாளர்கள் எவ்வாறான துன்பங்களை அனுபவிக்கின்றார்களோ அதற்கு நிகரான துன்பங்களை வடக்கு – கிழக்கு தொழிலாளர்களும் அனுபவிக்கின்றனர். வடக்கு – கிழக்கு பகுதிகளில் இராணுவத்தின் தலையீட்டால் பல விவசாய நிலங்கள் சுவீகரிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக வடமாகாணத்தின் எல்லையோரப்பகுதிகளில் இவ்வாறான நிலைமைகள் காணப்படுகின்றன. ஆயிரம் ஏக்கருக்கு மேலான வயல் நிலங்களை அத்துமீறிக் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள குடும்பங்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளன. குறிப்பாக வவுனியா வடக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட வெடிவைத்த கல்லு, இலுப்பைக்குளம், ஒதியமலை மற்றும் அரியகுண்டான், கொக்கச்சான் குளம் போன்ற தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த பகுதிகளில் இப்போது சிங்களவர்கள் குடியேறியுள்ளனர். அங்கு தமிழர்களின் காணிகளை பல்காரமாக கைப்பற்றி விவசாய நடவடிக்கையிலும் ஈடுபடத்தொடங்கிவிட்டனர். இதனால் அந்தப்பகுதிகளைச் சேர்ந்த தமிழ் விவசாயிகள் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு விவசாயம் செய்ய சொந்த நிலமின்றி வாடுகின்றனர்.

இந்துக்களுக்கு, கிறிஸ்தவர்களுக்கு, இஸ்லாமியர்களுக்கு என தனித்தனியான பண்டிகைகள், கொண்டாட்டங்கள் உண்டு. ஆனால் அனைத்து மத உழைப்பாளி மக்களும் கொண்டாடும் ஒரே தினம் மேதினம் மட்டுமே. அடையாளபூர்வ கொண்டாட்ட தினமல்ல இது. உரிமைகளை பெற்ற தினம். மனிதர்கள் மிருகமாக வேலை வாங்கப்பட்ட நாள்களில் அவர்களது மனித உணர்வுகளை மீட்டெடுக்க புரட்சிகர சக்திகள் ஏற்படுத்திய போராட்டத்தின் விளைவே மேதினம்.

இராணுவத்தின் பிடிக்குள் இன்னமும் பல ஏக்கர் காணிகள் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் விழுங்கப்பட்டுள்ளன. அந்த நிலங்கள் இராணுவத்தினரின் விவசாயப் பண்ணைகளாக மாற்றப்பட்டுள்ளன. அங்கு விளையும் பொருள்களை மிக மலிவாக தமிழ் மக்களின் தலையிலேயே படையினர் கட்டிவிடுகின்றனர். இதனால் சாதாரண விவசாயிகளின் சந்தைவாய்ப்பும் முற்றுமுழுதாக பறிக்கப்பட்டுள்ளது. அத்தோடு தெற்கிலிருந்து வரும் வர்த்தகர்களால் உள்ளூர் உற்பத்திகள் எல்லாமே செயலிழக்கத் தொடங்கியுள்ளன. இராணுவத்தின் ஆதரவோடு தென்னிலங்கையில் இருந்து வரும் சிங்களவர்கள் வடபகுதியில் மீன்பிடித்தல், விவசாய நிலங்களைக் கைப்பற்றி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடல், மக்களை அச்சுறுத்தி மண் அகழ்வில் ஈடுபடல் போன்ற சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். இதனால் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பலத்த நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தென்னிலங்கையில் இருந்து வருகின்ற சிங்கள மீனவர்களால் கடல் வளங்கள் சுரண்டப்படுகின்றன. இதுவரை காலமும் வடக்கு கிழக்கு பகுதியில் கடல் தொழிலில் ஈடுபட்டு வந்த தமிழ் மீனவர்கள் இன்று பாஸ் நடைமுறைக்கும் மீன் பிடிக்க முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கின்றனர். இவர்களது கடல் வளங்களை அரசியல் செல்வாக்கோடு தென்னிலங்கை மற்றும் கிழக்குப் பகுதிகளில் இருந்து வரும் சிங்களவர்கள் கைப்பற்றி சுரண்டிச் செல்கின்றனர். இதனால் கடல்தொழி லைக் கைவிட்டு வேறு தொழில்களை நாடவேண்டிய இக்கட்டு நிலை தமிழ் மீனவர்களுக்கு நேர்ந்துள்ளது.

மேலும் விவசாயிகளுக்குத் தேவையான கடன் உதவிகள் மற்றும் ஊக்குவிப்பு என்பனவும் குறைக்கப்பட்டிருக்கின்றன. கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் இரணைமடுக்குளத்தை நம்பியே இதுவரைக்கும் வேளாணமையை மேற்கொண்டு வந்தனர். இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நீரை கொண்டு சென்றால் அந்தப்பகுதி மக்களின் விவசாய நிலை கேள்விக்குறியாகிவிடும்.

இதேநிலைதொடர்ந்து செல்லுமாயின் வடபகுதி விவாசாயிகளின் நிலங்கள் சிங்களவர்களுடையதாகி, புத்த பெருமானின் சிலைகளுமே காட்சி தரும். எதிர்காலத்தில் நாங்கள் மேதினத்தை விகாரைகளிலேயே கொண்டாட வேண்டிய நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் 30 – மே 06, 2014
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சீகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி–: 021 567 7609

பத்திரமாக இருக்கும் பாம்புகள்

பரமசிவன் கழுத்தில் இருக்கும் பாம்பு எதுவும் பேசலாம்; என்னவும் செய்யலாம் அப்படிச் செய்தாலும் எவராலும் எதுவும் செய்துவிடமுடியாது. அப்படி நம்மைச் சுற்றிலும் நிறையப் பரமசிவன் கழுத்துப் பாம்புகள் இருக்கின்றன. ஒரு காலத்தில் இந்தப் பாம்புகளுக்குத்தான் நாங்கள் கோயில் கட்டிப் பாலூற்றி வணங்கியிருந்தோம். ஆனால் அவை நம்மைத் தீண்டுவதற்காகவே காத்திருந்திருக்கின்றன என்ற உண்மையை காலம் போட்டுடைத்த பின்னர் இப்போது அவை பரமசிவன் கழுத்தில் நிரந்தரமாகக் குடியேறி விட்டன.

ஆனால் அப்பாவிப் பாம்புகள்தான் இவை செய்யும் குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுகின்றன. விடுதலைப் புலிகள் அமைப்பில் மிகச் சாதாரண உறுப்பினராக இருந்தவர்களும் கடைசிக் கட்டத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டவர்களும் இன்னமும் புலிச்சந்தேக நபர்களாகவே படையினரால் நோக்கப்படுகிறார்கள். அடிக்கடி விசாரணைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். உண்மையில் அவர்கள் தம்முடைய தளபதிகளின் சொற்படி ஆயுதம் ஏந்திப் போராடியதைத் தவிர வேறெந்த இரகசியமும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. தங்கள் இனத்துக்காகப் போராடியதைத் தவிர வேறெந்தக் குற்றமும் செய்திருக்கவுமில்லை.

எனினும் சர்வதேச ரீதியில் அதி பயங்கர குற்றச்சாட்டுகளுக்காக இன்னமும் தேடப்படுவோர் பட்டியலில் இருக்கும் குமரன் பத்மநாதன் என்கிற கே.பி. இலங்கையில் அரச விருந்தாளியாக உலாவருகின்றார். அவருக்குத் தனியான வாகனம். அரச பாதுகாப்பு. போதாதற்கு அவர் பெயரில் தொண்டுநிறுவனங்களும் உண்டு. புலிகளின் ஆரம்பகாலம் தொட்டு இறுதிவரை அந்த அமைப்பின் அதிமுக்கிய உறுப்பினராக கே.பி. இருந்தார். என்றாலும் அவருக்கு எந்த விசாரணையும் கிடையாது. தடுப்புக்குச் செல்லத் தேவையில்லை. அவர் 'இன்டர்போல்' பொலிஸாரால் சிவப்புப்பட்டியலில் இருந்து இன்னமும் விலக்கப்படவில்லை. அப்படி இன்டர் போலால் தேடப்படும் ஒருவர் இலங்கையில் சுதந்திரமாக நடமாடித்திரிகிறார். அவரை ஏன் இன்டர்போல் இன்னமும் கைதுசெய்யவில்லை? இதைவிட இந்தியாவில் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முதல்மூன்று குற்றவாளிகளாக அறிக்கையிடப்பட்டவர்களில் கே.பியும் ஒருவர். அவர் பக்கத்து நாடான இலங்கையில் பத்திரமாக இருக்கும்போது அவரை விட்டுவிட்டு பற்றரி வாங்கிக்கொடுத்த பேரறிவாளனுக்கு தூக்குத் தண்டனையை வாங்கிக்கொடுக்க ஏன் இந்தியா படாதபாடு படுகிறது?

இப்போது புரிகிறதா. பரமசிவன் கழுத்துப் பாம்பாக இருந்துவிட்டால் இன்டர் போலோ இந்தியாவோ எதுவும் செய்துவிடமுடியாது. நினைத்ததை நினைத்த நேரத்தில் பரமசிவன் கழுத்துப் பாம்புகள் செய்துவிடமுடியும். பாவம் அப்பாவிகள்தான் எப்போதும் பலிக்கடாவாக்கப்படுகிறார்கள்.

மே: முள்ளிவாய்க்கால் மாதம்

தமிழ்

முள்ளிவாய்க்கால் மறக்கப்படமுடியாத வரலாறுகளில் இதுவும் ஒன்று. அந்தச் சதுப்பு நிலம் எத்தனையோ உயிர்களைக் கண்முன்னே பறித்துச் சென்று இருக்கின்றது. தமிழினத்தின் குருதி அந்த நிலத்தில் இன்னும் உறைந்து போய் இருக்கின்றது. தாய், தந்தை, சிறுவர்கள், சிறுமிகள் எனப் பலரை இந்த நிலம் பறித்திருக்கின்றது. இறுதி வரை தமிழர்களின் விடிவுக்காகப் போராடிய நிலம் இன்று தோற்றுப் போய் இருக்கின்றது. இப்போது இந்த நிலம் சுற்றுலா மையமாகவும் இராணுவத்துக்கு சொந்தமான காணியாகவும் மாற்றப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கு எதிராக மாவிலாற்றில் தொடங்கிய போர் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி முள்ளிவாய்க்கால் கரையோடு முடிவுற்றது. இந்த அழிப்பினால் எத்தனையோ சிறுவர் சிறுமிகள் அநாதைகளாக்கப்பட்டும் காணாமல் போயும் இருக்கின்றார்கள். இதன் தொடர்ச்சியாக இன்றும் தமிழர்கள் விசாரிக்கப்படுவதும் கைதுசெய்வதும் என நடந்து கொண்டே இருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் தமிழ் மக்களின் வரலாற்றில் ஒரு அழியாத வடுவாக எப்போதும் நிலைத்திருக்கும். 2007ஆம் ஆண்டு போர் தொடங்கியதும் மக்களும் இடம் பெயரத்தொடங்கி விட்டனர். படிப்படியாக தமிழர்களின் பகுதிகளை இராணுவத்தினர் சுவைக்கத்தொடங்கினர். மக்களும் இடம் பெயர்வதை நிறுத்திக் கொள்ளவில்லை .தொடர்ந்து நடக்கத்தொடங்கினார்கள். போர் மக்களை நெருக்கத் தொடங்கியது. இதனால் மக்கள் கடைசியாக முள்ளிவாய்க்கால் கரையோரப்பகுதியில் தஞ்சம் புகுந்து கொண்டார்கள். இதற்கிடையில் எத்தனையோ கொடூரமான சம்பவங்களை கடந்து இறுதியாகவேறு தெரிவின்றியே இந்த நிலத்துக்குள் வர வேண்டியிருந்தது. இந்த நிலமும் அவர்களை விட்டு வைக்கவில்லை. நாளுக்கு நாள் அவர்களை கொலை செய்யத்தொடங்கிற்று. இரத்த வெள்ளத் தில் மக்கள் மிதக்கத்தொடங்கினர்.

"சர்வதேசம் காப்பாற்றும்"

"இந்தியா காப்பாற்றும்" என்ற நம்பிக்கைகளோடு காத்திருந்த மக்கள் இறுதியில் தமது சொந்தங்களையும் உறவுகளையும் பறிகொடுத்தனர். இந்தக் குறுகிய நிலத்தில் லட்சக்கணக்கான மக்கள் அடைக்கப்பட்டு இரசாயனக்குண்டுகள், விமானத் தாக்குதல்கள், கடல்வழித் தாக்குதல்கள் போன்ற வற்றினால் வதம் செய்யப்பட்டார்கள். இறுதியில் இந்தப் போரில் உயிர் பிழைத்தவர்கள் நலன்புரி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டு சொந்த நிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இன்று முள்ளிவாய்க்காலில் இன அழிப்பு நடந்தமைக்கான தடயங்களைக் காண முடிய வில்லை. புதிய புதிய கட்டடங்களும் சுற்றுலா மையங்களும். புத்த விகாரைகளும் நாளுக்கு நாள் முளைத்த வண்ணமே உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் முள்ளிவாய்க்கால் பற்றிய மறக்க முடியாத எண்ணற்ற கதைகள் எங்களிடையே சாகா வரத்தோடு உலா வருகின்றன. அவற்றில் சில இங்கே-

பாக்கியம் --

போர் இறுதிக் கட்டத்தை அடைந்த போது எறிகணைகள் செறிவாக வீழ்ந்து வெடித்ததால் நாங்கள் அனைவரும் வெளியில் நடமாட முடியாமல் பதுங்கு குழிகளுக்குள்ளே ஒளிந்திருக்க வேண்டியிருந்தது. நான் இருந்த பதுங்குகுழிக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த பதுங்குகுழிக்குள் சிறுவர்கள் அழுகின்ற சத்தம் எனக்குக் கேட்டது. எங்கோ சென்ற அந்தச் சிறார்களின் தாயார் மீண்டும் திரும்பியிருக்கவில்லை. இதனால் தனிமையில் இருந்த சிறார்கள் அச்சத்தில் அழுதுகொண்டேயிருந்தனர்.

இறுதியில் அந்த இடத்தை விட்டு வேறிடம் செல்வதற்கு நாம் முடிவெடுத்த போது கைவிடப்பட்ட நிலையில் அநாதரவாக இருந்த அந்தச் சிறார்களையும் கூட்டிக் கொண்டு சென்றோம். நான் கூட்டிச் சென்றிருந்த சிறார்களில் பெண் சிறுமி தனக்குத் தெரிந்த ஒருவரை வழியில் கண்டு அவருடன் சென்றுவிட்டார். பின்னர் சிறுவன் மட்டுமே என்னுடன் இருந்தான். நாங்கள் அனைவரும் நந்திக்கடல் நீரேரியைக் கடந்து ஆமிக் கட்டுப்பாட்டுக்குள் செல்வதற்காக காத்திருந்தோம். திரும்பும் திசை எல்லாம் துப்பாக்கிச்சன்னங்கள். இதனால் நாம் நிமிர்ந்து நடக்க முடியவில்லை. ஊர்ந்து ஊர்ந்து மெதுவாகச் செல்ல வேண்டியிருந்தது. நாம் இறுதியாகப் பயணித்த சில கிலோமீற்றர் தூரம் வரை இறந்த உடலங்கள் பரவிக் காணப்பட்டன. இவ்வாறு நாம் ஊர்ந்து ஊர்ந்து சென்று கொண்டிருந்த போதும் கூட எம்முடன் பயணித்த சிலர் துப்பாக்கி ரவைகளால் பதம் பார்க்கப்பட்டு மிக மோசமாகக் காயமடைந்தனர்.

அவர்களை காவிச் செல்ல முடியாதிருந்ததால் அவர்களை அப்படியே அதே இடத்தில் விட்டுவிட்டு செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். இவ்வாறு சென்று கொண்டிருந்த போது துப்பாக்கி ரவை ஒன்று சிறு பிள்ளை ஒருவரின் தலையைப் பிளந்து கொண்டு சென்றது. இதனை நான் நேரில் பார்த்தேன்.

அந்தப் பிள்ளை அந்த இடத்திலேயே இறந்து விட, தாயார் மிகவும் வேதனையுடன் தனது பிள்ளையின் உடலத்தை அப்படியே போட்டுவிட்டு தொடர்ந்து அழுதபடி நகர்ந்துகொண்டிருந்தார். அந்தக் குழந்தையை அவர் தவமிருந்து பெற்றிருக்கக் கூடும். தனது உயிரையே அதன் மீது அந்தத் தாய் வைத்திருந்திருப்பார். ஆனால் போர் பிள்ளையின் உடலை அவர் கையாலேயே தூக்கியெறிய வைத்திருந்தது.

சர்மிளா-

நான் தற்போது கையில் வைத்திருக்கும் மகன் வன்னியில் போர் இறுதிக்கட்டத்தை அடைந்த போது அதாவது நாங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் தப்பி வருவதற்கு மூன்று நாள்களின் முன்னர்தான் பிறந்திருந்தான். அந்த நாள், பெப்ரவரி 10- 2009. அன்று எம்முடன் இணைந்து 60 குடும்பங்கள் வரை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றோம். எம்மைச் சூழ போர் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. இதனால் நாம் பதுங்குகுழிக்குள் பாதுகாப்புத் தேடினோம். நான் குழந்தையைப் பெற்றெடுப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றேன். எனது மகன் பிறந்த கையோடு, நான் மீண்டும் எனது குடும்பத்தவர்களுடன் இணைந்து கொண்டேன்.

வைத்தியசாலையில் பெருமளவான நோயாளிகள் நிறைந்து காணப்பட்டதால், என் போன்றவர்கள் மிக விரைவாகத் திருப்பி அனுப்பப்பட்டனர். நாங்கள் இறந்து கிடந்த உடல்களைக் கடந்து மூன்று நாள்களாக நடந்து இறுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியை அடைந்தோம். (நாங்கள் புலிகளின் நிலைகளிலிருந்து சில மைல்கள் தூரம் நடந்து சென்றே குறித்த இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அடைந்திருந்தோம்) பின்னர் அங்கிருந்து, காடுகளின் ஊடாக பஸ்களில் ஏறுவதற்காக நடந்தோம். நான் நடந்து சென்ற முழுத்தூரமும், சில நாள்களின் முன்னர் பெற்றெடுத்த குழந்தையை கூடை ஒன்றில் பாதுகாப்பாக வைத்து எடுத்துச் சென்றேன். நாங்கள் ஓமந்தையைச் சென்றடைந்த போது இராணுவத்தினர் பெருமளவான மக்களைத் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கவில்லை. இதனால் நாங்கள் குளிர் நிறைந்த அந்த இரவில் நடு வீதியிலேயே படுத்துறங்க வேண்டியிருந்தது. எனது குடும்பத்தவர்களைப் பாதுகாக்குமாறு நான் இறைவனை மன்றாடினேன். ஆனால் என் பிரார்த்தனை இறைவனுக்குக் கேட்டிருக்கவில்லை.

கமலாம்பிகை -

நான் ஐந்து பிள்ளைகளின் தாய். நாங்கள் மாத்தளனில் தங்கியிருந்தோம். அன்று காலை எறிகணைகள் செறிவாக வீழ்ந்து வெடித்துக்கொண்டிருந்தன. அப்போது நான் சமையல் பாத்திரங்களை கழுவிக்கொண்டிருந்தேன். அவற்றைக் கழுவி முடித்த பின்னர், நீர் ஊற்றுவதற்காக சில அடி தூரம் நடந்தேன். அப்போது எனது கணவர் பதுங்குகுழியை விட்டு வெளியில் வந்து எனக்கருகில் நின்றார். அப்போது எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்தது.

நான் கழுவிய சமையல் பாத்திரங்கள் இருந்த இடம் தெரியாது சிதறின. நான் எனது கைகளில் வைத்துக் கொண்டு நின்ற பானையில் ஐந்து துவாரங்கள் காணப்பட்டன. அந்த எறிகணையில் எனது கணவர் காயமடைந்தார். நான் எனது கணவரைக் கூட்டிக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்ற போது, அவரது காயத்திலிருந்து பெருமளவான இரத்தம் ஒழுக்கொண்டிருந்தது. செல்லும் வழியில் உலங்கு வானூர்தி மூலம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் பலர் காயமடைந்தனர். இதேபோல் ஒவ்வொரு தாக்குதல்களில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர். நான் காயமடைந்த எனது கணவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது, குருதி அதிகளவு வெளியேறி இருந்தது. மிக மோசமான காயக்காரர்களை வைத்தியர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. இதேபோன்று எனது கணவரும் பலத்த காயமடைந்திருந்ததால், வைத்தியர்கள் மருத்துவம் செய்ய முற்படவில்லை. இவரது கல்லீரல் பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் சுவாசித்துக் கொண்டிருந்தார். அந்த நேரம் வைத்தியசாலைக்கு அருகில் குண்டொன்று வீழ்ந்து வெடித்த அதிர்ச்சியில் என் மடியிலேயே அவரின் உயிர் பிரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினிக்குமரன்

அமைச்சரின் போர்ப்பிரகடனம்

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா "யார் எதிர்த்தாலும், எத்தகைய தடைகள் ஏற்பட்டாலும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றிய தீருவேன்" என்று சூளுரைத்திருக்கிறார்.

இந்தத்திட்டத்தின் தற்போதைய வடிவத்தை எதிர்த்துக் கிளிநொச்சி விவசாயிகள் சில நாள்களுக்கு முன்னர்தான் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். அந்தச் சூடு ஆறுவதற்கிடையில் அமைச்சர் டக்ளஸ் விவசாயிகளின் கோரிக்கைக்கு முரணாக அவர்கள் மீது ஒரு போர்ப்பிரகடனத்தை மேற்கொண்டுள்ளார்.

எந்த ஒரு விவசாயியும் யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுவிலிருந்து குடிநீர் வழங்குவதை எதிர்க்கவில்லை. மாறாகத் தற்சமயம் இரணைமடு நீர் விவசாயத்துக்கே பற்றாக்குறையாக உள்ள வேளையில் யாழ்ப்பாணத்துக்குக் குடிநீர் கொண்டு செல்லப்படுவதையே எதிர்க்கின்றனர். விவசாயத்துக்கு தேவையான நீர் தேக்கப்படும் நிலை உருவாக்கப்பட்டு அதன் பின் இருக்கும் மேலதிக நீரை யாழ்ப்பாணத்துக்கு வழங்கும்படிதான் கேட்கின்றனர்.

'இதில் நியாயமில்லை' என எவரும் கூறி விட முடியாது. அவர்களின் கோரிக்கைக்கு முக்கியமான இரு காரணங்கள் உண்டு. ஒன்று வடக்கின் உணவுத் தேவையின் பெரும் பகுதியைக் கிளிநொச்சியின் விவசாயமே பூர்த்தி செய்கின்றது. மற்றது கிளிநொச்சி மக்களின் வாழ்வாதாரத் தொழிலாக விவசாயமே விளங்குகின்றது.

விவசாயத்துக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாகப் பொறுப்பற்ற விதத்தில் இந்தத்திட்டம் நிறைவேற்றப்படுமானால் உணவுத் தேவைக்கு வட பகுதி மக்கள் தென்னிலங்கையையே நம்பியிருக்க வேண்டிய அவல நிலை ஏற்படும். அடுத்தது விவசாயத்தில் ஏற்படும் வீழ்ச்சி காரணமாகப் பெருந்தொகையானோர் தொழில்களை இழக்க வேலையில்லாத் திண்டாட்டம் சடுதியாக உருவாகும். இதன் காரணமாகப் பல சமூகப் பிரச்சினைகள் உருவாகும் நிலை ஏற்படும்.

இதனைத் தீர்ப்பதற்கு மகாவலி நீர் இரணைமடுவுக்குக் கொண்டு வரப்படுமெனவும், இரணைமடுவின் குளக்கட்டு மேலும் 2 அடியால் உயர்த்தப்பட்டு கூடுதல் நீர் தேக்கப்படுமெனவும் சிறு போகத்திற்கு 20 உணவுப் பயிர்களை செய்கை பண்ண முடியும் எனவும் கூறப்படுகின்றது.

மகாவலி நீர் தற்சமயம் பாயும் பிரதேசங்களே வருடா வருடம் நீர்ப்பற்றாக்குறை காரணமாகப் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் நிலை உள்ளது. இந்த மகாவலி நீர் இரணைமடுவுக்கு வருவதானால் நூற்றுக்கும் மேற்பட்ட குளங்களைத் தாண்டி, அதன் கீழுள்ள வயல்களுக்குப் பாய்ச்சப்பட்ட பின்னர் மிகுதியாக உள்ள நீரையே கொண்டுவர முடியும். அப்படியான நிலையில் இரணைமடுவுக்குக் குறைந்த பட்ச நீர் கூட வந்து சேர முடியாது. மேலும் இரணைமடு குளக்கட்டு 2 அடிகள் உயர்த்தப்பட்டாலும் அந்த உயரத்துக்கு நீரைத் தேக்க இராணுவம் அனுமதிக்கப் போவதில்லை. அப்படி நீர் தேக்கப்பட்டால் இரணைமடு விமான ஓடு பாதைக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். கடந்த இரண்டு வருடங்களாக குளத்தில் 25 அடிக்கு மேல் நீரைத் தேக்க இராணுவம் அனுமதிக்க வில்லை என்பதை நாம் மறந்து விட முடியாது.

மகாவலி நீர் கொண்டு வரப்படலாம். நிச்சயமாக அதனால் கிளிநொச்சி விவசாயிகள் பயன் பெறும் சாத்தியமில்லை. ஆனால் தற்சமயம் மாகாண சபையின் கட்டுப்பாட்டில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள இரணைமடுக்குளம் மகாவலி அபிவிருத்தி சபையின் கைகளுக்குப் போய் விடும். அதாவது மாகாண சபையின் அதிகாரத்தை மத்திய அரசு பறித்தெறிந்து விடும்.

அதையடுத்து வெவ்வேறு பெயர்களில் சிங்களக் குடியேற்றங்கள் தங்கு தடையின்றி உருவாகும் நிலை ஏற்படும். சிறுபோகத்தில் வயல் நிலங்களில் மாற்றுப் பயிர்களாக உப உணவுப்பயிர்களைப் பயிரிடலாம் என ஆலோசனை சொல்லப்படுகிறது. எந்த ஒரு விவசாயியும் வயல் நிலங்களில் உப உணவுப் பயிர்களை பயிரிட மாட்டார்கள். நீர்ப்பிட்டியுள்ள வயல் நிலங்களில் உப உணவுப்பயிர்கள் அழிவடைந்து விடும்.

விவசாயமா, குடிநீரா என்ற பிரச்சினை வரும் போது குடிநீருக்கே முன்னுரிமை வழங்கப்படும். அது தவிர்க்கப்பட முடியாது. எனவே யாழ்ப்பாணக் குடிநீர்த் தேவைக்கு இரணைமடு நீர் வழங்கப்படும் போது வரட்சிக் காலங்களில் குளத்து நீரை அதிகமாக எடுக்க வேண்டி வரும். அதன் காரணமாக இரணைமடு நீர்மட்டம் வெகுவாகக் குறைவடையும். இதனால் கிளிநொச்சிக் கிணறுகளில் கூட நீர் வற்றி விடும் அபாயம் தோன்றும். குடிநீர் கூட இல்லாத நிலையில் கிளிநொச்சியின் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குடிபெயரும் நிலை உருவாகும்.

அதே வேளையில் இந்தியாவின் காவிரி நீர்ப்பிரச்சினை போன்று யாழ்ப்பாண மக்களும், கிளிநொச்சி மக்களும் இரணைமடுவால் முரண்பட்டு, மோதும் நிலையும் உருவாகும்.

இத்தகைய பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய - கிளிநொச்சி மக்களையும் உணவுக்கும் குடிநீருக்கும் கையேந்த வைக்கும் - இரணைமடுத் திட்டத்தைத்தான் அமைச்சர் டக்ளஸ் எப்படியும் நிறைவேற்றப் போவதாகத் துள்ளிக் குதிக்கிறார்.

அவருக்கு இரணைமடுக் குளத்தை மாகாண சபையிடமிருந்து பறித்து மத்திய அரசிடம் கொடுத்து விட வேண்டும் என்பது தான் பிரதான இலட்சியம்.

கிளிநொச்சி விவசாயிகள் பற்றியோ, யாழ்ப்பாணக் கிணறுகள் சவர்த்தன்மையடைவது பற்றியோ அவர் கவலைப்படுவதில்லை. இப்படியான மக்கள் விரோத நடவடிக்கைகள் அவருக்கு அப்படியொன்றும் புதியவை அல்ல.

எனவே தான் இப்போது அவர் போரை விவசாயிகள் மீது பிரகடனம் செய்துள்ளார். ஆனால் எப்போதும் போர்கள் பிரகடனப்படுத்தியவர்களுக்கே சங்கடமாக மாறியதுண்டு.

இரணைமடு குளக்கட்டு 2 அடிகள் உயர்த்தப்பட்டாலும் அந்த உயரத்துக்கு நீரைத் தேக்க இராணுவம் அனுமதிக்கப் போவதில்லை. அப்படி நீர் தேக்கப்பட்டால் இரணைமடு விமான ஓடு பாதைக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். கடந்த இரண்டு வருடங்களாக குளத்தல் 25 அடிக்கு மேல் நீரைத் தேக்க இராணுவம் அனுமதிக்க வில்லை என்பதை நாம் மறந்து விட முடியாது.

எந்த ஒரு விவசாயியும் யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுவிலிருந்து குடிநீர் வழங்குவதை எதிர்க்கவில்லை. மாறாக தற்சமயம் இரணைமடு நீர் விவசாயத்துக்கே பற்றாக்குறையாக உள்ள வேளையில் யாழ்ப்பாணத்துக்குக் குடிநீர் கொண்டு செல்லப்படுவதையே எதிர்க்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மீளமுடியா இன்னொரு முள்ளிவாய்க்கால்

சு.கோமேஸ்

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா வால் கொண்டுவரப்பட்ட பிரேரணை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வாரங் கள் சிலவும் உருண்டு விட்டன. ஆனால் இந்தப் பிரேரணை தமிழ் மக்களின் இன்னல்களைத் தீர்க்கும் விடயங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுதான் யதார்த்தம்.

ஜெனிவா தீர்மானத்தில் எந்த ஒரு இடத்திலாவது இறுதிக் கட்டப்போரின் போது தமிழ் மக்கள் மீது இன அழிப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ஒரு வரி கூட இடம்பெறவில்லை. இந்த உண்மையினை ஒரு சில தமிழ்த் தலை வர்கள் தெரிந்து கொண்டும் இது பற்றி வெளிப்படையாக வாய் திறக்க மறுத்து வருகின்றனர். இதன் மூலம் தமிழ் மக்

ஜெனிவா தீர்மானத்தில் எந்த ஒரு இடத்திலாவது இறுதிக் கட்டப்போரின் போது தமிழ் மக்கள் மீது இன அழிப்பு ஒன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது என்று ஒரு வரி கூட இடம்பெற வில்லை. இந்த உண்மையினை ஒரு சில தமிழ்த் தலைவர்கள் தெரிந்து கொண்டும் இது பற்றி வெளிப்படையாக வாய் திறக்க மறுத்து வரு கின்றனர்.

களை இவர்கள் தொடந்து ஏமாற்றும் ஒரு செயற்பாட்டையே மேற்கொண்டு வருகின்றனர்.

உண்மையில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்றை எப்படியாவது ஏற்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் முயன்று வருகின் றன. அதன் ஒரு விளைவே ஜெனிவாப் பிரேரணைகள்.

ஏனெனில் மஹிந்த தலைமையி லான இலங்கை அரசு சீனா, ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளின் சொற்படியே தான் நடந்து கொள்கிறது. இது அந்த நாடு களின் ஜென்ம விரோதியான அமெ ரிக்காவுக்கு பெரும் புகைச்சலை ஏற் படுத்தியுள்ளது. இந்தக்கூட்டணி தொடர்ந் தால் இந்து சமுத்திர பிராந்தியத்தில் தன் ஆதிக்கம் எடுபடாமால் போய்விடும் என்று அமெரிக்கா அஞ்சுகிறது. எனவே இந்தப் பாசப்பிணைப்பிலிருந்து இலங் கையைத் தன் காலடியில் கிடக்கும் நாய்க் குட்டியாக மாற்ற அது தொடர்ந்து முயன்று வருகின்றது. எனவேதான் அமெரிக்கா சார்பான கொள்கை நிலை யையுடைய புதிய அரசொன்றை நிறுவ எத்தனங்களை மேற்கொள்கிறது.

உலகச்சண்டியனுக்கே சண்டித்தனம் காட்டும் தெருச்சண்டியனாக இலங்கை ஜனாதிபதி எப்போது பார்த்தாலும் அமெ ரிக்காவுடன் முரண்பட்ட படியே உள்ளார். அவரது நெருங்கிய சகாவான லிபிய அதிபரான கேணல் கடாபி அமெரிக்கா வால் கொல்லப்பட்ட பின்னும் கூட தன் அமெரிக்க எதிர்ப்பை மஹிந்த கைவிடு வதாக இல்லை. மஹிந்தவை ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றி, தனக்குச் சார்பான அரசை நிறுவத்தான் அமெ ரிக்கா இறுதிப்போரில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களை கையில் எடுத்து வருடந்தோறும் ஜெனிவாவில் பிரேரணை நேர்த்திக்கடன்களை நிறை வேற்றி வருகின்றது. மாறாக அமெரிக்கப் பிரேரணைகளை தமிழர்கள் மீதான அக்கறை என்று அர்த்தப்படுத்துவோ மானால் இன்னொரு முறை அமெ ரிக்கா காப்பாற்றும் என்ற நம்பிக்கை வழியே மீளமுடியா முள்ளிவாய்க்கால் ஒன்றுக்குள் வீழ்த்தப்பட்டுவிடுவோம்.

ஜெனிவாப்பிரேரணையில் சொல்லப் பட்டுள்ள இறுதிப்போரில் இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணை விவகாரம் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கே கொண்டு செல்லப் பட வேண்டும். அவ்வாறு கொண்டு செல் லப்படும் போது தான் காத்திரமான ஒரு சர்வதேச விசாரணை இடம்பெற்று உரிய நடவடிக்கைகளும் உடனேயே எடுக்கப் படும். அதைவிடுத்து வழக்கம் போல நவநீதம்பிள்ளையை சர்வதேச விசா ரணை என்ற பெயரில் இங்கே அனுப்பி, வெறும் காகித அறிக்கை ஒன்றை மட் டுமே சமர்ப்பிப்பதன் ஊடாக எதுவும் நடக்கப்போவதில்லை. காகிதங்கள் எது வும் உயிர்பெறுவதில்லை. மாறாக உருப் படியாக இன்னொன்று வேண்டுமானால் நிகழலாம். நவிப்பிள்ளையை விசா ரணை செய்ய இலங்கைக்கு அனுப்பி இந்த வயதிலும் அவரை மணம் முடிக்கக் காத்திருக்கும் மேர்வினுக்கு மணப் பெண்ணாக்கி அழகு பார்க்கலாம் அமெ ரிக்கா.

பெண்ணில் ஆற்றலுக்கு காரணம் மூளையே

பொதுவாகவே ஆண்களை விட பெண்களின் செயற்திறன் பல சமயங்களில் சிறப்பாக இருக்கும். ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யும் ஆற்றலும், பல மொழி பேசும் ஆற்றலும் பெண்களுக்கு அதிகமாக இருக்கக் காரணம் அவர்களது மூளை தான் என்கிறது ஆய்வுகள். அதாவது, ஆணின் மூளையில் இருந்து பெண்ணின் மூளை வேறுபட்டுள்ளது என்பது பல்வேறு ஆய்வுகள் மூலமாக வெளி உலகுக்குத் தெரிய வந்துள்ளது.

அதாவது, மூளையின் முன் பகுதியில் இருந்து பின் பகுதியை இணைக்கும் நரம்புகளை அதிகமாகவும், பலமாகவும் கொண்டதாக ஆண்களின் மூளை உள்ளது. அதே சமயம், பெண்களின் மூளையில் வலது மூளையில் இருந்து இடது புற மூளையை இணைத்த வகையில் நரம்புகள் பின்னப்பட்டு உள்ளன. இவையே, ஒரு வேலையை ஆண் செய்யும் விதத்துக்கும், பெண் செய்யும் விதத்துக்கும் வித்தியாசப்படுத்துகிறது என்கிறது மருத்துவம்.

அதாவது, ஒரு வேலையை எடுத்து செய்யும் போதும், அதில் முழுக் கவனம் செலுத்தும் போதும் ஆண்களின் மூளை சிறப்பாகவே செயற்படுகிறது. ஆனால், ஒரே சமயத்தில் இரு வேறு வேலைகளை அவர்களால் திறம்படச் செய்ய முடியாது. அதே சமயம், பெண்களால் ஒரு வேலையை மிகவும் திறமையாகவும், ஒரே நேரத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட வேலைகளை எளிதாகவும் செய்ய முடியும்.

பொதுவாக பெண்கள் செல்பேசியில் பேசிக் கொண்டே சமைப்பது, தொலைக்காட்சி பார்ப்பது, வீட்டு வேலைகள் செய்வது போன்றவற்றைச் செய்வதைப் பார்த்திருப்போம். இது மட்டும் அல்ல வீட்டு நிர்வாகத்தையும் கவனித்துக் கொண்டு பணிக்கும் செல்லும் ஆற்றல் பெண்களுக்கு அதிகம் உள்ளது.

மூளை வேறுபாட்டினால் உள்ள சில இயல்பான குண நலன்களைப் பார்த்தால், வரைபடத்தைப் பார்த்தே ஒரு ஆணால், செல்லுமிடத்தை கண்டுபிடிக்க முடியும். ஆனால், இவ்வாறு மூளையில் இருக்கும் வேறுபாடானது பிறக்கும் போது அமைவதில்லை.

சுமார் 15 வயதுக்கு மேல்தான் இந்த வேறுபாடு ஏற்படுவதாகவும், இளம் வயதை அடையும் ஆண் மற்றும் பெண்ணின் மூளையில் இந்த வேறுபாட்டை எளிதாக காணலாம் என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

10

சாயியே சரணம்

பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் – 10

'உருஷ்' ஐ ஸ்ரீ ராம நவமி திருவிழாவாக மாற்றுதல்

1912 ஆம் ஆண்டுவரை 'உருஷ்' திருவிழா படிப்படியாக முக்கியத்துவம் அடைந்த பின் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அந்த ஆண்டு கிருஷ்ணராவ் ஜாகோச்வா பீஷ்மா (சாயி ஸகுணோபாசனா என்ற புத்தகத்தின் ஆசிரியர்) அமராவதியைச் சேர்ந்த தாதாஸாஹேப் காபர்டேயுடன் திருவிழாவுக்கு வந்து முந்தியதினம் தீக்ஷித் வாதாவில் தங்கியிருந்தார். அவர் தாழ்வாரத்தில் ஓய் வெடுத்துக்கொண்டிருந்தபோது லக்ஷ்மண்ராவ் என்ற காகாமஹாஜனி, மசூதிக்குப் பூஜைப் பொருள்களுடன் போய்க் கொண்டிருந்தார். அப்போது பீஷ்மாவுக்கு ஒரு புது எண்ணம் தோன்றியது. அவரை (காகா) நோக்கிப் பின்வருமாறு கூறினார்.

சீரடியில் 'உருஸ்' அல்லது சந்தனத் திருவிழா ஸ்ரீராம நவமியன்று கொண்டாடப்படும் உண்மைக்கு ஏதோ ஒரு தெய்வ ஏற்பாடு இருக்கிறது. இந்துக்களுக்கு ஸ்ரீராம நவமி தினம் மிகவும் பிரியமானது. பின்னர் ஏன் இந்த நாளில் ஸ்ரீராம நவமிக் கொண்டாட்டத்தை ஆரம்பிக்கக் கூடாது ? காகா மஹாஜனி இக்கருத்தை விரும்பினார். பாபாவின் அனுமதியை இவ்விடயத்தில் பெறுவது என முடிவு செய்யப்பட்டது. அத்திருவிழாவில் கீர்த்தனை செய்யும் கடவுளின் புகழைப்பாடும் ஹரிதாஸை (பாடகர்) எங்ஙனம் அடைவது என்பது முக்கிய கடினமான விடயமாகும். ராமர் பிறந்ததைப் பற்றி தன்னுடைய பாடல்களான 'ராம அக்யன்' தயாராய் இருப்பதாகவும் தானே இக்கீர்த்தனைகளைப் பாடுவதாகவும், பீஷ்மா கூறி இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டார். காகா மஹாஜனி, அப்போது ஹார்மோனியம் வாசிக்க வேண்டும். ராதாகிருஷ்ணமாயியால் தயாரக்கப்பட்ட 'சுண்ட்வடா' வை (சர்க்கரை கலந்த இஞ்சிப் பொடி) பிரசாதமாகப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பின்பு அவர்கள் பாபாவின் அனுமதியைப் பெறுவதற்கு சென்றனர். அங்கு நடந்து கொண்டிருந்த எல்லாவற்றையும் அறிந்திருந்த பாபா, 'வாதாவில் என்ன நடந்துகொண்டிருந்தது' என்று மஹாஜனியிடம் வினவினார். குழப்பமடைந்த மஹாஜனி கேள்வியின் அர்த்தத்தை அறிய முடியாமல் அமைதியாக இருந்தார். பின்னர் பாபா பீஷ்மாவை, அவர் என்ன சொல்கிறார். என்று கேட்டார். ஸ்ரீராம நவமித் திருவிழா கொண்டாடுவதன் கருத்தை அவர் தெரிவித்துப் பாபாவின் அனுமதியைக் கோரினார். பாபாவும் உடனே அனுமதி கொடுத்தார். எல்லோரும் மகிழ்ச்சியுற்று ஜெயந்தி விழாவுக்கு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினர். மறுநாள் மசூதி துணி ஜோடனை முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டது. ராதாகிருஷ்ணமாயியால் ஒரு தொட்டில் கொடுக்கப்பட்டது. பாபாவின் ஆசனத்தில் முன்னர் அது வைக்கப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. பீஷ்மா கீர்த்தனைக்காக முன்னால் எழுந்து நின்றார். மஹாஜனி ஹார்மோனியம் வாசித்தார். மஹாஜனியைக் கூப்பிடும்படி சாயிபாபா ஒரு ஆளை அனுப்பினார். பாபா நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதிப்பாரா என ஐயம் கொண்டு அவர் (மஹாஜனி) போகத் தயங்கிக் கொண்டிருந்தார். ஆனால் அவர் போன பின்பு பாபா அவரை என்ன நடந்து கொண்டிருக்கிறது என்றும், தொட்டில் ஏன் அங்கு வைக்கப்பட்டிருக்கிறது என்றும் கேட்டார். அவர் (மஹாஜனி) ஸ்ரீராம நவமித் திருவிழா ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினார். அப்பொழுது பாபா நிம்பாரிலிருந்து ஒரு மாலையை எடுத்து அதை அவர் கழுத்திலிட்டு, பீஷ்மாவுக்கு மற்றொரு மாலையை அனுப்பினார். கீர்த்தனை தொடங்கியது. அது முடிவடைந்தும், ஸ்ரீராமருக்கு ஜெயம் என்ற கோஷம் வானைப் பிளந்தது. குலால் என்ற சிகப்புப் பொடி வாத்திய கோஷத்திடையே சுற்றிலும் தூவப்பட்டது. எல்லோரும் பெரு மகிழ்ச்சியுற்றிருக்கையில் ஒரு கர்ஜனை கேட்டது. கண்டபடி தூவப்பட்ட சிவப்புப் பொடியானது பாபாவின் கண்களுக்குள் சென்று விட்டது. பாபா கோபாவேசம் அடைந்து, பெருங்குரலில் திட்டவும், கடிந்து கொள்ளவும் ஆரம்பித்தார். இக்காட்சியால் மக்கள் பீதியடைந்து ஓட ஆரம்பித்தார்கள். பாபாவை நன்கு அறிந்த அவருடைய நெருங்கிய பக்தர்கள் பாபாவின் கடிந்துரைகளையும், திட்டல்களையும் வேஷமிடப்பட்ட ஆசீர்வாதங்கள் என்று எடுத்துக் கொண்டனர். ஸ்ரீராமா அவதரித்ததும், இராவணனையும் அஹங்காரம், கெட்ட எண்ணங்கள் முதலிய அவனுடைய அரக்கர்களையும் கொல்வதற்காக பாபா கடுமையான கோபாவேசம் அடைந்ததும் முறையே என அவர்கள் நினைத்தனர். மேலும் சீரடியில் ஏதாவதொரு புதிய வேலை ஆரம்பிக்கப்படுமானால், பாபா கடுமையான கோபம் கொள்வது வழக்கம். எனவே அவர்கள் அமைதியாக இருந்தார்கள். பாபா தமது தொட்டிலை உடைத்து விடுவார் என்று ராதாகிருஷ்ணமாயி பயந்து போய் மஹாஜனியிடம் தொட்டிலை எடுத்து வந்துவிடும்படி கூறினாள். அவர் சென்று தொட்டிலை அகற்ற வேண்டாம் என்று கூறிவிட்டார். பின்னர் சற்று நேரத்தில் பாபா சாந்தமடைந்தார். பின்பு மஹாபூஜை ஆரத்தி உள்ளிட்ட அந்நாளைய நிகழ்ச்சிகள் எல்லாம் நிறைவேறின. பிறகு மஹாஜனி பாபாவிடம் தொட்டிலை அப்புறப்படுத்த அனுமதி கேட்டார். இன்னும் விழா முடியவில்லை எனக் கூறி பாபா மறுத்துவிட்டார். அடுத்தநாள் கீர்த்தனையும் கோபால் காலை விழாவும் நடைபெற்றன. (கீர்த்தனைக்குப் பிறகு தயிரும், பொரி அரிசியும் கலந்த ஓர் மண் பானை உடைப்பதற்காகத் தொங்க விடப்பட்டிருக்கும், கிருஷ்ண பரமாத்மாவின் நண்பர்களான கோபாலர்களுக்குச் செய்ததையொப்ப, அதனுள் இருப்பவை எல்லோருக்கும் பகிர்ந்து அளிக்கப்படும்) அதன் பின்னரே பாபா, தொட்டிலை அப்புறப்படுத்த அனுமதித்தார். இவ்வாறாக ஸ்ரீராம நவமித்திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பகலில் இரண்டு கொடி ஊர்வலமும் வழக்கமான கோலாகலத்துடனும் அனைவரின் ஆரவாரத்துடனும் நல்ல முறையில் நடைபெற்றன. இத்தருணத்திலிருந்து பாபாவின் உருஸ் விழாவானது, ஸ்ரீராம நவமித் திருவிழாவாக மாற்றப்பட்டது.

(ஞானத்தை இன்னும் தேடுவோம்)

சீரடி சாயி பாபா, எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றையெல்லாம் தொகுத்து எழுதிய தொடர் இங்கு பிரசுரமாகின்றது.

சொற்சிலம்பம் போட்டி இல. 618



அனுப்புபவர் பெயர்:.....

விலாசம்:.....

.....

கையொப்பம்:.....

சொற்சிலம்பம் போட்டி இல. 618

சொற்சிலம்பம் போட்டி 618ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு மே 14 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே மே 21 மற்றும் மே28ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பரிசு விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மேலிருந்து கீழ்

1. இந்தியா.
2. மெல்லிய உலோகப் படை.
3. அசதி அடைதல்.
4. முகத்தில் வரும்.
5. இருமல் நோய் / கக்குவான்.
6. அதிர்ச்சி அடை.
8. உணவை அரைக்கும் உறுப்பு.
10. சிரசில் எழுதப்பட்டது.
12. ஓர் ஏவுகணை ரகம்.
13. மகன்மார்.
14. இதிலிருந்து தான் பஞ்சு எடுப்பர்.
15. தரவேண்டியது.
16. தகைமை நிலைமை.
21. உலர.

இடமிருந்து வலம்

1. பாதிப்பான அம்சம்.
4. ஒன்றின் பங்கு.
7. கலாட்டா.
8. மிகச் சிறிய அளவிலான உணவு/ உணவுத் துகள்.
9. மறித்தல்.
11. சிரசு.
12. மாட்சிமை.
14. பல வகையான ரகம்.
16. மரம்.
17. செல்வம்.
18. அரைவாசி.
19. கையால் கொடுக்கும் ஒரு தாக்குதல் வகை.
20. பெரிய.
22. சிரார்த்த நாள்.
23. வயதில் மூத்தவர்.

சொற்சிலம்பம் போட்டி இல. 616 க்கான விடைகள்

மேலிருந்து கீழ்

1. அசம்பாவிதம், 2. கலி, 3. பாவலன், 4. வடம், 5. கடல், 8. கதலி, 9. அரம், 10. புவனம், 12. மதலை, 15. எருமை, 16. பல்லவி, 18. விடுதி, 19. பகல், 20. கொடு,

இடமிருந்து வலம்

1. அகம்பாவம், 6. சனி, 7. வடை, 8. கடை, 9. அலம்புதல், 11. பாமரன், 13. வலி, 14. விதம், 15. என, 17. தலை, 18. விரும்பல், 20. கொடுமை, 21. கல, 22. சடுதி, 23. கல்வி,

போட்டி இல. 615இல் பரிசு பெற்றோர்

1ஆம் பரிசு – செல்வி சறோயினி சுந்தரலிங்கம், இல:-15, பகத்தல வீதி, கொள்ளுப்பிட்டி.

2ஆம் பரிசு – திருமதி ஆர். மஞ்சுளா, பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி.

3ஆம் பரிசு – சி. இராசரத்தினம், இல:-527, செல்வநாயகபுரம், திருகோணமலை.

பாராட்டுப் பெறுவோர்

(1) வ.ஆ. அதிரூபசிங்கம்,
அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

(2) திருமதி முகுந்தா ஜெயசோதி,
இல:- 93 2/5, பீட்டர்சன் வீதி, கொழும்பு-06.

(3) மு. ஹரிதாசன்,
1ஆம் வட்டாரம், முள்ளியவளை.

(4) திருமதி. சி. புஸ்பராணி,
வசந்தபவனம், மருதடி மேற்கு, சாவகச்சேரி.

(5) சியாம் தயாளன்,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

(6) வஸந்தா பாலேந்திரா,
இல:-21, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.

(7) எஸ். பாலசுப்பிரமணியம்,
இல:-176/37, லோவர் வீதி, உவர் மலை, திருகோணமலை.

(8) கனகசபை நாகேந்திரன்,
இல; 11-3/1, நெல்சன் இடம், கொழும்பு-06.

(9) ச. நவரத்தினம்,
இல:-7-1/19, காலி வீதி, கொழும்பு-06.

(10) வீ. செல்வநாயகம்,
சிவன் கோவில் வீதி, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலா? காமமா?

சிலவேளைகளில் வேதியல் பசியால் தூண்டப்பட்டு மனித மனம் பொருத்தமில்லாத துணை வர்களைத் தேர்ந்தெடுக்கும் நிலைக்கு ஆளாகிறது. அதைத் தொடரும் ஹார்மோன்களின் மாற்றமானது உறவு முறிவுக்கு இட்டுச் செல்கிறது. ஆனால் அதை எதிர்கொள்ளத் தெரியாமல் காதல் பற்றிய புனித வசனங்களை திரைப்படங்களின் பாதிப்பினால், சமூக நெருக்கடியால் பேசிக்கொண்டு ஒருவரை ஒருவர் அழிக்கும் செயலுக்கோ அல்லது சுய அழிப்புக்கோ செல்லும் நிலை ஏற்படுகிறது. முதல்

ஈர்ப்பு எனும் கவர்ச்சி பதின்பருவ வயதிலேயே ஏற்பட்டுவிடுகிறது. அது தன் ஆளுமை பற்றிய ஒரு மாயையில் உழல உதவுகிறது. ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள நிறைய செய்திகள், அது பவங்கள் இருக்கையில் அருகாமை என்பது ஒரு ஆர்வமூட்டும் உணர்வை ஏற்படுத்துகிறது (இங்கு எண்டார்பின் எனும் சுரப்பி வேலை செய்கிறது), அதைத் தொடர்ந்து ஒரு நம்பிக்கை வளர்ந்து தனது பிற்பகுதி வாழ்க்கைக்கான துணையாக அவரைக் கருதும் உணர்வு மேலோங்குகிறது. அதன் பிறகு அதற்கேயுரிய சோதனை முயற்சிகள், உறவின் மீது கட்டளைகள் என்று வளர்கிறது. நடைமுறையில் சில நடவடிக்கைகள் நெருடல்களை ஏற்படுத்தும்போது அது தன் ஆளுமைக் கான வீழ்ச்சியாக கருதப்படுகிறதே ஒழிய இரண்டு உயிர்கள், இரண்டு அனுபவங்கள், இரண்டு சிந்தனை சக்திகள் ஏதோ சில காரணங்களால் இணையமுடியாத நிலையாக கருதப்படு

ஒரு சர்ச்சைத் தொடர்

வதில்லை. மாயாவாத புனிதக் கதையாடல்கள், தன்முனைப்பாற்றல்கள் குறுக்கிட்டுவிடுகின்றன. (எப்படிப்பட்ட வேதியல் பசி இருப்பினும் மூளையானது தனக்கான உடல் தேர்வில் கவனத்துடன் இருக் கிறது. கறுப்பு உடல்கள், அழகற்றது என்று சொல்லப்படும் குறியீட்டின் கீழ் வரும் உடல்கள், ஏழை யின் உடல்கள், மாற்றுச் சாதி உடல்கள் இவற்றுக்கு சமூகத்தில் கிடைக்கும் வரவேற்பு எத்தகையது?)

ஒரு காதல் உறவு முறிந்து மற்றொரு காதல் உறவு துவங்குவதும் இரசாயனவியல் சுழற்சியே. இழந்த பரவசங்களை, மனவெழுச்சிகளை கண்டடையும் வேட்கை. அதைத் தேடிச் செல்லவில்லையென்றாலும், அத்தகைய ஒரு நபரைக் காணும்போது இயல்புக்கமாக அது அமைந்துவிடுகிறது. மனவெழுச்சி சார்ந்த இந்த உணர்வில், ஒவ்வொருவரும் வாழ்க்கை முழுவதற்குமான ஒரு பிணைப்பினை ஏற்படுத்திக் கொள்ள, உண்மையான ஒரு காதலைத் தொடர்ந்து தேடிக்கொண்டு இருக்கிறார்கள். காதலில் ஈடுபடும் இருவரும் ஒருவரை ஒருவர் உடமையாக்கிக் கொள்ள முயல்கிறார்களே ஒழிய தோழமையோடு சம உரிமைகளைப் பகிர்ந்து கொள்வதில்லை. காதல் என்று சொன்னாலும் அங்கும் செயற்படுவது குடும்ப உறவின் கணவன் மனைவி தாக்கமே. ஆண் மேலானவன், பொருளீட்டி பெண்ணைப் பராமரிப்பவன் எனும் அதிகாரப்போக்கே காதல் உறவிலும் செயல்படுகிறது. ஆண்களும் பெண்களும் ஒரே வாக் கியத்தைப் பேசும்போதுகூட, அவர்கள் முற்றிலும் வேறுபட்ட பொருளை அதன் மூலம் குறிப் பிடுகிறார்கள் என்று டீபோரா டேனன் என்ற ஆய்வாளர் 'நீ புரிந்து கொள்ளவில்லை' (You Just Dont Understand) என்ற தனது நூலில் கேளிக்கையாக சுறியிருக்கிறார்.

சுருக்கமாகச் சொல்வதானால் காதல் என்பது தனியே தோன்றும் ஒரு உணர்ச்சியல்ல. அது ஒரு வகையான இயல்புக்கம் சார்ந்த உயிரியல் கட்டளை என்ற அறிவியல் பூர்வ அணுகு முறை.அது உறவுகளைக் கையாள்வதில் அவசியமாகிறது. ஊடகங்கள், திரைப்படங்கள், விளம்பரங்கள் எடுத்துரைக்கும் காதல் மாயையிலிருந்து விடுபட்டு நமக்கான உணர்வை, உறவுத் தேடலில் நமக்கான விதிமுறைகளை நம் சொந்த அனுபவத்திலிருந்து வகுத்துக்கொள்வதன் மூலம் உறவுகளை செழுமைப் படுத்திக் கொள்ள முடியும்.

இங்கு ஒரு விடயத்தை அழுத்தம் கொடுத்து சொல்ல வேண்டியுள்ளது. இப்போது நாம் துய்க்கும் காதலானது, நுகர்வுக் காதல். இலக்கியம், முதலாளிகள், திரைப்படங்கள், வெகுஜன ஊடகங்கள், இவைகள் கற்றுக் கொடுக்கும் காதலை சுரணையற்ற பண்பாடுகளாக அப்படியே ஏற்றுக் கொள்கிறோம். ஒரு பெண்ணை எங்கு தொட வேண்டும், என்ன வார்த்தைகளைச் சொல்லிக் கவர வேண்டும், என்ன பரிசுப் பொருள் கொடுக்க வேண்டும், எப்படி உடல் உறவை தொடங்க வேண்டும் என்று எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கிறார்கள். சுதந்திரம் எனும் சொல்லை கொச்சை சொல்லாக, பொறுப்பற்ற செயல்பாடுகளாக மாற்றுவதில் இந்த ஆணாதிக்க அதிகார மையங்கள் வெற்றி பெற்றுள்ளன. அதிலிருந்து எப்போது ஒரு ஆணும் பெண்ணும் விடுபட்டு தம் மனவெண்ணப்படி உறவாடு கிறார்களோ அப்போதுதான் காதல் அல்லது காமம் என்பது அவர்கள் விரும்பியபடி அமையமுடியும்.

இளைய தலைமுறையினருக்கு காதல் வந்துவிட்டால் அவர்கள் மற்றவர்களைப் பற்றி கவலை கொள்வதே இல்லை. தன் வீட்டில் என்ன நடக்கிறது, பெற்றோர்கள் என்ன நினைக் கிறார்கள் என எதைப் பற்றியும் சிந்திக்க இன்றைய அவசரக்கார காதலர்களுக்கு நேரம் இல்லை.

கண்டவுடன் காதல், பேஸ் புக்கில் காதல், இன்ஸ்டாகிராமில் காதல், மொபைல் போனில் காதல் என இன்றைக்கு காதல் பல பரிமாணங்களை எடுத்துள்ளது.இவ்வாறு துளிர்த்த காதல் கசிந்து போவதற்கு முன் திருமணம் செய்துவிட வேண்டும் என்ற எண்ணம் இன்று பெரும்பான்மையான ஆண்களிடம் மற்றும் பெண்களிடம் இருக்கிறது.

ஆண், பெண் இருவரும் பொருளாதாரத்தில் பெற்றோரைச் சாராமல் இருந்துவிட்டால் அவர்களின் சம்மதத்தை கூட கேட்காமல் அவசரமாக நான்கு நண்பர்கள் முன்னிலையில் ஆயிரம் காலத்துப் பயிரினை நடத்தியும் விடுவார்கள்.

உங்கள் காதல் உண்மையாக இருந்து இல்லற வாழ்க்கை சந்தோஷமாக இருந்தால் பிரச்சினை இல்லை.அதுவே வயதால் ஏற்படும் சலனத்தால் காதலித்து அது திருமணத்தில் முடிந்து இல்லற வாழ்வில் பிரச்சினை வரும்போதுதான் பெற்றோரின் நினைவு வரும்.

காதலுக்குப் பச்சைக்கொடி: பெற்றோரைக் காட்ட வைப்பது எப்படி?

காலம் கடந்த பிறகு இதையெல்லாம் யோசித்துச் சங்கடப்படுவதை விட காதலிக்கும்போதே அதைப் பெற்றோரிடம் தெரிவித்து அவர்களின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்வது நல்லது.உங்கள் காதல் நிலைப்புத்தன்மை இல்லாமல் இருந்தால் அதைப் பெற்றோர்கள் சுலபமாகக் கண்டுபிடித்து விடுவர்.

இவை எல்லாவற்றையும் விட இருவீட்டாரின் சம்மதத்துடனும் ஆசீர்வாதத்துடனும் நடக்கும் திருமணம் நீடித்து நிலைக்க நிறைய வாய்ப்புகள் உள்ளது.

உங்கள் காதலுக்கு பெற்றோர் சம்மதம் தெரிவிக்க சில முறைகளை கையாளலாம். அவற்றில் சில,

1. பெற்றோருக்கு சிறிது நேரம் கொடுங்கள்.
2. அவர்கள் உங்கள் காதலரை வெறுக் கும் காரணத்தை கண்டறியுங்கள்.
3. உங்கள் காதலரிடம் இதைப்பற்றி பேசாதீர்கள்.
4. உங்கள் குடும்பத்தினரிடம் மனம்விட்டு பேசுங்கள்.
5. அவர்களின் இடத்திலிருந்து யோசி யுங்கள்.
6. உங்கள் விருப்பத்தையும், உணர்வு களையும் பெற்றோருக்குப் புரிய வைக்க முயலுங்கள்.
7. பெற்றோரை வெறுத்துவிடாதீர்கள்.
8. பொறுமையாக இருந்து உங்கள் காதலை நிரூபியுங்கள்.
9. அவர்களின் விருப்படி உங்கள் காதலரின் நடவடிக்கைகளை மாற்றமுடியுமா என்று பாருங்கள்.
10. உங்களது பெற்றோர் உங்களுக்கு முக்கியம் என்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள்.

சில நேரங்களில் இவை அனைத்தும் உபயோகப்படாமல் போகலாம். பெற்றோர்கள் வரட்டு கௌரவம், அந்தஸ்து போன்ற காரணங்களுக்காக உங்கள் காதலை எதிர்க்கும்போது, உங் கள் காதலின் மீது கலைக்க முடியாத நம்பிக்கை இருந்தால் நன்கு சிந்தித்து உங்களின் வாழ்வைத் தேர்தெடுங்கள்.

ஈரடியில் இதயங்கள் பற்றி...! 6

இரண்டே வரிகளில் உலகின் அத்தனை விடயங்களையும் அடக்கிய திருக்குறளில் காமத்துப் பாலை யாரும் பொருத்தமாகக் கண்டுகொள்வதில்லை. ஆனால் எந்தக் காலக் காதலுக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களை அது கொண்டுள்ளது. வள்ளுவர் எழுதிய காதல் குறள்களுக்கு நவீன கவிதைவடிவில் பொருள் சொல்லும் ஒரு புதிய முயற்சியே இந்தப் பகுதி.

குறள் 1114:
காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று.

அவள் கண்களிடம்
தோற்ற சோகத்தில்
பூக்கள் கணிசமாகத்
தூக்கில் தொங்கும்.

காம்பு கிள்ளி எறியாது
கனகாம்பரம் கூடியதில்
துவண்டு ஒடிந்து விழும்
அவள் 24 இஞ்சி இடுப்பு.

குறள் 1115:
அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுகப்பிற்கு
நல்ல படாஅ பறை.

— சரவணா கார்த்திகேயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீச்சல் உடையில் தமன்னா

தமிழ், தெலுங்கு படங்களில் நடித்துள்ள தமன்னா கவர்ச்சி நாயகியாக நடித்திருந்தாலும் இதுவரை நீச்சல் உடை அணிந்து நடித்ததில்லை. இது பற்றி அவர் தனது பேட்டிகளில் குறிப்பிடும்போது, நடிப்பு மற்றும் உடை அணிவதைப் பொறுத்தவரை எனக்கென்று சில கட்டுப்பாடுகள் விதித்துக்கொண்டு அதன்படித்தான் இதுவரை நடித்து வந்துள்ளேன். நீச்சல் உடை அணிந்து நடிக்கும் எண்ணம் இல்லை. அணியவும் மாட்டேன். இது சபதம் என்று குறிப்பிட்டிருந்தார்.

அவரது இந்த கட்டுப்பாடு காற்றோடு போய்விட்டதாக ஹிந்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது தமன்னா ஹம்ஷகல்ஸ் என்ற ஹிந்தி படத்தில் நடித்து வருகிறார். இதில் தமன்னாவுடன் இணைந்து சயீப் அலிகான், பிபாசா பாசு, ரிதேஷ் தேஷ்முக் மற்றும் பலர் நடிக்கின்றனர். சாஜித்கான் இயக்குகிறார். படத்தின் ஒரு காட்சியில் தமன்னா நீச்சல் உடை அணிந்து நடிக்க வேண்டி இருந்ததாம்.

ஆனால் இதை வற்புறுத்த விரும்பாத இயக்குனர், தமன்னாவின் முடிவுக்கே விட்டுவிட்டாராம். இயக்குனரின் இந்த மென்மையான போக்கு தமன்னாவைக் கவரவே உடனே மறுப்பேதும் சொல்லாமல் நீச்சல் உடை அணிந்து நடிக்க ஒப்புக்கொண்டாராம்.

ரசிகர்களின் எதிர்பார்ப்பில் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்

சந்தானம் நாயகனாக நடிக்கும் படம் 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்'. இவருக்கு ஜோடியாக ஆஷ்னா சாவேரி நடிக்கிறார். இவர்களுடன் மிர்ச்சி செந்தில் முக்கிய வேடம் ஏற்றிருக்கிறார்.

நகைச்சுவை நடிகர் ஸ்ரீசாந்த் இந்தப் படத்தை இயக்குகிறார்.

சித்தார்த் இசையமைக்கிறார்.

சக்தி ஒளிப்பதிவை மேற்கொள்கிறார்.

இந்தப்படத்தில் சந்தானம் கதாநாயகனாக நடிப்பதற்கென தீவிர எடை குறைப்பில் ஈடுபட்டு இப்போது வயது இளைஞன் போல் மாறியுள்ளார். மேலும் நடனம், சண்டை பயிற்சிகளையும் மேற்கொண்டு உள்ளார்.

சமீபத்தில் இந்தப் படத்தின் இசை வெளியீடு மற்றும் படத்தின் முன்னோட்டம் வெளியானது. இது ரசிகர்கள் மத்தியில் பெறும் வரவேற்பை பெற்றுள்ளது.

படம் : வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்

ராஜ ராஜ சோழனின்

மடிசார் மாமி புளிப்பு இனிப்பாக மாறியது

மடிசார் மாமி' படத்தின் தலைப்பு இப்போது 'புளிப்பு இனிப்பு' என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. படம் தணிக்கை செய்யப்பட்டு வெளியாக இருந்த நிலையில், தலைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதையடுத்து, இந்தப் படத்தின் தலைப்பு 'புளிப்பு இனிப்பு' என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து இப்படத்தின் தயாரிப்பாளர்களின் ஒருவரான சுஷாந்த் கத்ரு கூறுகையில், நீதிமன்றத்தின் உத்தரவுப்படியும், எந்த ஒரு மனிதனின் மனதையும் பாதிப்பது நல்ல சினிமாவாகாது, என்கிற உரிய நோக்கத்தோடும் இந்தப் படத்தின் தலைப்பை 'புளிப்பு இனிப்பு' என்று மாற்றி வைத்துள்ளோம். குடும்பத்தோடு பார்க்கக்கூடிய நகைச்சுவைப் படமாக உருவாகியுள்ள இப்படம் இரண்டு மணி நேர நகைச்சுவை கலாட்டாவாக உருவாக்கப் பட்டுள்ளது. மேலும் அவர் மடிசார் மாமி என்ற தலைப்பு வைத்ததற்காக தனது வருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டார். மிதுன், மான்சி ஜோடியாக நடித்துள்ள இந்தப்படத்தை சுஷாந்த் தயாரித்துள்ளார்.

ரோமியோ ஜூலியட்

ஜெயம் ரவி,
ஹன்சிகா மோத்வானி
இயக்குனர் : லக்ஷ்மண்



பாகுபாலியில் தமன்னா

நடிகை தமன்னா தமிழில் 'பாஸ் என்கிற பாஸ்கரன்' இரண்டாம் பாகத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

மேலும் தமிழ், தெலுங்கில் தயாராகும் 'பாகுபலி' மற்றும் இரண்டு படங்களிலும் வெவ்வேறு வேடங்களில் நடிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன் போர் வாள்

இற்றைக்குபலநூறு ஆண்டுக ளுக்கு முன்பு தஞ்சையை ஆண்ட சோழ மன்னன் ராஜ ராஜ சோழ னின் போர்வாளை மை யமாகக் கொண்டு உருவாகும் படம்தான் ராஜராஜ சோழனின் போர்வாள். இந்தப் படத்தில் பாடலாசிரியர் சினேகன் நாயகனாக நடிக்கிறார். சரித்திர கால காட்சிகள் அப்படத் தில் ஒரு 25 நிமிடம்தான் வருகி றது என்றாலும். அந்த காலகட் டத்தை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் களாம். அதிலும், போர்வாள்தான் படத்தின் மையம் என்பதால், அதுபற்றி அதிகம் விவரமாக சொல்ல வேண்டும் என்பதற்காக அந்த வாள் பற்றிய தகவல்களை தஞ்சை பகுதியில் விசாரித்த போது யாருக்குமே தெரியவில்லையாம். கடைசியாக, கல்வெட்டுகளில் அந்த வாள் பற்றிய செய்தியை கண்டுபிடித்து அதில் குறிப்பிடப் பட்டிருந்த ஊருக்குசென்று தக வலை சேகரித்தார்களாம்.

மாற்றுத் திறனாளி நடிகை அபிநயா நாடோடி கள் படத்தின் மூலம் அறிமுகமானவர். அதன் பிறகு ஈசன் படத்தில் நடித்தார். இங்கு போதிய வாய்ப்புகள் இல்லாமல் மலையாள படங்களில் நடிக்கத் தொடங்கினார். இப்போது பூஜை படத்தின் மூலம் மீண்டும் தமிழுக்கு வருகிறார். ஹரி இயக்கும் இந்தப் படத்தில் அபிநயா விஷ ாலின் ஒன்றுவிட்ட சகோதரியாக நடிக்கிறார். இதுகுறித்து அபிநயாவின் தந்தை கூறும்போது... அபிநயா இப்போது மலையாளத்தில் தீவிரமாக நடித்துக் கொண்டிருக்கிறார். அங்கு கதாநாயகி யாகவும் நடிக்கிறார். பூஜை படத்தில் கதைக்கு மிக முக்கியமான வேடத்தில் நடிக்கின்றார். அவரை ஒட்டியே படத்தின் கதை நகரும். மீண்டும் தமி ழில் நடிக்க வந்திருப்பது அபிநயாவுக்கு மிகவும் சந்தோஷம் என்றார்.



ஷெர்லின் தமிழில் ....

சரவணன் இயக்கத்தில் ஜெய், சுவாதி நடித்திருக்கும் படம் 'வடகறி'. ஹிந்தியில் கவர்ச்சியில் கலக்கிக்கொண்டிருக்கும் பட நடிகை சன்னி லியோன் முதன் முறை யாக இப்படம் மூலம் தமி ழில் அறிமுகமாகிறார். பாவாடை, தாவணி அணிந்து ஜெய்யுடன் அவர் குத்துப்பாடலுக்கு ஆடியிருக்கிறார். சென்னை வாலிபராக ஜெய் நடிக்க, அவரது காதலியாக சுவாதி நடிக்கிறார். சன்னி லியோனின் வரவையடுத்து மற்றொரு ஹிந்தி கவர்ச்சி நடிகை ஷெர்லின் சோப்ராவும் தமிழில் நடிக்க ஆர்வம் வெளிப்படுத்தியிருக்கிறார். இதுபற்றி ஷெர்லின் கூறும்போது, இயக்குநர் ஷாஜித் பேட் கேர்ள் என்ற மலையாள படத்தின் கதையை கூறினார். பிடித்திருந்தது. நடிக்க ஒப்புக்கொண்டேன். தமி ழில் நடிப்பீர்களா? என்கிறார்கள். தென்னிந்திய திரைப்பட துறையினர் மீது எனக்கு நிறைய மரி யாதை உண்டு. அவர்களது திறமையைக் கண்டு வியந்திருக்கிறேன் என்றார்.

பூ திவ்யா

இயக்குனர் : பரதன்

திரை விமர்சனம் ஆண்டவா காப்பாத்து

ஜாதகம், ஜோதிடம், வாஸ்து, நியூமராலஜி ஆகியவை மனிதனின் மூடநம்பிக்கை என்றும், நம்பிக்கை இருந்தால் இவை எல்லாம் தேவையில்லை என்றும் கூறும் படமே 'ஆண்டவா காப்பாத்து'.

நாயகன் ஹரிஷ் கோவை யில் தாய், தம்பியுடன் வாழ்ந்து வருகிறார். நீண்ட நாட்களாக வேலை சரியாக அமையாமல் இருக்கும் ஹரிசுக்கு தாய் மாமா வின் மூலம் அரியலூரில் சீமெந்துத் தொழிற்சாலையில் வேலைக்கு சேர அழைப்பு வருகிறது. வரும் பொழுது மாமா கல்விசான்றிதழ்களை எடுத்து வரச் சொல்கிறார். இத னால் வீட்டில் இருந்து 7 மணி நேரத்தில் சென்று விடக்கூடிய இடத்திற்கு, 33 மணி நேரத்திற்கு முன்னதாகவே கிளம்புகிறார். போகும் வழியில் கடன்பெற வங்கிக்கு செல்லும் ஹரிஷ், அங்கு முகாமையாளருடன் மோதலில் ஈடுபடுகிறார். தனக்கு அவசரமாக தேவை என்பதால் அவரை மாலை 5 மணிக்கு வர சொல்கிறார் முகாமையாளர். அங்கேயே தங்கியிருந்து மாலை 5 மணிக்கு சான்றிதழ்களை வாங்கி அங்கிருந்து புறப்படுகிறார். திருச்சி பஸ்சில் ஏறும் ஹரிஷ், செல்லும் வழியில் பஸ் நிற்கும்போது சாப்பிட இறங்குகிறார். இதனால் பஸ்சை தவற விடுகிறார். பஸ்சில் தான் கொண்டு வந்த பை மற்றும் சான்றிதழ்களையும் தவற விடுகிறார். தவற விட்ட பஸ்சை தேடி அலையும் ஹரிஷ், தன் பை மற்றும் சான்றிதழ்கள் பொலிஸ் நிலையத்தில் இருப்பதை அறிந்து அங்கு சென்று அவற்றைப் பெற்றுக்கொண்டு புறப்படுகிறார்.

ஒருபக்கம் நேரம் ஆகிக் கொண்டேஇருப்பதால் மாமா தொலைபேசியில் தொடர்புகொண்டு விரைவாக வரச் சொல்கிறார். பிறகு மாமா வின் அறிவுரைப்படி பெரம்பலூ ரில் இறங்கி சென்னை பஸ்சில் ஏற முடிவு செய்கிறார். ஆனால், நடத்துநரிடம் ஏற்பட்ட பிரச்சினையால் பெரம்பலூரில் இறங்க முடியாமால் போகிறது. இப்படி பல்வேறு காரணங்களால் குறிப்பிட்ட 7 மணிக்குள் மாமா சொல்லும் வேலைக்கு செல்ல முடியாமல் போகிறது. இறுதியில் ஹரிஷ்க்கு தன்னம்பிக்கை மூலம் சரியான காதலியுடன் சேர்ந்தாரா? என்பதே மீதிக்கதை.

படத்தில் நாயகன் ஹரிசுக்கு நடிக்க அதிக வாய்ப்பு. அதை திறம்பட செய்ய முயற்சி செய்திருக்கிறார். நாயகி ஆலீசாவிற்கு நடிக்க வாய்ப்பு குறைவு.

படம் முழுக்க ஹரிசை சுற்றியே திரைக்கதையை அமைத்திருக்கிறார் இயக்குனர் லெபின். நல்ல கதையை எடுத்துக் கொண்ட இயக்குனர், அதை எப்படி கையாள் வது என்று தெரியாமல் தடுமாறியிருக்கிறார். சொல்ல வருவதை கொஞ்சம் தெளிவாக சொல்லியிருந்தால் படம் இன்னும் ரசிக்கும்படியாக இருந் திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு சாதனைப் பயணம். ஆனால் இவர்கள் பணத்துக்காகவோ அல்லது புகழுக்காகவோ இந்தச் சாதனையைச் செய்யவில்லை. ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான சண்டையில் சிக்கிவிடக்கூடாது என்ற அச்சத்தில் ஊர்மக்கள் வெளியேற முற்பட்டனர். ஆனால் இருந்ததோ அப்போது ஒரே ஒருவாகனம் மட்டுமே. உயிர் தப்பும் அவசரத்தில் எல்லோரும் தங்கள் உடமைகளோடு அந்த வாகனத்திலேயே ஏறிக்கொண்டார்கள் அவர்களுடைய அதிர்ஷ்டம் அந்த வாகனம் கிட்டத்தட்ட 19 கிலோமீற்றர் வரை பயணித்து பாதுகாப்பான இடத்தில் அவர்களைக் கொண்டு போய்ச் சேர்த்தது. இதுவே ஒரு சிறிய வாகனத்தில் அதிகம் பேர் பயணித்த சாதனையை ஏற்படுத்திவிட்டது.

காலம் மாறினாலும்....

ஆடையை மாற்றுவது போன்று அடிக்கடி தங்கள் காதலர்களை மாற்றிக்கொள்வது இப்போது ஒரு நாகரிகமாகவே மாறிவிட்டது. இத்தகைய காதல்கள் உண்மையில் காமத்தை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளன.

ஆனால் இதயத்தில் பிறப்பெடுத்த உண்மைக் காதல்கள் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மாறுவதில்லை. அதற்குச் சாட்சியாக தாய்லாந்தைச் சேர்ந்த இந்தக் காதல் ஜோடிகள் 50 வருடங்களுக்கு முன்னர் தாங்கள் முதன் முதலாகப் புகைப்படம் எடுத்துக் கொண்ட கடற்கரையில் அதே காதலோடு இந்த வருடமும் புகைப்படம் எடுத்து அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்திருக்கிறார்கள்.

நிலம் - 13

3 கிராமங்களின் கதை

அது ஓர் அழகிய நிலாக்காலம்

மகாலிங்கம் பத்மநாபன்

ஆடு, கோழி வெட்டல்

கொடுமை. சொல்ல வொண்ணாத கொடுமை. அரசு சட்டம் போட்டுத் தடுக்கும் வரை ஒரு வெள்ளைக்கிடாய், ஒரு கறுப்புக் கிடாய் மற்றும் நேர்த்தியாக வந்த வெள்ளை, கறுப்பு சேவல்கள் வெட்டல். பொங்கலின் இறுதியில் நன்கு அலங்கரிக்கப்பட்டு, மாலையிடப்பட்ட ஆடுகள் உண்ண உணவு கொடுத்து, அவை உணவை முகர்ந்து பார்க்கும் போது கழுத்தில் ஒரே வெட்டாக வெட்டிப் பலி கொடுப்பார்கள். வெள்ளைக் கிடாயின் இறைச்சி மூப்பர்களுக்கும் கறுப்புக் கிடாய் இறைச்சி கட்டாடியாருக்கும் போய்ச்சேரும். அரசு சட்டத்தை கடுமையாக்கி உயிர்ப்பலி கொடுப்பதைத் தடுத்த பின்னர், இளநீர்களையும் அவற்றின் மேல் வைத்த தேசிக்காய்களையும் ஒரே வெட்டாக வெட்டி மனத்தை திருப்திப் படுத்திக் கொண் டார்கள்.

தீக்குளிப்பு

பெருமரங்களை அடுக்கி வியாழன் காலையே எரிக்கத் தொடங்குவார்கள். தொடர்ந்து விறகுகள் போட்டுப் போட்டு செந்தணலாக ஆகுமட்டும் எரிப்பார்கள். கலையாடும் பூசாரிமார் பறை மேளத்தின் தாளத்திற்கேற்ப இந்தத்தணலில் நின்று ஆடுவார்கள். அவர்களைத் தொடர்ந்து கதிர்காம யாத்திரை போக விரும்பியோரும், நேர்த்திக்கடன் செய்வோரும் தீக்குளிப்பர். கதிர்காம யாத்திரை போக விரும்பியோருக்கு காலில் தீப்புண் ஏற்பட்டால் அவரது யாத்திரைக்கு காளி அனுமதி அளிக்கவில்லை என்று பொருள். அனுமதி பெற்றவர்கள் வன்னிவிளாங்குளம் சென்று அங்கு சேர்ந்த யாத்திரிகர்களுடன் வற்றாப்பளை அம்மன் பொங்கலுக்குப் போய், அங்கிருந்து தென்னை மரவடி, மட்டக்களப்பு ஊடாகக் கதிர்காமம் செல்வர்.

கலையாட்டம்

காளிக்காகப் பிரதம பூசகரும், வீரபத்திரர், வைரவர் போன்ற பிற தெய்வங்களுக்கு உதவிய பூசாரி மாரும் கலையாடுவர். சில பெண்களும் கலை வந்து ஆடுவர். இரவிரவாகக் கலையாட்டம் நடைபெறும். கலையாடுவோர் கலையாடுவதுடன் கட்டும் சொல்வர். தீராத நோயாளிகள், பேய் பிடித்தோர் முதலியவர்களுக்கும் திருநீறு இட்டு, நோயை மாற்றுவதற்குரிய வழிவகைகளைக் கட்டாகச் சொல்வர். பக்தர்கள் யாவருக்கும் பிரதம பூசாரி திருநீறு இடுவார்.

எட்டாம் மடை

பொங்கல் நடந்து அடுத்த வெள்ளியன்று மோதகம், வடை, வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் முதலியன படைத்து மடை போடப்படும். மடையின் போதும் கலையாட்டம் இடம்பெறும். பொங்கலின் போது தவறியவர்களுக்கு கட்டு சொல்லலும், திருநீறு இடலும் இடம்பெறும். சிறுவர்களுக்கு போதும் போதுமென்று சொல்லுமட்டும் மோதகம், வடை, பழங்கள் என்பன வழங்கப்படும். அடுத்த ஆண்டு எப்போது வரும், பொங்கலும் மடையும் எப்போது வரும் என்ற ஏக்கத்துடன் பெரியோரும் சிறுவரும் தத்தம் வீடு போய்ச் சேர்வர்.

(இன்னும் நிலம் விரியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரப் பறந்த ஏபெண் குருவி

ஒரு நாள் அமெலியா வேலையில் மூழ்கியிருந்தபோது, திடீரென ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அது ஏதோ தவறான அழைப்பு என்றுதான் முதலில் அவருக்குத் தோன்றியது. ஆனால், எதிர்ப்புறத்தில் இருந்தவர், அட்லாண்டிக் பெருங்கடலை விமானத்தில் கடந்த முதல் பெண்ணாக மாற ஆசைப்படுகிறீர்களா? என்று கேட்டபோது, மற்றப் பெண்களைப் போல அமெலியா ஆச்சரியத்தில் வாயைப் பிளக்கவில்லை. உறுதியாக, ஆமாம் என்றார். அவரை விமானத்தில் அனுப்பத் திட்டமிட்ட குழுவில் புத்தகப் பதிப்பாளர் ஜார்ஜ் பி. புட்னமும் அடக்கம். விமானி வில்மர் பில் ஸ்டல்ட்ஸ், துணை விமானி-மெக்கானிக் லூயி கார்டான் இருவருடன் அந்தச் சாகசப் பயணத்தில் அமெலியா பறந்தார். அவர்கள் சென்ற விமானம் அமெரிக்காவின் நியூஃபவுண்ட்லாண்டில் புறப்பட்டு 21 மணி நேரத்தில் பிரிட்டன் வேல்ஸில் தரை இறங்கியது. இந்தத் திருப்பு முனைப் பயணம் உலகெங்கும் தலைப்புச் செய்தியானது. அதற்குக் காரணம், அதே ஆண்டில் இந்தச் சாதனையைப் புரிய முயற்சித்த 3 பெண்கள் மரித்துப் போயிருந்ததுதான். அப்போது விமானம் கண்டுபிடிக்கப்பட்டு 10-20 ஆண்டுகளே ஆகியிருந்ததால், அந்தக் காலத்தில் விமானத்தில் பயணிப்பதே மிகப் பெரிய சாகசமாகக் கருதப் பட்டது. இந்தநிலையில் பெருங்கடல்களைத் தாண்டுவது என்பது அசாதாரணமான சாதனைதான்.

(பறப்பாள்)

கண்ணழகே கண்ணழகே..!



உடலழகைப் பேணுவதிலும் அதனை நேர்த்தியான முறையில் மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதிலும் கண்களுக்கு இருக்கின்ற பங்கு மிகப்பெரியது.அதனால் தான் கண்களின் பாதுகாப்பு என்பது மருத்துவ ரீதியாவும் சரி,அழகியல் ரீதியாகவும் சரி முக்கியம் பெறுகின்றது.அதனால் கண்களின் பாதுகாப்பு மற்றும பராமரிப்பு என்பது பெண்களுக்கு அவசியமான ஒன்றாகும்.

பொதுவாகக் கண்களைச் செயற்கைப் பூச்சுக்களால் அழகு படுத்துவதை விட அதை இயற்கையான முறையில் பாதுகாக்க வேண்டும்.வேலைக்குச் செல்லும் பெண்கள் , அதிக நேரம் படிக்கின்ற பெண்கள் கண்களை ஒரேயடியாக ஓரிடத்தில் பதியவைக்கக்கூடாது. குறிப்பிட்ட நேர இடைவெளியில் கண்களின் குறித்த செயற்பாட்டிற்கு விடுதலை அளிக்கவேண்டும்.

தூக்கத்தை மறந்து அதிக நேரம் கண்விழித்துப் படிப்பதும் கண்ணுக்கு நல்லதல்ல.வேண்டப் படுகின்ற அளவு தூக்கம் கண் மற்றும் உடலாரோக்கியத்துக்கு அவசியமாகும்.அதுமட்டுமன்றி கணனியைப் பாவிக்கின்ற பெண்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் ஒரேயடியாக கணனிமுன் இருப்பதோ அல்லது உரிய முறையில் கண்ணுக்கான பாதுகாப்பைத் தேடிக்கொள்ளாது செயற்படுவதோ பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.



எந்தக்குழந்தையும் நல்ல குழந்தை தான்.!

அத்தை உள்ளே சென்றார்.போனவர் வாயில் ஏதோ முணுமுணுத்தபடி வெளியே வந்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் உள்ளே கென்று பார்த்துவிட்டு திரும்பிவரும்பொழுதும் அவரின் முணுமுணுப்பு குறையவில்லை.

என்ன அத்தை ஏதாவது பிரச்சினையா..?

இல்ல பிள்ள..நான் மூத்தது ஆம்பிளப் பிள்ளயா இருந்த நல்லம் எண்டு நினைச்சன் .அவள் பெட்டக்குட்டிய பெத்துவைச்சிருக்கிறாள்

என்னுடைய கணவரின் தங்கை பிரசவத்திற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இது அவருக்கு முதற்பிரசவம். ஆதலால் சுகப்பிரசவமாக நடைபெறவேண்டுமென்று எல்லோரும் வேண்டிக் கொண்டிருந்தனர். நானும் எனது கணவரும் என்னுடைய அத்தையும் அதிகாலையே வைத்தியசாலைக்கு சென்றிருந்தோம்.

காலை பதினொரு மணியிருக்கும்.பிரசவம் சுகமாக நடந்தேறியது என்ற தகவலோடு வைத்தியத்தாதி ஒருவர் வெளியே வந்தார்.எல்லோர் முகங்களிலும் அப்போது தான் நிம்மதி வந்து ஒட்டிக்கொண்டது.சுமார் இரண்டு மணிநேரம் கழித்த ஒவ்வொருவராக உள்ளே சென்று தாயையும் பிள்ளையையும் பார்க்க அனுமதிக்கப்பட்டார்கள்.

தங்கையின் கணவர் உள்ளே சென்ற மனைவியைப் பார்த்துவிட்டு இனிப்பு வாங்க வெளியே சென்றுவிட்டார். தொடர்ந்து அத்தை உள்ளே சென்றார்.போனவர் வாயில் ஏதோ முணுமுணுத்தபடி வெளியே வந்தார்.எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் உள்ளே சென்று பார்த்துவிட்டு திரும்பிவரும்பொழுதும் அவரின் முணு முணுப்பு குறையவில்லை.

என்ன அத்தை ஏதாவது பிரச்சி னையா..?

இல்ல பிள்ள..நான் மூத்தது ஆம்பிளப் பிள்ளயா இருந்த நல்லம் எண்டு நினைச்சன். அவள் பெட்டக்குட்டிய பெத்துவைச்சிருக்கிறாள்.

எனக்கு ஆணியறைந்தது போலாகியது.

முதற்குழந்தை பெண்குழந்தை என் றால் அதனால் குடும்பத்துக்கு குற்றமா..? சமூகத்துக்கு குற்றமா? இல்லை எங்கள் நாட்டுக்குத்தான் குற்றமா..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லம்மாவுக்கு ஒரு விருது போதாது

தங்கமீன்கள் ராமின் மனக்கிளர்வு

தங்கமீன்கள் திரைப்படத்துக்கு 3 தேசிய விருதுகள் கிடைத்திருக்கின்றன. அதில் சுட்டிப்பெண் செல்லம்மாவாக நடித்த சாதனாவுக்கு சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான விருதும் ஒன்று. தங்கமீன்களில் எல்லோரையும் கவர்ந்த சாதனாவுக்கு விருது கிடைத்தமை பற்றி படத்தின் இயக்குநரும், நாயகனுமான ராம் தன் மனம் திறந்து சொல்லும் வார்த்தைகள் இங்கே–

சாதனா என்பதுதான் அவள் பெயராக இருந்தாலும் எனக்கும், தங்கமீன்கள் குழுவுக்கும் அவள் என்றும் செல்லம்மாதான்.

அவளின் 7 வயதுக்கும் 8 வயதுக்கும் இடைப்பட்ட ஒரு காலத்தில் அவளை முதன் முதலில் பார்த்தேன். 4 பற்கள் விழுந்து நீண்ட முடியோடு வெகுளித்தனம் பூசிய முழுமையான குழந்தையாக அவள் இருந்தாள். சாலிகிராமத்தின் கடைசியில் இருந்த அப்போதைய அலுவலகத்தில் என்னுடைய nikkon fm10 கமெராவால் அவளை முதன் முதலில் pink நிற சிம்மிஸில்முதல்படம் எடுத்த நாள் டிசெம்பர் 21,2009. கரும்பலகையில் கை நடுங்கிக் கொண்டே W எழுதுகிற காட்சிதான் அவள் முதன்முதலில் எனக்கு நடித்துக் காட்டிய காட்சி. அப்போது நடிகர் கருணாஸ் கல்யாண சுந்தரமாக நடிப்பதாக இருந்தது. ஆனால் அது நடைபெறாமல் போக அந்த அலுவலகத்தை காலி செய்தோம்.

வேறொரு அலுவலகம். தங்கமீன்களுக்கான தயாரிப்பாளரைத் தேடிக் காலம் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. செல்லம்மாவும் வேகமாக வளர்ந்து கொண்டிருந்தாள். அவளின் வளர்ச்சிக்கேற்ற மாற்றங்களை திரைக்கதையும் வேகமாக உள்வாங்கிக் கொண்டிருந்தது. இந்தத்திரைப்படத்தை எடுக்க இயலுமா என்ற சந்தேகம் வேகமாக எல்லாருக்குள்ளும் வளர்ந்து கொண்டிருந்தது. வேறு கதை தயார் செய்து வேறு முயற்சி செய்யலாமே என்ற அறிவுரைகள் எல்லா திசைகளிலும் இருந்தும் வந்து கொண்டே இருந்தது. செல்லம்மாவின் மனதில் ஆசைகளை ஏற்படுத்தி விட்டு எப்படி விட்டுப் போக முடியும் என்ற ஒரே கேள்வி என்னைத் தங்கமீன்களோடு

இருக்கச் செய்தது.

எப்போது படப்பிடிப்பு? என்று எனக்குத் தெரிந்த எல்லோரும் எல்லா நாளும் கேட்ட போதும், கடைசி வரை அந்தக் கேள்வியைக் கேட்காத ஒரே நபர் செல்லம்மாதான். கேட்பாள் நான் வருத்தப்படுவேன் என்று நினைத்தாளோ, கேட்டால் என்ன ஆகப்போகிறது என்று நினைத்தாளோ அல்லது அப்படி எல்லாம் கேட்கலாம் என்று தெரியாத குழந்தையாக அவள் அன்று இருந்தாளோ என்று தெரியாது. ஆனால் அவள் கேட்காதது என்மீதான நம்பிக்கையும் என் மீதான பிரியமும் என்று நான் எண்ணிக் கொள்ளுமாறு இருந்தன. அவளின் புன்னகைகளும் பார்வைகளும். இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன் 2010 இன் நடுப்பகுதியில் தங்கமீன்களை எடுக்கச் சம்மதித்தார்.

செல்லம்மாவுக்கு முன்பு விழுந்திருந்த பற்கள் முளைத்தன. புதிதாக இரண்டு பற்கள் விழுந்தன. நாங்கள் ஒரு வழியாக முதற் கட்டப்படப்பிடிப்புக்குத் தயார் ஆனோம். நாகர்கோவிலின் வீரானி ஆலுரில் 2011 ஜனவரியில் தீந்தத் தொடங்கின தங்கமீன்கள். 40 நாள்கள் படப்பிடிப்பு முடிந்து சென்னை திரும்பிய போது அடுத்த கட்டப் படப்பிடிப்பிற்கு நாங்கள் மீண்டும் காத்திருக்க வேண்டும் என்று எங்களுக்குத் தெரியாது. அந்த 40 நாள்களில் தினமும் 12 மணி நேரத்துக்கு மேற்பட்ட உழைப்பு. சில தினங்களில் 16 மணி நேரம் 18 மணி நேரம் கூட கடைசி முன்று தினங்களும் இடைநிறுத்தாத படப்பிடிப்பு. செல்லம்மா உறக்கம் வருகிறது என்று சொல்லவில்லை. என்னால் முடியவில்லை என்றோ எனக்குப் போர் அடிக்கிறது என்றோ எனக்கு அசதியாக இருக்கிறது என்றோ அவள் ஒருபோதும் சொல்லவில்லை.

அதன் பின்னர் நீண்ட நாள்களுக்குப் பின்னர் பெய்த நல்ல மழையாக தங்கமீன்கள் படப்பிடிப்பு 2011 நவம்பரில் முடிவடைந்தது. அச்சன்கோவில் பெருங்காற்றில் உயரத்தில் கரடும் பாம்பும் யானைகளும் கண்களுக்கும் காதுகளுக்கும் அகப்பட செல்லம்மாவின் அம்மா பயந்து என்னிடம் முரண்பட்டு கோபித்துக் கொண்டார். படப்பிடிப்பே வேண்டாம் என்று அவர் சொன்ன போது. அதைத் துளியும் முகத்தில் காட்டாமல் நடித்தாள் செல்லம்மா அவள் அம்மாவுக்கும் எனக்கும் இடையேயான அந்த மௌனமான பேசாத நாள்களில், அந்த மலைமுகட்டில் செல்லம்மா பனியைத் தன் கரங்களால் என்னுடன் சேர்ந்து தள்ளிக் கொண்டிருந்தாள். ஆனந்தயாழையின் வெற்றி செல்லம்மாவின் முதிர்ச்சிக்குக் கிடைத்த வெற்றி என்றும் சொல்லலாம்.

தங்கமீன்கள் படப்பிடிப்பு முடிந்து காத்திருந்தது. பணிகள் முடிந்தும் காத்திருந்தது. பெட்டிக்குள் உறங்குகிற படமாக வெகு நாள்கள் இருந்தது. 2013 ஓகஸ்ட்டில் ஒரு வருடம் மற்றும் 9 மாதக் காத்திருப்புக்குப் பிறகு பின் ஜே.சதிஷ்குமாரால் (jsk film corporation) வாங்கப்பட்டு திரைக்கு வந்தது. இந்த நீண்ட காத்திருப்பிலும் செல்லம்மா ஒருமுறை கூடக் கேட்கவில்லை எப்போது படம் வெளிவரும்? என. எல்லாரும் எல்லா நாளும் கேட்கிற கேள்வியை அவள் ஒரு போதும் கேட்கவில்லை.

அவள்தான் செல்லம்மா.

2009 நவம்பரில் தொடங்கிய செல்லம்மாவின் காத்திருப்பு 2013 ஓகஸ்ட்டில் (கிட்டத்தட்ட 4 வருடங்கள்) முடிவடைந்தது. மற்ற எல்லோரின் காத்திருப்போடு ஒப்பிடும் போது செல்லம்மாவின் காத்திருப்பே பெரிது என்று எனக்குத் தோன்றும். அவள் என்னிடம் எப்போது படம் வரும் என்று கேட்காவிட்டாலும் பள்ளியிலும் உறவினர் குழுமும் இடங்களிலும் அவள் அந்தக் கேள்வியை எதிர் கொண்டிருப்பாள் தான். கூடவே கேலியையும் கிண்டலையும் எதிர் கொண்டிருப்பாள். அவநம்பிக்கை தரும் சொற்களும் அவளை நோக்கி வீசப்பட்டிருக்கும் தான். பெரியவர்களாலேயே சரியாகக் கையாள முடியாத காத்திருப்பை வெகு அழகாகக் கையாண்ட செல்லமாவுக்கு ஒரேயொரு தேசிய விருது போதாது என்பதே என் எண்ணம்.

அவளின் உழைப்புக்கும் காத்திருத்தலுக்கும் கிடைத்த ஆறுதல் பரிசாகவே நான் அவளுக்குக் கிடைத்திருக்கும் இந்தத் தேசிய விருதை கருதுகிறேன். (என்ன செய்ய, ஒரு தேசம் தான், ஒரே ஒரு தேசிய விருதுதான்).

அவள் வாழ்வில் மென்மேலும் எந்தத்துறையாலாலும் அந்தத்துறையில் பெரும் வெற்றி அடைவாள் என்பது என் பெரும் நம்பிக்கை.

அவள் இல்லாமல் தங்கமீன்கள் சாத்தியப்பட்டிருக்காது என்பது 100 சதவீதம் உண்மை.

மிக்க நன்றி செல்லம்மா.

பிரியங்களுடன் ராம்.

இயற்கையோடு வாழ்தல்

கூட்டிலிருந்து ஒரு குருவிக் குஞ்சு கீழே விழுந்து கிடக்கிறது. நீங்கள் அதைப் பார்த்துவிடுகிறீர்கள். அப்போது ஒரு பருந்து அந்தக் குஞ்சைக் கொத்திச் செல்வதற்காக மேலிருந்து கீழ்நோக்கி இறங்கிக்கொண்டிருக்கிறது. ஒரு பாம்பும்கூட அந்தக் குஞ்சைப் பிடித்துச் செல்ல வருகிறது. இப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

பருந்தையும் பாம்பையும் துரத்திவிட்டுவிட்டுக் குருவிக் குஞ்சை எடுத்து, அதன் கூட்டைத் தேடி அதில் விடுவதா? அல்லது உங்கள் வீட்டுக்கு எடுத்து வந்து வளர்ப்பதா? அல்லது விலங்குகள் நலச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு அவர்களை வந்து எடுத்துப்போகச் சொல்வதா? அல்லது அந்தக் குஞ்சை அப்படியே விட்டுவிட்டு வந்துவிடுவதா? எது சரியான செயல்?

இயற்கையை அதன் போக்கில் விட்டுவிட வேண்டும். பருந்தும் பாம்பும் அந்தக் குஞ்சைத் தின்னக் கூடாது என்று நீங்கள் நினைத்தால், அப்புறம் பருந்தும் பாம்பும் எப்படி உயிர்வாழ்வதாம்?

அந்தக் குஞ்சை அப்படியே விட்டுவிட்டு வந்துவிடுவதுதான் சரி. இதென்ன கொஞ்சம்கூட இரக்கமில்லாத முறையாக இருக்கிறதே என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், அதுதான் சரி. இயற்கையை அதன் போக்கில் விட்டுவிட வேண்டும். பருந்தும் பாம்பும் அந்தக் குஞ்சைத் தின்னக் கூடாது என்று நீங்கள் நினைத்தால், அப்புறம் பருந்தும் பாம்பும் எப்படி உயிர்வாழ்வதாம்? இயற்கையில் உள்ள உணவுச் சங்கிலியே ஒன்றை ஒன்று இரையாக்கிக்கொள்ளும் விதத்தில்தான் இருக்கிறது.

பூச்சியைத் தவளை தின்கிறது, தவளையைப் பாம்பு தின்கிறது,

பருந்தை ஆந்தை தின்கிறது. இப்படித்தான் இருக்கும் உணவுச் சங்கிலி. அதை இடையூறு செய்தால் மொத்த உணவுச் சங்கிலியும் பாதிக்கப்படும். இயற்கையில் எங்கே கை வைத்தாலும் ஏதாவதொரு இடத்தில் ஒரு பாதிப்பு ஏற்பட்டுவிடும். அவ்வளவு நுண்மையான சமநிலையில்தான் இயற்கை அமைந்திருக்கிறது.

இருந்தாலும் அந்தக் குஞ்சு பாவமல்லவா? அதை அதன் கூட்டிலாவது கொண்டுபோய் சேர்க்கலாமல்லவா? இல்லை, பெரும்பாலும் அந்தக் குஞ்சைத் தாய்ப்பறவை தன் கூட்டில் சேர்க்காது. சரி, நம் வீட்டிலாவது கொண்டுவந்து வளர்க்கலாமல்லவா? எப்படி வளர்ப்பீர்கள்? நம் வீட்டு நாய்க்குட்டியை வளர்ப்பது போலவா? அல்லது கூண்டுக்கிளியை வளர்ப்பது போலவா?

பறப்பதற்காகப் பிறந்த ஒரு பறவையை நம் வீட்டில் கொண்டுவந்து வளர்ப்பது எந்த விதத்தில் நியாயம்? அது மட்டுமல்லாமல் அதன் உணவுப் பழக்கமும் பிற பழக்கங்களும் எதுவும் நமக்குத் தெரியாது. இதற்குப் பேசாமல் அந்தக் குஞ்சை அப்படியே விட்டுவிடுவதுதான் நல்லது.

பறவைகளின் மேல் நமக்கு உண்மையில் இரக்கம் இருந்தால், அவை வாழ்வதற்கு ஏற்ற சூழலை நாம் உருவாக்கித்தர வேண்டும். பறவைகள் வாழ்வதற்கேற்ற சூழல்தான் நாம் வாழ்வதற்கேற்ற சூழல் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். காடுகளை அழிக்காமல் இருக்க வேண்டும். பூச்சி மருந்துகள், செயற்கை உரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும். ஏனெனில் இந்த மருந்துகளும் உரங்களும் நீரிலும் மண்ணிலும் கலக்கும்போது தீமைசெய்யும் ஒரு சில பூச்சிகளோடு நன்மை செய்யும் எண்ணற்ற பூச்சிகளும் அழிந்துவிடுகின்றன. இரைக்காகப் பூச்சிகளை நம்பியிருக்கும் பெரும்பாலான பறவைகளுக்கான இரையும் அழிந்துபோய்விடுகிறது.

இல்லையென்றால் பூச்சி மருந்தினால் பாதி உயிரோடு இருக்கும் பூச்சிகளை உண்டு பறவைகளும் பாதிப்புக்குள்ளாகின்றன. அவற்றின் இனப்பெருக்கம் பாதிக்கப்படுகிறது. இனப்பெருக்கம் பாதிக்கப்பட்டால் அந்த இனமே, அத்தோடு அழிந்துவிடும். எனவேதான் பறவைகளைக் காப்பாற்ற வேண்டும் என்றால், அதன் மூலம் நம் சுற்றுச் சூழலைக் காப்பாற்ற வேண்டும் என்றால், நமக்கு இரக்கம் மட்டும் போதாது. சரியான அக்கறையும் அறிவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஔண்யன்

இருளின் 51

கதவைத் திறந்தவன்

சுவீடனுக்கு ஆதரவாகத் தீர்ப்பளிக்கப்பட்டதும், எந்தநேரத்திலும் யூலியன் கைது செய்யப்பட்டு சுவீடனுக்குக் கொண்டு செல்லப்படலாம் என்றும், அடுப்பில் உலை கொதிக்கும் போதே தட்டெடுத்து உட்காரும் அகோரப் பசியில் இருக்கும் அமெரிக்க அதிகாரிகள் சுவீடனுக்கு விரைந்து விமான நிலையத்தில் யூலியனின் வருகைக்காகக் காத்திருப்பதாகவும் செய்திகள் பரவின. ஆனால் எல்லோருக்கும் அல்வா கொடுத்துவிட்டு யூலியன் என்ற சிட்டுக்குருவிப் பறந்து விட்டது.

யூலியன் மாயம், லண்டனில் பரபரப்பு என்று உலகமே கதறிக் கொண்டிருந்த போது அனைத்து செய்தி நிறுவனங்களுக்கும் யூலியனிடம் இருந்து ஒரு செய்தி அறிக்கை வந்து சேர்ந்தது, அதில் தான் அரசியல் புகலிடம் கோரி ஈக்குவடோர் நாட்டு தூதரகத்தில் விண்ணப்பித்து இருப்பதாகவும், தன் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, இறுதி முடிவெடுக்கும் வரை தனக்கு பாதுகாப்பளிப்பதற்காக தங்கள் தூதரகத்திலேயே தங்க வைக்க ஈக்குவடோர் தூதரகம் அனுமதியளித்திருப்பதாகவும் கூறப்பட்டிருந்தது.

யூலியனின் இந்த நகர்வு மிக மிக ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவும், பிரிட்டனும், சுவிடனும் சேர்ந்து பின்னிய வலையில், லண்டனில் பொலிஸின் கண்காணிப்பில் தங்கியிருக்கும் யூலியனுக்கு வேறு வழி தெரியவில்லை. அவரது பிணைக்காக பணம் செலுத்திய நண்பர்களுக்குக் கூட இது குறித்து முன்கூட்டித் தெரிவிக்கப் படவில்லை. சர்வதேசச் சட்டப்படி தூதரகங்களுக்குள் புகுந்து சட்ட நடவடிக்கை எடுக்க தூதரகத்தின் அனுமதி வேண்டும். தூரகத்துக்கு வெளியே லண்டன் பொலிஸும், யூலியனின் ஆதரவாளர்களும் குவிந்தனர். யூலியன் கதவிடுக்கில் வெளியே கை நீட்டினால் கூட பிடித்து இழுத்துக் கைது செய்வதற்கு தயாராகக் காத்திருந்தது பிரிட்டன் பொலிஸ். அவர்களை உள்ளே செல்ல விடாமல் தடுக்க கும்பலாக ஆதரவாளர்கள் குவிந்ததால் அந்தப்பகுதியே போர்க்களம் போல் காட்சியளித்தது.

யூலியன் உலகமெங்கும் புகழ்பெற்ற நபர். அமெரிக்காவிலும், ஐரோப்பிய யூனியனில் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வாய்ப்புள்ள நபர், அவருக்குப் புகலிடம் கொடுப்பது என்பது அத்தனை எளிதல்ல, யூலியனின் விண்ணப்பம் நேரடியாக ஈக்குவடோர் நாட்டில் அதிபரான ரபேல் கொரயாவிடம் அனுப்பி வைக்கப்பட்டது. ஈக்குவடோர் கேட்ட சில முக்கிய ஆவணங்களையெல்லாம், யூலியனின் தாய், ஆஸ்திரேலியாவிலிருந்து ஈக்குவடோர் சென்று நேரில் சமர்ப்பித்தார். ஈக்குவடோர் என்ன முடிவெடுக்குமோ என்று பதற்றத்திலிருந்தனர் மக்கள். இந்த நிலையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பினை ஈக்குவடோர் அறிவித்தது, ஜூலியனுக்கு தாங்கள் புகலிடம் அளிப்பதாக.

"தூதரகத்தில் இருந்து ஈக்குவடோர் செல்வதற்கு விட மாட்டோம், கதவிற்கு வெளியே கால் வைத்தால் கைது செய்வோம்" என்று பிரிட்டன் மல்லுக்கு நின்றது. மேலும் தூதரகத்திற்குள் புகுந்து யூலியனைக் கைது செய்யவும் தயங்க மாட்டோம் என்று மிரட்டியது. அரசியல் புகலிடம் பெற்ற ஒருவரைக் தங்கள் நாட்டுக்கு வருவதற்கு அனுமதி மறுப்பது சர்வதேச சட்டத்தினை அவமதிக்கும் செயல் என்று கூறிய ஈக்குவடார், பிரிட்டனின் மிரட்டலைத் தொடர்ந்து ALBA (Bolivarian Alliance of the Americas) மற்றும் OAS (Organization of American States) அமைப்புகளிடன் பிரச்சினையை எடுத்துச் சென்றது. அங்கு யூலியனுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவதற்காக விடயம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது எதிர்த்து வாக்களித்த மூன்று நாடுகள் அமெரிக்கா, கனடா மற்றும் ட்ரினிடாட் டுபாக்கோ.

(திரைகள் இன்னும் திறக்கும்)

வாலாட்டும் இரகசியம்

மனிதனை பார்த்து நாய் வாலை ஆட்டினால், அது நம்மை நட்புடன் எதிர்கொள்கிறது என்று புரிந்து கொள்கிறோம்

ஆனால், நாய் வாலை ஆட்டுவது வெறுமனே நட்பைத் தெரிவிப்பதற்காக மாத்திரம் அல்ல என்பது அறிவியலாளர் கருத்து .அது வாலை எப்படி ஆட்டுகிறது என்பதைப் பொறுத்தும் அதன் உணர்வுகள் வேறுபடுகின்றனவாம்.

குறிப்பாக மற்றோர் நாயைப் பார்த்து, ஒரு நாய் வாலை ஆட்டுவதன் மூலம் தனது உணர்வுகளை வெளிப்படுத்துமாம். அதாவது, வாலை வலது புறமாக ஆட்டினால், அது நட்பு என்றும் இடது புறமாக ஆட்டினால், அது வெறுப்புடன் அதனை பார்க்கிறது என்றும் அர்த்தமாம்.

இந்த கண்டுபிடிப்புக்கள் மூலம் நாய்களை வளர்ப்பவர்கள், அவற்றை மேலும் அறிந்து கொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

மனிதரைப் போல நாய்களிலும் வலது பாக மூளை உடலின் இடது பகுதியையும், இடது பாதி மூளை உடலின் வலது புறத்தையும் கட்டுப் படுத்துவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் நாய்கள் வாலைக் கொண்டு அடுத்த நாயுடன் தொடர்பு கொள்ள நினைப்பதில்லையாம். ஆனால், அவை தமது உணர்ச்சியைக் காண்பிக்க தம்மையே அறியாமல் தன்னிச்சையாக இடது அல்லது வலது புறமாக வாலை அசைக்கின்றன என்கிறார் ஆய்வாளர் ஜோர்ஜியா வலூர்ட்டிஹரா.

கோபத்தைக் காட்டு

கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாத சீடன் ஒருவன் தன் குருவிடம் சென்று முறையிட்டான், "என்னால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை குருவே. கோபத்திலிருந்து மீள ஏதாவது வழி சொல்லுங்கள்."

குரு அவனிடம்,"கோபம் கோபம் என்கிறாயே, அந்த உனது கோபத்தை எனக்குக் கொஞ்சம் காட்டு" என்றார். கோபத்தை எப்படிக் காட்டுவது என சீடனுக்குக் குழப்பமும் ஆச்சரியமும். "தற்சமயம் என்னிடம் கோபம் இல்லை. அதனால் என்னால் அதைக் காட்ட முடியாது" என்று பதில் சொன்னான்.

குரு அதற்குப் பொறுமையாக, "அதனால் பிரச்சினை இல்லை. உனக்குக் கோபம் வரும்போது என்னிடம் வந்து காட்டினால் போதும்" என்று மறுமொழி தந்தார்.

அப்போது சீடனுக்கு உண்மையிலேயே கோபம் வந்துவிட்டது, "கோபம் வந்தவுடன் என்னால் கொண்டுவந்து உடனடியாகக் காட்ட முடியாதே" எனக் கத்தினான்.

"மேலும் எதிர்பாராத வேளையில்தான் எனக்குக் கோபம் வரும். அப்போது உடனடியாக உங்களிடம் வந்து காட்டுவதற்குள் நிச்சயமாக அது மறைந்தே போய்விடும்" என்றான் சீடன்.

"நீ சொல்கிறபடி பார்த்தால் கோபம் என்பது உனது இயல்பாக இருக்க முடியாது" என்றார் குரு.

"கோபம் உனது உண்மையான இயல்பாக இருக்கும்பட்சத்தில் எந்தச் சமயத்திலும் என்னிடம் அதைக் காட்ட முடியும். நீ பிறக்கும்போது உன்னிடம் அது இருக்க வாய்ப்பில்லை. உனது தாய் தந்தையரும் அதை உனக்குத் தரவில்லை. அதனால் அது வெளியிலிருந்துதான் வந்திருக்க வேண்டும். அதனால் உன்னால் எளிதாக விரட்ட முடியும்" என்றார் குரு.அன்று முதல் கோபத்தை இயன்றவரை தவிர்த்தான் சீடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

பற்றிய ஒரு பதிவு

எனக்கு அந்தப் பாசப் பற்றறுப்பு எளிதாகக் கிடைத்திருக்கிறது என்றே கூறுவேன். இதற்காக எனது இந்தக் கருத்துக்களையோ எனது வாழ்க்கை முறையையோ மற்றவர்களுக்குப் பரிந்துரைப்பேன் என்பது அர்த்தமல்ல ;இதை எவர் மீதும் சுமத்தவும் மாட்டேன். என்னைப் பொறுத்தவரையிலே பிள்ளை பெறுவதைத் தெரிவு செய்வதும் கட்டுப்படுத்துவதும் முற்று முழுதாக ஒரு பெண்ணின் அடிப்படை உரிமையாகும். தமது வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்று தீர்மானம் எடுப்பதும் பெண்ணிடமே விடுபட வேண்டும்.அதே சமயம் தாய்மையைத் தெரிவு செய்யும் ஒரு பெண்ணை என்றுமே குறைவாக மதிப்பிட மாட்டேன். அப்படிச் செய்தால் 99 விகிதமான பெண்களுடன் நான் கருத்து மோதல் கொள்ள வேண்டியிருக்கும் . அதை நான் விரும்பவில்லை. இனி எனது தனிப்பட்ட கருத்துப் பற்றிய தப்பபிப்பிராயத்தையும் அது தோற்றுவிக்கும் . பிள்ளை இல்லாமல் இருப்பதே பெண்களுக்கும் நல்லது என்று நான் கூறவில்லை. அப்படிக் கூறினால் மக்களின் வாழ்வில் இனி சமுதாயத்துக்கும் குழந்தைகள் தரும் மகிழ்ச்சி, பாசம் எல்லாவற்றையும் புறக்கணிப்பதாகவும் அமைந்து விடும். படைப்பு மட்டில் நான் கொண்டிருக்கும் அளவற்ற மரியாதையையும் அது தகர்த்துவிடும். பிள்ளைகளைப் பெறுவதென்பது மானிடம் தழைப்பதற்கு அடிப்படையானது. சமூகவாழ்வுக்கும் தேவையானது. ஆகவே பெண்கள் பிள்ளையைப் பெற்றுத்தான் ஆகவேண்டும்.குடும்ப வாழ்க்கையை அவர்கள் விரும்பினால் அது அவர்களுடைய உரிமை, ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் அதைத் தேர்ந்தெடுக்கவில்லை. பிள்ளை பெறும் அவர்களுடைய விருப்பத்திற்கு நான் மதிப்பளிப்பது போல, மற்றவர்கள் என்னோடு மூர்க்கமாக கருத்து வேறு பட்டாலும் , எனது தெரிவை மதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

காத்திருந்த காலம்

தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டிருந்தோம். அது தவிர,மீண்டும் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திக்க இந்தியாவுக்குப் பயணங்களையும் மேற்கொண்டோம். இதனால் இலண்டனில் உள்ள வெவ் வேறு தமிழ்க் குழுக்களுடன் எமக்குத் தொடர்பு ஏற்பட்டது. அநேகமாக அனைத்து இளம் தலைமுறையினரும் தமிழீழத் தனியரசு என்ற இலட்சியத்தையே ஆதரிக்கிறார்கள் என்பது எமக்குத் தெரியும். இவற்றில் ஈழமக்கள் புரட்சிகர முன்னணி (EPRLF) , தமிழீழமக்கள் விடுதலைக் கழகம் (PLOTE), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) ஆகியவற்றின் இலண்டன் பிரதிநிதிகள் அங்கேயே இருந்தார்கள். ஈழப் புரட்சி இயக்கம் (EROS) இலண்டனில் இயங்கி வந்ததும் எமக்குத் தெரியும். இப்போது போலவே அன்றும் எவ்வாறு நடத்துவது என்பதில் வேறுபட்ட கோட்பாடுகள். இனி, ஆயுதப் போராட்டத்தை எவ்வாறு நடத்துவது என்பதில் வேறுபட்ட சிந்தனைகள்.

(பதிவு தொடரும்)

மேஷம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

எதிர்ப்புகளை சமாளித்து, புது உத்வேகத்துடன் பணிபுரிவீர்கள். பேசும் வார்த்தை இனிதாக அமைந்து, நற்பெயர் பெற்றுத்தரும். அதிக விலையுள்ள பொருள் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். உடன் பிறந்தவர், ஓரளவு உதவிகரமாக நடந்து கொள்வர். புத்திரர் வெளியிடம் சுற்றுவதை குறைப்பதால், உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத் துணை குடும்பத்தேவையை, பொறுப்புணர்வுடன் மேற்கொள்வர். தொழிலில் உற்பத்தி, விற்பனை மிதமான அளவில் இருக்கும். பணியாளர் நிர்வாகத்தின் வழிகாட்டுதல், கவனமுடன் பின்பற்ற வேண்டும். பெண்கள், குடும்பத்தின் அத்தியாவசியச் செலவுக்கு மட்டும், முக்கியத்துவம் தருவீர்கள். மாணவர்கள் நண்பர்களுடன் யாதார்த்த மனநிலையில் பழகுவார்கள்.

ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

எண்ணமும், செயலும் பிறர் நலம் கருதுவதாக அமைந்து, சமூகத்தில் நன்மதிப்பு பெறுவீர்கள். குடும்பச் செலவுக்கான பணவசதி, திருப்திகர அளவில் இருக்கும். இல்லறத்துணை ஒற்றுமைக் குணத்துடன், குடும்பநலன் சிறக்க பணிபுரிவர். தொழில், வியாபாரத்தில் நண்பரின் உதவியால் வளர்ச்சிகர மாற்றம் உருவாகும். பணியாளர்கள், ஆர்வமிகு செயலால் பணி இலக்கு குறிப்பிட்ட அளவில் நிறைவேற்றுவர். பெண்கள், குடும்ப உறுப்பினர்களின் நல்ல குணம் பாராட்டி உபசரிப்பர். மாணவர்கள், மனஅமைதி பாதுகாப்பதால், படிப்பில் எதிர்பார்த்த முன்னேற்றம் பெறலாம்.

மிதுனம்

மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

மனதில் பொறுமை, செயலில் சுறுசுறுப்பு பின்பற்றி, பணிகளில் ஈடுபடுவீர்கள். அக்கம் பக்கத்தவர் சச்சரவு மறந்து, அன்பு பாராட்டுவர். புத்திரர் தனது நண்பர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு, உங்களின் உதவியை நாடுவர். உடல்நல ஆரோக்கியம் பேணுவதில், கூடுதல் கட்டுப்பாடு தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், எதிர்பார்த்த அரசு உதவியும் கிடைக்க அனுகூலம் உண்டு. பெண்கள், குடும்பத்திற்கான பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்களின், புதிய பயிற்சி முறையால், படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

கடகம்

புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

குடும்பத்தில் மாங்கல நிகழ்வு ஏற்படும். மகிழ்ச்சி நிறைந்த மனதுடன் பணிகளை மேற்கொள்வீர்கள். சிலர், புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர், படிப்பில் புதிய இலக்கினை அடைவர். எதிர்மனப்பாங்குடன் உங்களிடம் பழகிய சிலர், தன் நிலையில் நல்மாற்றம் பின்பற்றுவர். இல்லறத்துணை குடும்பநலன் சிறக்க, தேவையான இடத்தில் சுமுக சூழ்நிலை அமைந்து திறம்பட பணிபுரிவர். பெண்கள், கணவரின் அன்பு, தாராள பணவசதி கிடைத்து மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர். மாணவர்கள், பொதுஅறிவு சார்ந்த விஷயங்களை அறிந்து கொள்வர்.

சிம்மம்

மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

பேசுவதில் நிதானம் பின்பற்றுவதால், சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாக்கலாம். குடும்பத்தில் முக்கியமான தேவை எதுவென உணர்ந்து, தாராள மனதுடன் பூர்த்தி செய்வீர்கள்.. இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசம் மனதில் நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் தன்மதிப்பை உயர்த்த, அபிவிருத்திப்பணி புரிவீர்கள். பணியாளர் நிர்வாகத்தின் நம்பிக்கையை பெரிதென, ஆர்வமுடன் சிறப்பாக பணிபுரிவர். குடும்பப் பெண்கள், கணவரின் நல்ல குணம் பாராட்டுவர். மாணவர்கள், விலை உயர்ந்த உபகரணம், கவனமுடன் பயன்படுத்தவும்.

கன்னி

உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

கடந்த நாட்களில் சிலரது நடவடிக்கையால், உருவான விரக்தி மனதில் நெருப்பாக இருக்கும். சத்தியம், தர்மம் ஆகியவைகளை பின்பற்றுவதால், வாழ்வில் சிரமம் வராமல் தவிர்க்கலாம். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். இல்லறத்துணை சுயகௌரவ சிந்தனையால், உங்களின் கருத்து ஏற்பதில் தயக்கம் கொள்வார். பணியாளர், நிர்வாகத்தின் சட்டதிட்டம், கூடுதல் அக்கறையுடன் பின்பற்ற வேண்டும். பெண்கள், நகை இரவல் கொடுப்பதும், வாங்குவது தவிர்க்கவும். மாணவர்கள், ஒருமுகத்தன்மையுடன் படிப்பதால், தோச்சிவிகிதம் சிறாகும்.

துலாம்

சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

எதிர்மறை சிந்தனை தவிர்த்து பணிபுரிவதால், பெற வேண்டிய நன்மை உரிய அளவில் கிடைக்கும். குடும்பத்திற்கான பணச்செலவு அதிகரிக்கும். வீடு, வாகன பாதுகாப்பில், கூடுதல் அக்கறை வேண்டும். புத்திரர் நண்பருக்கு இணையான அளவில், பக்குவமாக ஆலோசனை வழங்குவர். சீரான ஓய்வு, உடல்நலம் காக்கும். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர், ஓரளவு உதவுவர். தொழில், வியாபாரத்தில் சிலமாற்றம் பின்பற்றுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

விருச்சிகம்

விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

புதிதாக தொடங்கும் செயல்கள், எதிர்பார்த்த அளவில் நன்மை தரும். மாங்கல நிகழ்ச்சிக்கு கூடுதல் பணம் செலவு செய்வீர்கள். சமூகத்தில் உங்கள் மீதான அந்தஸ்து அதிகரிக்கும். தெய்வ வழிபாடு, திருப்திகரமாக நிறைவேற்றுவீர்கள். உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். புத்திரரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர் நல்அன்பு பாராட்டுவர். தொழில் வளர்ச்சியில், திருப்திகர முன்னேற்றம் ஏற்படும். பணசேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை வந்து சேரும். குடும்பப் பெண்கள், விரும்பிய ஆடை, அணிகலன் வாங்க பணவசதி துணை நிற்கும். மாணவர்கள், ஞாபகத்திறன் வளர்த்து, படிப்பில் சிறந்த தோச்சி விகிதம் பெறுவர்.

தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

வாழ்வில் நீண்டநாள் எதிர்பார்த்த நன்மை, வியத்தகு அளவில் கிடைக்கும். இடம், சூழ்நிலை உணர்ந்து நண்பர்களிடம் பேசுவது நல்லது. வீடு, வாகனத்தில் கூடுதல் பயன்பாட்டு வசதி பெற, அபிவிருத்தி பணி மேற்கொள்வீர்கள். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். இல்லறத்துணை, உங்களின் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் தருவார். தொழில், வியாபாரத்தில் லாபவிகிதம் குறைத்து உற்பத்தி, விற்பனையின் அளவை சராசரிக்கு கொண்டு வருவீர்கள். பணியாளர், பாதுகாப்பு முறை தவறாமல் பின்பற்றவும். பெண்கள், பிரார்த்தனை நிறைவேறி இஷ்ட தெய்வவழிபாடு மேற்கொள்வர்.

மகரம்

உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

கடந்த நாட்களில், அறிமுகமான சொந்தமும், நட்பும் கூடுதல் அன்பு பாராட்டுவர். தம்பி, தங்கையரின் மங்கல நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை, சுமுகமாக நிறைவேறும். எதிர்மறையாக உங்களிடம் நடந்தவர், நல்ல அபிப்பிராயம் கொள்கிற சூழ்நிலை உருவாகும். இல்லறத்துணையின் ஜாதகயோகபலன், உங்கள் வாழ்வியல் நடைமுறை சிறப்பு பெற உதவும். தொழில், வியாபாரத்தில் நிலவும் அனுகூலத்தன்மை பாதுகாப்பது அவசியம். பணியாளர், பணியிடத்தில் பொது விஷயம் பேசவேண்டாம். பெண்கள், சேமிப்பு பணத்தில் குடும்பத்தேவை ஓரளவு நிறைவேற்றுவர். மாணவர்கள், நண்பரின் பேச்சு, செயலில் குறைகாண வேண்டாம்.

கும்பம்

அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

இஷ்ட தெய்வ அருள் பலம். துணை நின்று உதவும். வாகன பயன்பாடு, திருப்திகரமாக இருக்கும். புத்திரரின் அருமை, பெருமை நிறைந்த செயல்களை மனதாரப் பாராட்டுவீர்கள். எதிரியால் வருகிற சிரமம் பலமிழக்கும். இல்லறத்துணை, குடும்பத்தின் நலன் கருத்தில் கொண்டு செயல்படுவார். தொழில், வியாபாரம் செழித்து வளர, புதிய அணுகுமுறை பின்பற்றுவீர்கள். உத்தியோகஸ்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்தி, திட்டமிட்ட அளவில் பணி இலக்கை அடைவர். பெண்கள், தாராள பணவசதி அமைந்து, மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர். மாணவர்கள், படிப்புத் தொடர்பான புதிய விஷயங்களை நண்பரின் உதவியால் பெறுவர்.

மீனம்

பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

பேச்சு, செயலில் வசீகரம் உருவாகும். உதவிகரமாக செயல்பட்டவர்களுக்கு, நன்றியை உரிய தருணத்தில் சொல்வீர்கள். பணியில் பணவரவு கூடுதல் அளவில் கிடைக்க உதவும் வழிவகை குறித்து சிந்திப்பீர்கள். வீடு, வாகனத்தில் தகுந்த பாதுகாப்பு முறை பின்பற்றவேண்டும். இல்லறத்துணை பண்பு, பாசத்துடன் உங்கள் வாழ்வியல் நடைமுறை சிறப்புப் பெற உதவுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர் சலுகை பெறுவதில் தாமதம் ஏற்படலாம். பெண்கள், சத்து நிறைந்த உணவு உண்பது, உடல்நலம் ஆரோக்கியம் பெற உதவும். மாணவர்கள், ஆசிரியரின் கருத்தை மறுத்து பேசக்கூடாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விடுகதை சொல்வோமா?

01. வெள்ளை மாளிகை உள்ளே செல்ல வாசல் இல்லை. அது என்ன? -முட்டை-

02. ஐந்து வீட்டிற்கு ஒரு முற்றம். அது என்ன? -உள்ளங்கையும் விரல்களும்-

03. தொப்பொன்று விழுந்தான் தொப்பி கழன்றான். அவன் யார்? -பனம்பழம்-

04. சட்டையைக் கழற்றினால் சத்துணவு. அது என்ன? -வாழைப்பழம்-

05. பட்டுப்பை நிறைய பவுண் காசு. அது என்ன? செத்தல் மிளகாய்-

06. அடிக்காத பிள்ளை அலறித் துடிக்குது. அது என்ன? -சங்கு-

07. தட்டச் சீறும். அது என்ன? -தீக்குச்சி-

08. உரிச்ச புறா சந்தைக்குப் போகுது. அது என்ன? -தேங்காய்-

09. நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும். அது என்ன? -தையல் ஊசியும் நூலும்-

10. உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன். அவன் யார்? -எறும்பு-

11. கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது. அது என்ன? -நிழல்-

அறிவுத் துணுக்குகள்

- அட்லான்டிக் பகுதியில் ஆண்டுக்கு ஒரு முறைதான் சூரியன் உதயமாகிறது.
- மகாத்மா காந்தி இந்தியாவில் மட்டுமல்ல தென்னாபிரிக்காவிலும் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார்.
- முதன் முதலில் கேள்விக் குறியைப் பயன்படுத்திய மொழி இலத்தின் மொழி.
- கைரேகையைப் வைத்து குற்றவாளி களைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந் தவர் எட்வர்ட் ஹென்றி.
- மீன் தன் வாழ்நாள் இறுதி வரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.

உலகப் பழமொழிகள்

- இரண்டு காரியங்களில் மனிதன் ஒரு போதும் கோபப்படக் கூடாது. தன்னால் தவிர்க்க முடிந்ததற்கும் , தவிர்க்க முடியாததற்கும்.
- மரங்கொத்திப் பறவையால் மரத்தை ஒரு நொடியில் 20 முறை தொடர்ந்து கொத்த முடியும்.
- காலத்திற்கு ஏற்ற சொல்லானது- கவலையைக் குறைக்கின்றது.
- உழைப்பு - துக்கம்- மகிழ்ச்சி இந்த மூன்றையும் மனிதன் அனுபவிக்கப் பிறந்தவன். இந்த மூன்றும் இல்லாத வாழ்வு சரியான வாழ்வாகாது.
- உன்னைப் புண்படுத்துவது எதுவென்று உனக்குத் தெரிந்தால் மற்றவர்களைப் புண்படுத்துவது எதுவென்பது உனக்குத் தெரியும்.
- பணிவான சொல் - பாதையை எளிமையாக்குகிறது.
- துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்துவிடாதே.
- தொடக்கத்தினை விட முடிவினைப் பற்றி அதிகமாகச் சிந்தனை செய்.
- தைரியப்படுத்துவது ஒருவனுக்குச் செய்யும் உதவியில் மூன்றில் ஒரு பங்காகும்.
- ஒவ்வொரு தடவையும் நீ ஒருவனை மன்னிக்கும் போது அவனைப் பலவீனப்படுத்துகிறாய். உன்னைப் பலப்படுத்துகிறாய்.
- பேராசை முடிகின்ற இடத்தில் சந்தோஷம் தொடங்குகின்றது.
- பணக்காரன் ஆவதற்குப் பணத்தைக் குவிக்க வேண்டும் என்பதில்லை. நம்முடைய தேவைகளைக் குறைத்துக் கொண்டாலே போதும்.
- தன் நடத்தை அளவுக்கே - ஒருவன் தன்னை உயர்த்திக் கொள்கின்றான்.
- போவது சரியான பாதையாக இல்லாத போது வேகமாக ஓடுவதால் என்ன பயன்? சரியான சமயத்தில் உதவி செய்கிறவன் இருமடங்கு உதவி செய்கிறான்.

உலகில் நடந்து சில புரட்சிகள்

- பசுமைப் புரட்சி - விவசாய உற்பத்தியைப் பெருக்குவது.
- இளஞ்சிவப்புப் புரட்சி- மருந்து வகைகள் உற்பத்தியை பெருக்குவது.
- நீலப் புரட்சி - மீன் உற்பத்தியை பெருக்குவது.
- வெண்மைப் புரட்சி - பால் உற்பத்தியைப் குறிப்பதும்.
- மஞ்சள் புரட்சி - எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை.

உச்சியைத் தொட செவிடாக இரு

சிறுவர்களுக்கான குட்டிக்கதை

சிறிய தவளைகள் சேர்ந்து தங்களுக்குள்ளே ஒரு ஓட்டப்பந்தயத்தை வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்து கொண்டன. ஓட்டப்பந்தயத்திற்கான நாளும் நெருங்கி வந்தது. தவளைகளின் ஓட்டப்பந்தயத்தை காண பலரும் கூடி இருந்தார்கள். ஓட்டப்பந்தயத்தில் தவளைகள் ஓடி அருகில் உள்ள ஒரு உயரமான கோபுரத்தை தொட வேண்டும். அது தான் போட்டி விதி. முதலில் தொடுபவர் வெற்றியாளர்.

போட்டியும் ஆரம்பமானது. சுலபமான போட்டி இல்லை. "உங்களால் கோபுரத்தை அடைய முடியாது" என்று தவளைகளை நோக்கிக் பார்வையாளர்கள் கத்திக் கொண்டிருந்தனர். சிலர் "இந்தத் தவளைகளால் கோபுரத்தின் உச்சியை தொடவே முடியாது ! சாத்தியமே கிடையாது!" எனக் கூறினார். கூட்டத்திலிருந்து இப்படியாக கோசங்கள் வந்த வண்ணமே இருந்தன. மெல்ல ஒவ்வொரு தவளைகளாக, தங்களால் முடியாது என்று நீங்கி கொண்டன.



" எந்தத் தவளையும் உச்சியைத் தொடப் போவதில்லை. மிகவும் கடினமானது" கூடியிருந்தோர் கோசங்களை தொடர்ந்து கொண்டேயிருந்தனர். பல தவளைகளும் களைப்படைந்து, போட்டியிலிருந்து விலகிக் கொண்டன. ஆனால், ஒரேயொரு தவளை மட்டும் மேலே மேலே முன்னேறிக் கொண்டிருந்தது.

எல்லாத் தவளைகளும் கோபுர உச்சியைத் தொடுவது சாத்தியமற்றது என எண்ணி இடையிலேயே விலகிக் கொள்ள, அந்தச் சின்னஞ் சிறிய தவளை மட்டும் உச்சியை நோக்கி முன்னே றிக்கொண்டு இருந்தது. சில வினாடிகளில் உச்சியை தொட்டு வெற்றியும் கண்டது. அனைவரும் வியந்து போய் எப்படி அந் தச் சிறிய தவளை யினால் மட்டும் முடிந்தது என வினாவினார்கள்

அப்போது தான் தெரிந்தது, கோபுர உச்சியைத் தொட்ட அந் தத் தவளைக்கு காது கேட்காது என்று. முடியாதவர்கள், அவர் களால் முடியாததை உன்னாலும் முடியாது என்று சொல்லுவார்கள். சொல்லுபவர்கள் சொல்லட்டும். அவர்களிடம் நீ, செவிடாக இருப்பதே சில நேரங்களில் பொருத்தமானது, உன் காதில் சங்கே ஊதினாலும் நீ உன் வழி செல் . வெற்றி உனக்கே.

ஒன்று எண்ணுவோம்

ஒன்று ஒன்று
ஒன்று என்று
இன்று எண்ணுவோம்
நன்று எண்ணுவோம்.

தலை ஒன்று
நெற்றி ஒன்று
மூக்கு ஒன்று
நாடி ஒன்று (ஒன்று என்று
இன்று எண்ணுவோம்)

வாய் ஒன்று
கழுத்து ஒன்று.
வயிறு ஒன்று
முதுகு ஒன்று (ஒன்று என்று
இன்று எண்ணுவோம்.)

அப்பா ஒன்று.
அம்மா ஒன்று.
வெற்றி ஒன்று.
பற்றுவோம் தொடர்ந்து.
(ஒன்று என்று இன்று
எண்ணுவோம்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரபின் அஸ்தமனம் ஆரம்பம்:

லிபியாவில் நடப்பது என்ன?

நீலன்

அரபு வசந்தம் வீசத் தொடங்கியதும் நேட்டோப்படைகள் குண்டு மாரி பொழிய கேணல் மும்மர் கடாபியின் ஆட்சி லிபியாவில் கவிழ்க்கப்பட்டது. நீதிக்குப் புறம்பான வகையில் கடாபியும் கொல்லப்பட்டார். உலகிலேயே சிறந்த சமூக நலக் கொடுப்பனவுகளுடன் கடாபி ஆட்சி புரிந்து வந்த லிபியா இப்போது பிளவுபடும் துர்ப்பாக்கிய நிலையை அடைந்துள்ளது.

அங்கு வாழும் இனக் குழுமங்கள், ஆயுதம் ஏந்திய குழுக்கள் என பல அமைப்புகள் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன.பலவீன மான நிலையில் இருக்கும் லிபிய மைய அரசுக்கு எதிராக எண்ணெய் வளம் மிக்க பிராந்தியங்களின் மக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

அதன் விளைவாக , லிபிய வரலாற்றிலேயே முதன் முறையாக மக்களாட்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் அலிஜெய்டன் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டார். அவரும் ஊழல் தொடர்பான விசாரணைக்கு அஞ்சி நாட்டை விட்டு ஓடி விட்டார்.

மொத்தத்தில் லிபியாவில் அரபு வசந்தம் இப்போது அரபு அஸ்தமனமாக மாறி விட்டது. லிபிய அரசமைப்புச் சபைக்கான தேர்தலில் ஜூந்தில் ஒரு பகுதிக்கு மேலான உறுப்பினர்களை தெரிவு செய்ய முடியாத நிலைஏற்பட்டுள்ளது. தேர்தலின் போது நடைபெற்ற வன் முறைகளே இதற்குக் காரண மாகும் .

லிபியா ஆறரை மில்லியன் மக்களைக் கொண்டது. இதில் ஒன்றரை மில்லியன் பேர் வெளிநாட்டில் இருந்து வந்து குடியேறியவர்கள். லிபியாவில் 140 இனக் குழுமங்கள் இருக்கின்றன. இந்த இனக்குழுமங்களின் அடையாளங்கள் லிபிய மக்களின் கலாசாத்தின் முக்கிய அம்சங்களாகும்.

லிபிய மக்கள் தம் இனக் குழுமங்களின் பெயர்களையே தமது குடும்பப் பெயர்களாகக் கொண்டு வாழ்கின்றனர். இவற்றில் மேற்கு லிபியாவில் ஒரு மில்லியன் பேரைக் கொண்ட 'வார்ஃபல்லா' என்ற இனக்குழுமம் முக்கியமானது. இந்த இனக்குழுமத்தில் மாத்திரம் 52 உட்பிரிவுகள் இருக்கின்றன. கடாபியின் மனைவியும் 'வார்ஃப்ல்லா' என்னும் இனக் குழுமத்தைச் சேர்ந்தவர்.

அதே போன்று மத்திய லிபியாவில் கடாபி என்ற இனக் குழுமம் முக்கியமானது. மும்மர் கடாபி இந்த இனக் குழுமத்தைச் சேர்ந்தவரே. சுருங்கக் கூறின், இந்த இனக் குழுமத்தின் கையிலேயே லிபியா இருந்தது எனச் சொல்லலாம்.

அதே வேளையில் மத்திய லிபியாவில் அல் - மாஹார்கா என்ற இன்னொரு இனக்குழுமமும் உள்ளது. இது கடாபி இனக் குழுமத்துக்கு நெருக்கமானது. கிழக்கு லிபியாவில் ஜீவையா, பானி சலீம், மெஸ்ரத்தா, அல் வாஹீர் ஆகிய இனக் குழுமங்களும் முக்கியமானவை.

கடாபியின் ஆட்சியின் கீழ் இந்த இனக் குழுமங்களிடையே மோதல்கள் இடம்பெறவில்லை. ஆனால் இந்த இனக்குழுமங்களுக் கிடையிலான குரோதத்தை கடாபி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

கடாபிக்கு எதிரான போர் ஆறு மாதங்களாக நீடித்தமைக்கு அவருக்கு எதிரான கிளர்ச்சிக்காரர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையே காரணமாக இருந்தது. அவர்கள் தங்களுக்குள் அடிக்கடி மோதவும் செய்தனர். கடாபியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இடங்களில் கடாபிக்கு பின்னரான ஆட்சிப் போட்டியில் மேற்கு நாடுகளுக்கு ஆதரவானவர்களும் இஸ்லாமிய மதவாதிகளும் கடுமையாக முரண்பட்டனர். ஈரான் மதவாதிகளுக்கு உதவியது. ஈரானின் நீண்டகால கனவில் முக்கியமானது லிபியா, எகிப்து ஆகிய நாடுகளைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதேயாகும்.

அத்துடன் சவூதி அரேபியாவின் சில பிரதேசங்களை ஈரான் கைப்பற்றி தனது பொருளாதார வலிமையையும் மேம்படுத்த திட்டமிட்டுள்ளது. ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் போன்ற இஸ்லாமிய விடுதலைப் போராட்ட அமைப்புக்களுடனும் ஈரான் நெருங்கிய தொடர்பை பேணி வருகிறது. அவர்களுக்கு நிதி மற்றும் படைக்கல உதவிகளையும் வழங்கி வருகிறது. இவை இரண்டும் ஷியா முஸ்லிம்களின் அமைப்புகளாகும். இதேவேளை, அல்-கெய்டாவுக்கும், ஈரானுக்கும் பகைமை எனக் கருதப்படுகிறது. ஆனால் அல் -கெய்டாவுக்குத் தேவையான நிதி கட்டாரிலிருந்தும், குவைத்தில் இருந்தும் ஈரானூடாகவே செல்கிறது.

லிபியா, எகிப்து, எதியோப் பியா ஆகிய மூன்று நாடுகளும் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் எனத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது ஈரான். ஈரானில் பயிற்சி பெற்ற அல் - கெய்டாவினரே எகிப்தில் ஊடு ருவி இருப்பதாக எகிப்தியப் பொலிஸார் கூறுகின்றனர்.

லிபியா, எகிப்து, எதியோப் பியா ஆகிய மூன்று நாடுகளும் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் எனத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது ஈரான். ஈரானில் பயிற்சி பெற்ற அல் - கெய்டாவினரே எகிப்தில் ஊடு ருவி இருப்பதாக எகிப்தியப் பொலிஸார் கூறுகின்றனர்.

2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நைஜீரியாவில் ஈரானில் தயாரான ஆயுதங்களை அல்-கெய்டாவினர் கடத்திச் செல்வதும், யேமனிலும், ஈரானில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைச் செலுத்திக்களை அல் - கெய்டா பாவிப்பதும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை யாவும் ஈரானுக்கும் அல்-கெய்டாவுக்கும் இடையில் உள்ள பிணைப்பையே காட்டுகின்றன.

இதற்குப் பதில் உபகாரமாக அல்-கெய்டா ஈரானில் எந்தவிதத் தீவிரவாத நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை என்ற உடன் பாடு இருக்கிறது. ஈரானுக்கும் அல்-கெய்டாவுக்கும் பொதுவான எதிரி அமெரிக்காதான். இதனால் அமெரிக்காவுக்கு எதிராக அல்-கெய்டாவும், ஈரானும் இணைந்து செயற்படுவதற்கான ஆதாரங்கள் தற்போது வெளிவரத்தொடங்கியுள்ளன.

ஈரான் இப்போது எகிப்திலும் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டது. எகிப்தில் கிளர்ச்சியில் ஈடுபடும் மொஹமட் முர்ஸீன் ஆதரவாளர்களுக்கு ஈரான் உதவுவதாக நம்பப்படுகிறது. அத்துடன் அல்-கெய்டாவும் எகிப்தில் ஊடுருவி உள்ளது. லிபியாவிலும் இதே நிலைமை தான். ஈரானும் , அல்- கெய்டாவும் அங்கு தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றன. ஆனால் வேடிக்கை என்னவென்றால் இந்த நாடுகளில் எல்லாம் ஓரணியில் நிற்கும் ஈரானும், அல்- கெய்டாவும் சிரியாவில் எதிர் அணிகளாக மோதுகின்றன.

இதேவேளை லிபியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள சைரெனைக்கா லிபியாவில் இருந்து தன்னாட்சி பெற முயல்கின்றது. லிபியாவில் உயர்தர எண்ணெய் வளத்தில் எண்பது சதவிகிதம் சைரெனைக்காவில் இருந்தே கிடைக்கின்றது. லிபிய மக்கள் தொகையின் மூன்றில் இரண்டு பங்கினர் தலைநகர் திரிப் போலியிலும் ஃபெசான் மாகாணத்திலும் வசிக்கின்றனர்.

சைரெனைக்கா தனிநாடாகப் பிரிந்தால் அங்கிருக்கும் உலகிலேயே ஐந்தாவது பெரிய எண்ணெய் வளம் அதை உலகில் உள்ள மிகவும் செல்வந்த நாடுகளில் ஒன்றாக ஆக்கிவிடும். அத்துடன் எஞ்சிய லிபியாவை

உலகிலேயே வறிய நாடாக மாற்றும் . சைரெனைக்கா தனக்கு என ஒரு மைய வங்கியையும் உருவாக்கி உலக நாடுகள் தம்மை அங்கீகரிக்கும் படி பரப்புரை செய்யவென ஒரு கனடிய நிறுவனத்தின் சேவையையும் பெற்றுள்ளது. சைரெனைக்கா எண்ணெய் ஏற்றுமதி செய்வதைத் தடுக்க லிபிய அரசு சைரெனைக்காவின் மீது ஒரு கடல் முற்றுகையைச் செய்துள்ளது.

லிபியா பிளவுபடாமல் தடுக்கவும் லிபியாவில் அமைதியை நிலை நாட்டவும் லிபியாவின் பொதுத் தேசிய சபை பெரும் முயற்சி எடுத்து வருகின்றது. அதன் ஓர் அங்கமாக லிபியாவின் தற்காலிகப் பிரதமராக அப்துல்லா அலி -ரின்னியை நியமித்துள்ளது. அவரது பதவிக்காலம் இரு வாரங்களுக்கு ஒரு தடவை நீடிக்கப் படுகின்றது. லிபியாவைப் பிளவு படாமல் தடுக்கக் கூடியதாகவும், ஆயுதங்களை ஏந்திய குழுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொலைகள் செய்வதைத் தடுக்கக் கூடியதாகவும் ஓர் அமைச்சரவையை அவர் உருவாக்க வேண்டும் என அவருக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இடியப்பச் சிக்கலை விடவும் மோசமான நிலையில் உள்ள லிபியாவை உள்நாட்டு சக்திகளிடம் இருந்தும், ஈரான், அல்-கெய்டா போன்ற வெளிச்சக்திகளிடம் இருந்தும் அந்த நாட்டை மீட்டெடுப்பதென்பது இயலாத காரியமே. எல்லாமே கையை மீறிச் சென்றுவிட்டன. கண் முன்னே அரபின் அஸ்தமனம் நிகழத் தொடங்கிவிட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தோற்றவர்கள் பேசினால்...

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் தமிழகத்தில் அமைதியாக நடந்து முடிந்துவிட்டது. இனித் தேர்தல் முடிவுகளுக்காக காத்திருக்க வேண்டியதுதான். இந்த நிலையில் தேர்தலில் தோற்றால் தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் என்ன சொல்வார்கள் என்று ஒரு சிறு கற்பனை.



கருணாநிதி (தி.மு.க):

உடன்பிறப்பே... தேர்தலில் தோல்வி அடைந்தாலும் மாற்றார் பொறாமை கொள்ளும் அளவுக்கு கழகம் பெற்ற வாக்குகளின் சதவிகிதம் அதிகரித்துள்ளது. ஜெயலலிதா மற்றும் பாரதிய ஜனதாவின் மாய்மாலங்களையும், தேர்தல் ஆணையத்தின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளையும் மீறி நமக்கு இந்த வாக்குகள் கிடைத்துள்ளன என்பதை நீ நினைத்துப் பார்க்கவேண்டும்.

இந்த வாக்குகள், 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் கழகம் ஆட்சிக் கட்டிலில் அமருவதற்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளன. நாம் தோற்றாலும் மத்தியில் மதச்சார்பற்ற அரசு அமையவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அப்படி அமைந்தால் நான் மகிழ்ச்சியடைவேன்.

ஜெயலலிதா (அ.தி.மு.க):

வாக்குப்பதிவு இயந்திரங்களில் மத்திய அரசு செய்த சதியால்தான் நமது கட்சி தோற்கடிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்தத் தேர்தலை செல்லாது என்றும், மறுதேர்தல் நடத்தக்கோரியும் கழகத்தின் சார்பில் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்படும்.

மேலும் கழகத்துக்கு எதிராக தமிழகத்தில் செயற்கை மின்வெட்டை நிகழ்த்தியவர்கள் தூக்கி எறியப்படுவார்கள் என்றும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தோல்வியைத் தொடர்ந்து அமைச்சரவையில் செய்யவேண்டிய மாற்றங்களைக் குறித்து ஆலோசனை நடத்த நான் உடனடியாக கொடநாடு புறப்பட்டுச் செல்கிறேன்.

ஞான தேசிகன் (காங்கிரஸ்):

பத்தாண்டு கால காங்கிரஸ் ஆட்சிக் கால சாதனைகளையும் இலங்கைத் தமிழர்கள் மற்றும் இந்திய மீனவர்கள் பிரச்சினைகளில் காங்கிரஸ் எடுத்த நிலைப்பாட்டையும் மக்கள் புரிந்து கொள்ளத் தவறி விட்டார்கள். மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம்.

2016 இல் காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் தனித்து ஆட்சி அமைக்க அனைத்து முயற்சிகளையும் செய்வோம். காங்கிரஸ் கட்சியை யாரும் தனிமைப்படுத்த முடியாது என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்.

விஜயகாந்த் (தே.மு.தி.க):

நான் பாரதிய ஜனதாவுடன் கூட்டணி அமைக்க விரும்பவில்லை. என் ஊழல் எதிர்ப்பு மாநாட்டில் தொண்டர்கள் விரும்பினார்கள் என்ற காரணத்தால் கூட்டணி அமைத்தேன். ஆனால், இந்தக் கூட்டணியை பெரும்பான்மையான மக்கள் விரும்பாத காரணத்தால் தோற்றோம். எனவே 2016 தேர்தலில் மக்களுடனும் தெய்வத்துடனும் கூட்டணி அமைத்து வெற்றி பெறுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ராமதாஸ் (பா.ம.க):

இந்தக்கூட்டணி தோற்கும் என்று எனக்கு முன்பே தெரியும். எனவேதான் நான் எந்தவொரு கூட்டணிக் கட்சிக்கும் ஆதரவாகப் பரப்புரை செய்யவில்லை. எனவே வருங்காலங்களில் எந்தவொரு தேசிய கட்சியுடனும் திராவிட கட்சிகளுடனும் மண்ணுள்ளளவும் விண்ணுள்ளளவும் கூட்டு சேரமாட்டோம்.

பொன். இராதாகிருஷ்ணன் (பா.ஜ.க):

கடந்த காலங்களைப்போல் அல்லாமல் பாரதிய ஜனதாவுக்கு தமிழகத்திலே ஒரு நல்ல அடித்தளம் கிடைத்துள்ளது. எனவே அதை மேலும் பலப்படுத்தி 2016 தேர்தலுக்கு தயாராவோம்.

தா.பாண்டியன் (கம்யூனிஸ்ட்):

இடதுசாரி இயக்கங்கள் தோற்றாலும் கணிசமான வாக்கு வங்கியைப் பெற்றுள்ளோம். பாடம் கற்றுக்கொள்ள வேண்டியவர்கள் இந்தத் தேர்தலில் பாடம் கற்றுக்கொண்டிருப்பார்கள். நாங்கள் கிள்ளுக்கீரைகள் அல்ல என்பதை இந்தத் தேர்தல் நிரூபித்துவிட்டது. எந்த நிலையிலும், கம்யூனிஸ்ட் இயக்கங்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும்.

முகாமையாளர்களைப்பற்றியும், அவர்களது முகாமைத்துவப் பண்புகளைப் பற்றியும் பல சம்பவங்களை பம்பல் பக்கத்திலை பகிர்ந்து கொண்டனாங்கள்.

இந்த முறையும் எங்கடை ஒரு நிர்வாகியின் அனுபவ முறையைப் பற்றிப் பார்ப்பம். அவர் கல்விப் பணிப்பாளராக இருந்தவர். தற்கால வலயக் கல்விப் பணிப்பாளராகவன்றி, பிரதேசக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றினவர். பரீட்சைக் கூட்டங்கள் நடத்தும் போது சொல்ல வேண்டியவற்றை நகைச்சுவையுடன் மனதிற் பதியுமாறு கூறுவார்.

ஒரு முறை பரீட்சை மண்டபத்துக்கு வந்தார். பரீட்சை மண்டபம் மேல் மாடியில் அமைந்திருந்தது. பாடசாலை வலைப்பந்து மைதானத்துயால்தான் மண்டபத்துக்கு வரவேண்டும். மண்டபம் ஒழுங்கு படுத்தப்படும்போது, மண்டபம் மிகத் தூய்மையானதாக இருக்க வேண்டும் என்பதிற் கரிசனை கொண்டவர் அந்தக் கல்விப் பணிப்பாளர். மண்டபத்திற்கான சிற்றாழியரின் பணிகளில் ஒன்று மண்ட வளாகத்தைத் தூய்மையாக வைத்திருப்பதுமாகும். அதனை மேற்பார்வை செய்வது, மண்ட பிரதான மேற்பார்வையாளரது கடமை.

டிசெம்பர் மாதத் தேர்வு. மழைகாலம். ஒரு நாள் கல்விப் பணிப்பாளர் மண்ட ஒழுங்கினை மேற்பார்வை செய்ய வந்த போது, மேல் மாடிக்கு ஏறிச் செல்லும் படிக்கட்டு

கீரை விளைஞ்சுதா?

களில் செம்மண் சேறும் சகதியும் காணப்பட்டது. மண்ட மேற்பார்வையாளரிடம், பரீட்சை தொடங்கி, ஒரு கிழமையாகிவிட்டது. இன்னும் ஒன்று கிழமைகள் உள்ளன.

"உந்தப் படியிலை கொஞ்ச கீரை விதை தூவியிருந்தால் நல்ல விளைச்சலாக இருந்திருக்கும். ஒன்றுக்கு இரண்டு வருமானமாகவும் இருந்திருக்கும். பியோன்மாரும் சோதனை தொடங்கிவிட்டால் சும்மாதானை இருக்கிறவை. அவையைக் கொண்டுவிச்சு களையும் புடுங்குவிச்சிருந்தால் விளைச்சல் அமோகமாக இருந்திருக்கும்" என்றார். மேற்பார்வையிட வந்திருந்த தேர்வு சேகரிப்பு உத்தியோகத்தராக பணியாற்றிய கல்விப் பணிப்பாளரின் முகத்தில் ஈயும் ஆடவில்லை. சிற்றாழியர்களை நியமிக்காது, அவர்களுக்கான கொடுப்பனவைப் பொறுப்பதையும், சிற்றாழியர் இன்மையால் மண்டபத் துப்பரவுப் பணிகள் முடங்கிப் போயிருப்பதையும் மிகச் சூசகமாக அவர் சொல்லி வைத்தார்.

சொல்லி வைத்தது மட்டுமன்றி ஏனைய மண்டபங்களைப் பார்வையிடச் செல்லும்போதும், அவ்வவ் மேற்பார்வையாளர்களிடம் தான் சொல்லிவிட்டு வந்த கதையையும் சொல்லுவார். அவர்கள் சென்று குறித்த மேற்பார்வையாளரிடம், "கீரை



விளைஞ்சுதா?" என்று கேட்டு வைப்பார்கள். அது ஒருவகை முகாமைத்துவ உத்தி.

இன்னுமொரு கல்விப் பணிப்பாளர் ஒரு முறை விடைத்தாள் சேகரிப்புப் பணிக்காக இணைப்பு நிலையத்துக்குச் சென்றிருந்தார். வார முடிவில்தான் சேகரிப்புப் பணி தொடங்கும். ஆனாலும் வாகன வசதியிருந்தபடியால், இடையில் ஒரு நாள் சென்று சேரிப்புப் பணியை மேற்கொள்ளத் தீர்மானித்து வந்துவிட்டார்.

இணைப்பு நிலையத்துக்கு அருகில் வாகனம் செல்ல முடியாது. ஆகவே வாகனத்தைத் தொலைவில் நிறுத்திவிட்டு, பின் மண்டபத்தில் உள்ள இணைப்பு நிலையத்துக்கு இறங்கி நடந்து சென்றார்.

இணைப்பு நிலையத்தில் சிற்றாழியர் மட்டும் நின்றார். விடைத்தாள் பொதிகளை அலுமாரியில் வைத்துப் பூட்டிவிட்டு சிற்றாழியரைக் காவலுக்கு நிறுத்திவிட்டு, இணைப்பு உத்தியோகத்தர், "இனி இங்கை ஆர் வரப் போகிறார்கள்?" என்று விட்டு பொழுது பட்டதும், அப்படி, இப்படி கொஞ்சம் 'தாக சாந்தி' செய்யச் சென்று விட்டார் போலும். வந்திருந்த பணிப்பாளர் வெறுங்கையுடன் தமது வாகனத்துக்குச் செல்ல முடியாத நிலை.

கல்விப்பணிப்பாளர் வந்த வாகனத்தில் அவருக்கு மேற்பட்ட ஓர் உயர் அதிகாரியும் வந்திருந்தார். உயர் அதிகாரிகளது உறவினர் தரிசிப்புக்களும் இத்தகைய பணியின் போது இடம்பெறுவது ஒன்றும் புதினமல்லவே! அந்த உயர் அதிகாரி, "பொதி எங்கே?" என்று கேட்டுவிடுவார் என்ற பயம் கல்விப் பணிப்பாளருக்கு. ஒன்றும் செய்ய முடியாத நிலையில், வெறும் சாக்கு ஒன்றை எடுத்து, அதனுள், பழைய கடதாசி அது இது என்று போட்டு நிரப்பி பொதியைச் சுமந்து வந்து வாகனத்தில் ஏறினார். அந்த முடையோடு வாகனம் பறந்தது. அப்படித்தான் சில அதிகாரிகள் தம்மையும் காப்பாற்ற வேண்டும். மற்றவர்களையும் காப்பாற்ற வேண்டும். சமயோசிதமாக நடந்து நிலைமையைச் சமாளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணாங்கள் முடிவதில்லை

சிறுகதை

வழமைபோல் அன்றும்நிறை மாதக் கர்ப்பிணி போல் மினிபஸ் பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து ஆமை வேகத்தில் கைதடிச்சந்தியை அண்மித்துக் கொண்டிருந்தது. நீண்ட தூர பஸ்கள் பல சென்றாலும் அவற் றைப் பார்த்து குறுந்தூரப் பயணிகள் கொட்டாவி விட்டுக் கொண்டு கொடிகாமம் பஸ்ஸைப் பார்த்துக் கொண்டு நிற்க வேண்டிய துர்ப் பாக்கியம். மாணவர்களாகிய எமக்கு இன்னமும் சொல்ல வேண்டியதில்லை. பயணத் துன்பம் தொடர்ந்து கொண்டே இருந்தது. நானும் எனது நண்பர்கள் இருவரும் இன்னும் எமது பாடசாலை மாணவர்கள் கிட் டத் தட்ட இருபது பேர் வரை கைதடிச் சந்தியில் பஸ்சுக்காக காத்திருந்தோம்.

"ஓடிவாங்கோ, ஓடிவாங்கோ சாவகச் சேரி, கொடிகாமம், உசன் ஓடிவாங்கோ" நடத்துனரின் அவசர அழைப்பு போகும் வேகத்தில் அதற்கு ஓடி ஏற வேண்டுமே எண்ணியவாறே பஸ்ஸில் நுழைய முற் பட்டேன். உள்ளிருந்து இறங்க முற்பட்ட வர்கள் இன்னும் இறங்கியதாகத் தெரிய வில்லை. "இறக்கம், இறக்கம்" என்ற சத்தம் மட்டும் வந்து கொண்டிருந்தது.

"சின்னப்பிள்ளைகள் பின் னால பஸ் வருகுது. அதில் வாங்கோ. பெரியாக்கள் ஏறுங்கோ. புத்தகப் பையைக் கழட்டி இருக்கிற ஆக்க ளிட்டக் கொடுங்கோ, தம்பி உனக்கு சொன்னது விளங்கேல்லை யோ. விளங்காட்டி இறங்கு" நடத்துநர் திறந்த வாயை மூடாமலே பிரசங்கம் பண்ணிக் கொண்டி ருந்தார் . காலை எழும்புவதில் இருந்து எத்தனை அர்ச்சனை யைக் கேட்டாச்சு . இது எல் லாம் இப்போது பழகி விட்டது. சனம் இல்லாவிட்டால் வாவா என்று குஞ்சுகுருமன் ஒன்றையும் விடாமல் ஏற்றுவதும், ஏன்தொலை வில்ஒழுங்கையில் வருபவர்களைக் கூடவாவா எனநின்றுஏத்து வதும் மாறாக பஸ் நிறைந்து விட் டால் குழந்தை, வயோதிபர்களை ஏற்றாது போவதும் எங்கள் ஊர் பஸ்களின் சிறந்த மனிதாபி மானமாகவே இருந்து வருகின் றது. எத்தனை நாள் பஸ்களின் தயாள மனத்தால் நேரம் பிந்தி பாட சாலை வகுப்பறையில் நுழைந்து, எத்தனை ஏச்சுப் பேச்சுக்கள் நேரத்தின் பெறுமதி எல்லாம் இங்கே கண்மூடித்தனமாகச் செலவாவதை யார் எண்ணிப் பார்க்கி றார்கள்? ஒழுங்காக ஒரு பஸ் நேர காலத்துக்கு மாணவர்களுக்கென்று விடலாமே. பருவ காலச் சீட்டுக்கள் பக்குவ மாகப் தூங்கிக் கொண்டிருந்தன புத்த கப் பையில். நாம் அரச பஸ்க ளுக்காகத் தூங்க வேண்டியது தான்.

உள்ளே நுழைவதற்கு இடமின்றி ஒரு கையால்எட்டிக் கம்பியைப் பிடித்துதொங்கிக் கொண்டி ருந்த என்னை நடத்துநர் உள்ளே தள் ளிக்கெண்டிருந்தார். 'தம்பிபொ லிஸ், 'பொலிஸ்' வீணா எங்களை 'பைன்' கட்டப் பண்ணா தேங்கோ"

எப்படியோ வாசலில் நின்றவர்களை எல்லாம் உள்ளே நுழை த்து விட அவர் எத்தனித்துக் கொண்டிருந்தார். என் மனதுக்குள் ஒரு விடுதலை உணர்வு. சனிக்கிழமையில் இருந்து இனிமேல் பஸ்ஏறும் வேலையில்லை. என் துன் பத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க என் அம்மாவின் அதிக இரத்தம் வெயிலில் காய்ச்சப்பட்டு இருக் கின்றது என்பதும் எனக்குத் தெரியும்.அப்பா இறந்து நான்கு வருடங்களில் என் அம்மா எலும்பும் தோலுமாகப் போய்விட் டார். வயலில் வேலை செய்து என் குடும்பத்தைத் தாங்கி,...

பாவம் எல்லாம் என்னில் வைத்த நம்பிக்கை எப்படியும் படித்து நல்ல நிலைக்கு வருவேன் என்று நேர்த்தி. கடவுள் அதைக் காப்பாற்ற வேண்டும்.

நடந்து திரியும்போதெல்லாம் போவோர் வருவோர் தருகின்ற இலவசப் போதனை "தம்பி ஒரு சைக்கிள் வாங்கன். எத்தனை நாளைக்குத் தான்நடந்துதிரியப் போகிறாய்?" என்பது தான். அப்பா உயிரோடு இருந்தி ருந்தால் நிச்சயம் என் கா.பொ.த. சாதார ணதர பரீட்சைப் முடிவு வர முன்னரே வாங்கித் தந்திருப்பார். அம்மா சைக்கிள் வாங்கித் தருவதாகக் கூறிய செய்தி பல்கலை அனுமதி கிடைப்பதை விட என்னை மகிழ வைத்தது. சிறுகச் சிறுகச் சேர்த்து சீட்டுப்பிடித்து அம்மாவின் முயற்சி யாரால் முடியும்? சின்னச் சின்னச் தேவை களுக்கெல்லாம் நடந்தே சென்று காரியம் முடித்தாலும் தூர இடங்களுக்குச் செல்வ தானால் கணேஷிடம்செல்லிவைப்பேன். அவன்தன் அப்பாவின் சைக்கிளை வாங்கி வந்துவிடுவான். கணேஷ் கூட இனிமேல் என்னுடன் சைக்கிளில் தான் வருவான். கைதடி நூலகம் தான் நாம் அதிக நேரம் பயனைப் பெறும் ஒரே இடம். ரியூ சனைப் எட்டிப் பார்க்காது பாடசாலைப் படிப்புடன் கை கொடுக்கும் ஒரே அறிவுத் தொகுதி அது. என் நண்பர்களுடன் பய னுடன்கழியும் இடமும் அது தான். நேரம் எட்டு மணியாகிக் கொண்டிருந்தது. 7.20 க்கு பஸ்ஏறி இன்னமும் இறங்கிய பாடில் லை. இன்றும் காலைப்பிராத்தனை நேரம் தான் போய்ச் சேருவோம். சாவ கச் சேரி பஸ் நிலையத்தில் தேவையில்லா

உள்ளே நுழைவதற்கு இடமின்றி ஒரு கையால் எட்டிக் கம்பியைப் பிடித்து தொங்கிக் கொண்டிருந்த என்னை நடத்துனர் உள்ளே தள்ளிக் கெண்டிருந்தார். " தம்பி பொலிஸ், பொலிஸ் வீணா எங்களை பைன் கட்டிப் பண்ணாதேங்கோ"

மலே பஸ்ஸை வைத்துக் கொண்டு இருந் தாலும் என்ன செய்ய முடியும். மாணவர்களின் அவசரத்தை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. எப்படியோ பணத்தைப் பெற்றுக் கொண்டு தாம் செல் லும் நேரம் தான் உங்கள் நேரம் என்பது போல் சொல்வார்கள். காலைப் பிரார்த் தனை முடிந்து வகுப்புக்கள் தொடங்கி விட்டன. நாம் வாசலில் 'பல கேள்விக் கணைகளுக்கு முகங்கொடுத்து வகுப்பறைக்கு நுழை வதற்கிடையில் மனம் ஏதோ வேறொரு உலகில் இருந்து வந்ததைப் போல் பிரமித்துக் கொண்டிருந்தது. வழமைக்கு மாறாக மனதில் ஒரு இனம்புரியாத பய உணர்வு மனதில் இருந்து கொண்டே இருந்தது. மூன்றாம் பாடவேளை, அதிபர் அலுவ லகத்தில் இருந்து எனக்கு ஒரு அழைப்பு வந்தது. காரணமில்லாமல் பயம் மீண்டும் பற்றிக் கொண்டது. ஏதா வது பிழை நடந்து விட்டதா? ஆசிரி யரிடம் கூறி விட்டு அலுவலகத்தை நோக்கி விரை வாக நடந்தேன். பிரதியதிபர் தான் கூறி னார். "அம்மாவுக்கு ஏதோ சுகமில்லையாம். உம்மை வரட்டாம். தகவல் தந்தது உமது பெரியம்மா" ஏதுவும் செவிகளில் ஏற வில்லை. "சேர் ..."நம்ப முடியாது. திரும் பவும் கேட்டேன். பயப்படத் தேவையில்லை. அவை பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போயின மாம். உம்மை அங்கு வரட்டாம். இருள் சூழ்ந்து உலகம் அழியப் போவதா சக் கூறினார்களே. அது இக்கணமே நடந்தது போல் என் கண்கள் இருண்டன. மனம் "கடவுளே காப்பாற்று காப்பாற்று" என ஓலமிட்டது. மீண்டும் பஸ்சுக்காய் காவல். மீண்டும் மினிபஸ். அதேநெரிசல். எனினும் என்னை யாரும் நெரிப்பது தெரியவில்லை. மனம் நெரிந்துகொண் டிருந்தது. அவசர சிகிச்சைப் பிரிவில் என் அம்மாவைச் சேர்த்திருப்பதாகப்பெரியம்மா ஆஸ்பத்திரி வாசலில் நின்று சொன் னார். "என்ன நடந்தன்"

"வயலில் புல்லுப்பிடுங்கி விட்டு நடராசா வீட்டில் சீட்டுக்காசு வேண்டிக் கொண்டு வந்திருக்கிறாள். மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர் அடிச்சு விழுத்திப் போட்டு காசையும் பறித்துக் கொண்டு ஓடிட்டாங்கள். பின்னால வந்த ஒரு சின்னப்பிள்ளை தான் கண்டு சனத்தைக்கூட்டி வந்து காட்டினது. அதுக்குப் பிறகு தான் ஒட்டோபிடித்து இங் கே வந்தன். மயங்கிப் போனாள். மயக்கம் தெளிஞ் சாத் தான் என்ன நிலைமை என்று தெரி யும்" கண்ணீர் மல்கச் சொல்லிக் கொண்டி ருந்தார். என் கண்முன் உலகம் அழி வது தெரிந்து கொண்டிருந்தது. நீதி நியாயம் எல்லாம் மரணித்த பின் மனிதர்கள் மட் டும் உயிரோடு இருந்து என்ன செய்வது. களவு எவ்வளவு சுலபமான தொழில். " அம்மா... அம்மா... அழுது கொண்டு அங் கேயே அமர்ந்து கொண்டேன். அம்மா வுக்கு செயற்கைச் சுவாசம் வழங்கப் பட்டிருந்தது. அம்மா மெல்ல மெல்லக் கண் விழித்து மூடிக்கொண்டிருந்அம்மா கையை அசைத்து என்னைக் கூப்பிடுவது போல் இருந்தது. "தம்பி" அம்மாவாய்திறந்து கூப்பிட்டார் ."தம்பி.... சைக்கிள்...." அம்மா வின் கையைப் பிடித்துக் கொண்டேன். "அம்மா சைக்கி ளும் வேண்டாம். ஒன்றும் வேண் டாம். நீங்கள் சுகமாக வீட்டை வாங்கோ. அதுவே போதும்" என்றேன். அம்மாவின் கண்களில் இருந்து கண் ணீர் வழிந் தோடி யது. இது வரை எம்முடன் பயணித்த அம்மா இன்னும் எம்முடன் பயணிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மார்புக்கச்சை அரும்பொருள் காட்சியகம்

சுகாதாரத் தொண்டரான சென் குயிங்சு என்ற 45 வயது டை சீனப் பிரஜை ஒருவர் உலகிலே முதன்முதலில் மார்புக்கச்சை அரும்பொருள் காட்சியகம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டுள்ளார்.

இதற்காக இவர் கடந்த இரண்டு தசாப்தங்களாக 5000 இற்கும் மேற்பட்ட மார்புக்கச்சைகளை சேகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனாவின் ஹெனான் மாகாணத்தில் அமைந் துள்ள தனது கிராமத்தில் பெண்களுக்காக திறக்கப்படவுள்ள மார்புக்கச்சை அரும்பொருட் காட்சியகத்துக்கு இன்னும் இரண்டு மடங்கு மார்புக்கச்சைகளை சேகரிக்க வேண்டுமென அவர் கூறியுள்ளார்.

'உடல் நலன் குறித்த அறிவை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டியது எனது கடமை. பெண்களின் உடல் நலனில் விசேடமாக கவனம் செலுத்துவதில் அதிக அக்கறை கொண்டுள்ளேன்.

பெண்கள் அணியும் மார்புக்கச்சைகளில் அதிக கவனம் செலுத்துகின்றேன். இந்த அரும்பொருட் காட்சியகத்துக்கு அதிக மான மார்புக் கச்சைகளை எனது கல்லூரி நண்பிகளே அன்பளிப்பு செய்தனர்.

எனது இத்தகைய செயற்பாட்டில் எனது நணபர்களுக்கு சற்றும் விரும்பம் இல்லை. ஆனால், இதனை நான் புதிய விடயமாகக் கருதவில்லை' என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

பழமையான கிராமம் கண்டுபிடிப்பு

அமெரிக்க தொல்லியல் துறை ஆய்வாளர்கள், ஆளில்லா விமானத்தை பயன்படுத்தி, நியூ மெக்சிகோவில், ஆயிரம் ஆண்டுகள் பழமையான ஒரு கிராமத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதுதொடர்பாக, புளோரிடா பல்கலைக்கழக பேராசிரியர், ஜான் கென்ட்னர் கூறுகையில்,

நியூ மெக்சிகோவில், சாகோ கென்யா பகுதிக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தக் கிராமத்துக்கு, "லூ ஜே' என்று, தொல்லியல் துறை பெய ரிட்டுள்ளது. பண்டைய அமெரிக்க நாக ரிகத்தை வெளிப்படுத்தும் இந்த கிராமம் குறித்த தகவல், 1970ஆம் ஆண்டு தெரிந்தாலும், இதுவரை புகைப்படம் எதுவும் கிடைக்கவில்லை.



தற்போது, ஆளில்லாவிமானத்தின்மூலம் இந்த கிராமத்தின் புகைப்படம் கிடைத் துள்ளது.

60 வீடுகள் கொண்ட இந்த கிரா மத்தை நிர்வகித்த மூதாதையர், "கிவா'என்றழைக்கப்பட்டார்.

இவர், பூஜைகள் செய்பவராகவும், கிராம கூட்டத்தில் முக்கிய முடிவு களை எடுப்பவராகவும் இருந் தார். இவ்வாறு ஜான் கென்ட்னர் கூறி உள்ளார்.

அழிவை ஏற்படுத்தும் விண்கல்

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த இணையத் தளம் ஒன்று, விண்கலம் தொடர்பான ஆய்வு முடிவொன்றை வெளியிட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு 100 ஆண்டுகளுக்கு முறையும் மிகப்பெரிய விண்கல் ஒன்று பூமியைத் தாக்க வருகிறது என்றும், இந்த முறை பூமியை தாக்கும் விண்கல் ஹிரோ ஷிமா அணுகுண்டுகளை விட ஆபத்தான விளைவுகளைகொண்டுவரும் எனவும் நிரூ பிக்கப்பட்டுள்ளது மேலும் இந்த ஒரு விண்கல் 40 ஹிரோஷிமா அணுகுண்டுகளுக்கு சம மானது என்று தெரிவிக்கப்படுகிறது.

உலகிலேயே மிகப் பெரிய மஞ்சள் நிற வைரக் கல்லை 25 மில்லியன் டொலர்களுக்கு ஜெனிவாவின் சொதேபி நிறுவனம் ஏலத்தில் விடவுள்ளது.

இந்தக் கல் பெரிய மோதிர வடிவில், செய்யப்பட்டு, அதில் மஞ்சள் நிற வைரக்கல் பதிக்கப்பட்டு மோதிர காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு ஏலம்போகவுள்ள வைரக் கல்

இந்த வைரத்தை உடனடியாக விலை கொடுத்து வாங்க வாடிக் கையாளர்கள் தயாராக உள்ளனர். அவர்கள் அதற்கு 15.25 மில்லியன் டொலர்கள் அல்லது 11.18 மில்லியன் யூரோக்களை கொடுத்து வாங்கவும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

ஆயினும், சொதேபி ஏல நிறுவனம், 25 மில்லியன் டொலர்களை எதிர்பார்க்கிறது. இதேபோல், உலகிலேயே மிகப்பெரிய ஒரேஞ் நிற வைரக்கல் சென்ற வருடத்தில், 35.5 மில்லியன் டொலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொழில்நுட்ப வளர்ச்சியின் பரிணா மத்தில் ஒற்றைச் சில்லு இயக்க மோட் டார் சைக்கிள் பாவனைக்கு வந்துள் ளது. இந்த ஒற்றைச் சக்கர மோட் டார்சைக்கிளை தயாரித்து விற்பனைக் கும் விட்டுள்ளது ரைனோ நிறுவனம்.

மாதம் தோறும் 1.28 பில்லியன் பேர் பேஸ்புக்கில்

சமூக வலைத்தளங்களுள் முன்னணியில் திகழும் பேஸ்புக் நிறுவனம் மாதம் தோறும் 1.28 பில்லியன் வரையானவர்கள் பேஸ்புக் தளத்தில் இணைந்திருப்பதாக அதன் காலாண்டு அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த நிறுவனம் 2014ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்கான தனது வருவாய் தொடர்பிலான அறிக்கையினையினையும் வெளியிட்டுள்ளது.

இதன்படி முதலாவது காலாண்டு வருமானமாக 2.5 பில்லியன் டொலர்களைப் பெற்றுள்ளது. இது கடந்த வருடத்தின் முதலாவது காலாண்டு வருமானத்தை விடவும் 72 சதவீத அதிகரிப்பை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் கொள்கலமொன்றில் தலை சிக்கியிருக்க கனடாவின் ஒன்ராறியோ மாநிலத்திலுள்ள வீதியொன்றில் நடந்து சென்ற கரடியொன்றால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து சர்வதேச ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. இதனையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வர வழைக்கப்பட்டனர்.

பறவைகளுக்கான தானியம் வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அந்த கொள்கலனில் உணவைத் தேடி கரடி தலையை நுழைத்தபோதே அதன் தலை பாத்திரத்தில் சிக்கிக்கொண்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்நிலையில் அந்தக் கரடியின் தலையிலிருந்து பிளாஸ்ரிக் கொள்கலனை பொலிஸார் வெட்டி அகற்றியதையடுத்து கரடி அதற்குரிய வனப்பகுதியில் கொண்டு சென்று விடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வெளி